www.tamilarangam.net


# சமர்

கருத்து
மக்களைப் பற்றிக் கொண்டால்
அது சக்தியாக உருவாகும்

இதழ் 12 யூலை /ஆகஸ்ட் அன்பளிப்பு 10F


# கொள்ளைக்காரர்களின் தேர்தல் திருவிழா

பாராளுமன்ற கதிரைக்கான கனவுகளுடன் அதை நோக்கி கொள்ளையர் கூட்டம் எல்லாவிதமான மோசடியும் வன்முறையும், சிறுபான்மை மக்கள் மீதான பேரினவாதமும் கைக்கொண்டு இரத்தத்தில் தீர்த்தம் காண முன்தயாரிப்புக் களுடன் இலங்கையில் தேர்தல் திருவிழா காடையருடன் கூடிய களியாட்ட விழாவாக கொள்ளைக்காரர்களால் கொண்டாடப்படுகிறது .

பேரினவாதியும் ஜனாதிபதியுமாகிய து. விஜேதுங்கா தேர்தல் அறிவித்தலைக் கொடுத்தாரோ இல்லையோ எல்லாவித துரோகிகள் முதல் பேரினவாதி கள் யாவரும் கொடுக்கை கட்டியபடி களத்தில் இறங்கி உள்ளனர்.

மிகப்பெரிய கட்சிகளான யூ. என். பி, எஸ். எல். எவ். பி யும் தமது பேரினவாத மேடைப்பேச்சுக் களுடன், எல்லாவித குழுக்களுடனும் அதிகாரத்தைப் பங்கிட்டபடி, சிறுபான்மை மக்களை ஏலம் விட்டபடி இழந்த சொர்க்கத்தை அடைய தீவிரமாக முனைந்து நிற்கின்றனர்.

இந்த பேரினவாத கட்சியுடன் தமிழ் துரோகிகள் சில இடத்தில் கூட்டாகவும், சில இடத்தில் எதிர்த்தும் தமிழ் மக்களின் பேரால் தமது பைகளை பணம் கொண்டு நிரப்புகின்றனர்.

பேரினவாதக் கட்சிகளோ பல லட்சம் முதல் பைஜிரோ ஜீப்புக்கள் வரை விலை பேசி சிறுபான்மை இனத்தை வாங்கிவிட முனைகின்றனர். ......... தொடர்ச்சி பக்கம் 22 இல்

# மனித உரிமை மிக மோசமாக மீறுகின்ற அரசுகளிற்கு அமெரிக்க அரசு உதவி, ஆதரவு வழங்குகின்றது

**சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை அம்பலமாக்குகின்றது**

மனித உரிமைகளை மோசமாக மீறி அரசியல் எதிராளி களை, மக்கள் போராட்டங்களை நசுக்கும் அரசுகளிற்கு அமெரிக்க அரசு சகல உதவி, ஆதரவு வழங்கி வருவதை சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.
தொடர்ச்சி பக்கம் 3 இல்

# குமார் பொன்னம்பலத்தின் சுத்துமாத்து அரசியல்

ஜி.ஜி.பொன்னம்பலம் முதல் அவர் மகன் குமார் பொன்னம்பலம் வரை உள்ள தமிழ் காங்கிரஸ் அரசியல் என்பது தமிழ் மக்களின் நலன்களை விற்று அதில் பிழைப்பு நடத்தும் ஒரு பிழைப்பு அரசியலே.



1994 ம் ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டு என இனவாதி விஜேதுங்கா அறிவித்தாரோ இல்லை யோ எல்லோரும் தேர்தல் திருவிழாவை கொண் டாட ஒவ்வோர் நாளும் ஒவ்வோர் அறிக்கை விட்டபடி இத் திரு விழாவை கொண்டாட முனைந்து நிற்கின்றனர்.

இதில் குமார் பொன்னம்பலம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் எதிலும் போட்டியிட முடியாது போகவே கொழும்பில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கிழக்கிலும் வன்னியிலும் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபை தேர்த லில் தமிழ் மக்களை வாக்களிக்க வேண்டாம் எனக் கேட்டு வாக்கை சேதமாக்கும்படி கோரி தனது அரசியல் . இந்த இனவாத அமைப்புக்குள் என தெளிவாக்கியவர் இன்று பாராளுமன்ற தேர்தலில் வடக்கு–கிழக்கில் தமிழ் மக்கள் என்ன செய்வது என்பது பற்றி மூச்சுவிடாது .... தொடர்ச்சி 23 பக்கம்

# ருவாண்டாவில் இனப்படுகொலையைத் தொடர அமெரிக்காவின் முயற்சி

ருவாண்டா இனவாத ஆட்சிக்கு எதிராக போராடி வந்த தேசாபிமான முன்னணி பல முனைகளில் வெற்றி பெற்று வந்தனர்.

இதைத் தொடர்ந்து டான்ஸானியாவில் நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து ஹீட்டு இனத்தவரான ..... தொடர்ச்சி பக்கம் 24 பார்க்கவும்

வெளியீடு : தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் (பதிவு செய்யப்பட்டது – 3/16956)

www.tamilarangam.net

## உங்களுடன் சமர்

தமிழீழப் போராட்டம் தீவிரமடைந்து 11 வருடங்கள் கடந்த நிலையில் இன்று தேர்தல் களியாட்ட விழா கொண்டாடப்பட்ட வண்ணம் உள்ளது. ஆனால் இது போன்று பல தேர்தல்கள் பல வேறு பெயர்களில் நடந்தபோதும் இன்று நடைபெறும் தேர்தல் ஈழப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகள் தேர்தலைப் பகிஸ்கரித்த நிலையில் இன்று இத் தேர்தல் புலிகளைப் பலவீனப் படுத்துவதன் ஊடாக தமிழீழப் போராட்டம் சர்வதேச ரீதியாக தனது தார்மீக ஆதரவை இழந்து செல்கின்றது.

வன்னியில் 10 கரு மேற்பட்ட போட்டியாளர்களும் மட்டக்களப்பில் பலமுனைப் போட்டியுடன் இத் தேர்தல் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியில் அதிகூடிய போட்டியாளர்களை கொண்டு இலங்கை பாராளுமன்ற இத் தேர்தல் களம் அமைந்துள்ளது.

ஒரு புறம் இராணுவ வன்முறையும் மறுபுறம் தேர்தலும் என பல குழுக்கள் போட்டியிட முனையும் இந்நிகழ்வு விடுதலைப் போராட்டத்தை பலவீனமாக்கி நிற்கின்றது.

சர்வதேச ரீதியாக இப் போட்டியாளர் களை இனம் காட்டி , தமிழினம் மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட, பேரினவாத கட்சிகளுக்கு இத்துரோகிகள் சுமைதாங்கிகளாக மாறி நிற்கின்றனர்.

கடந்த 50 வருட வரலாறு பேரினவாதம் சிறுபான்மை மக்களை ஒடுக்கிய காலத்தில் பல குழுக்கள் இவ் இனவாதத்துக்கு துணைபோன படி தேர்தல் மூலம் கதிரைச் சுகம் கண்டனர். இன்றும் அதே அரசியலுடன் பல குழுக்கள் நின்று பிழைக்க முனைந்துள்ளனர்.

இந்த நிகழ்வு என்பது சர்வதேச ரீதியாகவும் ஒருபகுதி தமிழ் மக்கள் மத்தியிலும் புலிகளைத் தனிமைப்படுத்தி வைத்துள்ளது. இதன் ஊடாக தேசிய விடுதலைப் போராட்டம் பின்தள்ளப்படும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த இத் தேர்தல் போட்டியாளர்கள் முனைந்து நிற்கின்றனர்.

புலிகளைத் தனிமைப்படுத்தலும், சர்வதேச ரீதியாக இழந்து வரும் தார்மீக ஆதரவுத் தன்மைக்கும் பொறுப்பாளர்கள் இத் தேர்தல் குழுக்கள் மட்டுமல்ல புலிகளும் குற்றவாளிகளே.

புலிகள் நண்பன் யார், எதிரி யார் என்பதை சரியாக இனம் காணத் தவறி நண்பர்களின் மீதான தாக்குத லால் சிலரை எதிரி முகாமுக்குத் தள்ளி விட்டனர்.

இன்று தமிழீழப் போராட்டத்தின் பக்கம் நின்று குரல் கொடுக்கக் கூடிய சக்திகள் மீது தொடரும் புலிகளின் தாக்குதல் மேலும் மேலும் புலிகள் தனிமைப்படவும் பலவீனப்படவுமே வழிசமைக்கும்.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் நண்பர்களைச் சரியாக இனம் கண்டு, அவர்களை அரவணைக்க கோரும் நாம் இத் தேர்தல் வழிமுறையை நிராகரித்து தேசிய விடுதலைப் போராட்டத்தின் சரியான ஆயுதம் ஏந்திய மார்க்கத்தை ஆதரிப்பவர்கள்.

இன்று புலிகள் தேர்தலில் பங்குகொண்டிருப்பின் இத் தேர்தலில் மீண்டும் கூட்டணி போன்ற கட்சிகள் வெல்வதை கண்டிருக்கலாம்.

அந்தளவிற்கு ஆயுதம் ஏந்திப் போராடி இளைஞர்களை இழந்த எந்த இயக்கமும் வெல்ல முடியாத அளவு நிலையே உள்ளது. அந்தளவுக்கு மக்கள் மீது வன்முறை யை இவ் ஈழப்போராட்டம் வழங்கி வருகின்றது.

புலிகளின் தவறான அரசியலின் விளைவாய் துரத்தப்பட்ட முஸ்லீம் மக்களை நம்பி முஸ்லிம் கட்சிகள் தேர்தலில் குதித்துள்ளன. இதனூடாக தவறான முஸ்லீம் கட்சியை வளர்க்கவும், முஸ்லீம் மக்களை சொந்த சுயலாபத்துக்காக முஸ்லீம் காங்கிரஸ் விற்கவும் புலிகள் காரணமாக இன்று அமைநதுள்ளனர். இன்னுமொரு அதிர்ச்சி 6 லட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடமாகாணத்தில் 12 ஆயிரம் முஸ்லீம் வாக்குகளால் முஸ்லீம் காங்கிரஸ் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றுவதன் மூலம் ஒரு பேரினவாதக் கட்சியின் தொங்குதசை வெல்ல வழிவிட்டு உள்ளது.

புலிகளின் தவறான அரசியல் அவர்களை வேகமாக தனிமைப்படுத்தி சர்வதேச ரீதியாக தார்மீக ஆதரவை இழக்க வைத்துள்ளது. இதைப் புலிகள் நிவர்த்தி செய்ய இன்னும் காலம் கடந்துவிடவில்லை. நண்பர்கள், எதிரிகள் யார் என்பதை இனம் கண்டு கொள்ளவும், தேசிய விடுதலைப் போராட்ட சக்திகளை சார்ந்து நிற்கவும், மக்களின் ஜனநாயக உரிமையை வழங்குவதன் ஊடாக மீண்டும் தேசிய விடுதலைப் போராட்டத்தை பலப்படுத்த முடியும்.

மாறுபட்ட கருத்துக்களை விமர்சனம், சுயவிமர்சனம் என்ற அடிப்படையில் கைக்கொள்ளவும், மாறுபட்ட கருத்துக்கள் மீது தாக்குதலை நிறுத்துவது இன்று அவசியமும் அவசரமுமானதாகும்.

♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣

## மக்கள் யுத்த அரங்கில் ..............

### ① மார்ச் 20,21

கம்யூனிசப் போர்வையினுள் திரிபுவாதிகளும், பாராளுமன்ற போலிகளும் மக்களது புரட்சிகரப் போராட்டங்களைச் சீர்குலைத்தும், துரோகமிழைத்தும் முதலாளித்துவத்துக்கு சேவை புரிந்து வருகின்ற வரலாற்றுப் பாதையில் கம்யூனிச இலட்சியத்தின் புரட்சிகர அம்சங்களை வரித்துக்கொண்டு மக்களினது உண்மையான விடுதலைப் பாதையில் வர்க்க எதிரிகளுக்கு எதிராக சமரசமின்றி போராடி வருபவர்கள் இந்திய மக்களது விடுதலையின் நம்பிக்கை மையமாக திகழ்கின்றவர்கள் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் ஆவர். வர்க்க எதிரிகளினதும், போலிகளினதும், திரிபுகளினதும் கனவுகளையும், அவதூறுகளையும் திரைகிழித்து சுரண்டலால், நிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மையால் ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களிடையே குறிப்பாக இந்தியாவின் பின்தங்கிய கிராமப் பிரதேசங்களில் பற்றிப் படர்ந்து வருகிறார்கள்.

நக்சல்பாரிப் புரட்சிக் குழுக்களின் மக்கள் திரள் அமைப்புக்கள் இணைந்து நிறுவியுள்ள அகில இந்திய அடக்குமுறை எதிர்ப்பு மக்கள் அரங்கத்தின் (AIPRF) இரண்டாவது மகாநாடு கல்கத்தா நகரில் கடந்த மார்ச் 20,21 தேதிகளில் எழுச்சியோடு நடந்தேறியுள்ளது. ஆந்திரா, பீகார், மேற்கு வங்கம், மகாராஷ்டிரா, ஒரிசா, மத்தியப்பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு என பல்வேறு மாநிலங்களிலிருந்தும் திரண்டு வந்த ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள் நடாத்திய பேரணி சுரண்டலாளர்களுக்கு எதிரான உணர்வுகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிப்படுத்தியது. கூலி ஏழை விவசாயிகளும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களும் பெருந்திரளாகப் பங்கேற்ற இம்மாநாடு ஏகாதிபத்திய கொள்ளையையும், நிலப்பிரபுத்துவ சுரண்டல் அடக்கு முறையையும் நிர்மூலமாக்க சூளுரைத்ததோடு, 'காட்' ஒப்பந்தம் கையெழுத்தாகிய ஏப்ரல்—15 ம் திகதியை டங்கல் எதிர்ப்பு கறுப்பு நாளாகக் கடைப்பிடிக்குமாறு அறைகூவல் விடுத்தது. நக்சல்பாரிப் புரட்சியாளர்களின் தலைமையிலான மக்கள் திரள் அமைப்புக்கள் கூட்டாக நடத்திய இம்மாநாடு இந்திய உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை தோற்றுவித்தது.

## ②ஏப்ரல் 14....

பின்தங்கிய ஏழை நாட்டு மக்களின் வாழ்வைப்பறிக்கும் 'காட்' ஒப்பந்தத்துக்கெதிராக தமிழ் நாட்டில் புரட்சிகர அமைப்புக்கள் ரயில் மறியல் போராட்டத்தை நிகழ்த்தின. மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புக்கள் இணைந்து தமிழகம் தழுவிய அளவில் ரயில் மறியல் போராட்டம் நிகழ்த்தின. சில நூற்றுக்கணக்கானவர்கள் ரயில் மறியலில் ஈடுபட்டதுடன், இந்திய அரசு காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாளை கறுப்பு நாளாக அனுஷ்டித்தனர். "கறுப்பு நாள்" அட்டைகள் பரவலாக மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

முன்பக்கத் தொடர்ச்சி

## மனித உரிமை மிக .........

மனித உரிமை மீறல்கள் , சித்திரவதை , படுகொலைகள் போன்றவற்றில் பெருமளவு ஈடுபடுகின்ற 18 நாடுகளில் முக்கிய நாடுகளாக அமையும் இஸ்ரேல் , துருக்கி , எகிப்து , கொலம்பியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் அரசுகளிற்கு அமெரிக்க அரசு சகல ஆதரவு , உதவிகளை வழங்குவதை இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

ஜனநாயகம் , மனித உரிமை என்ற போர்வையில் மற்றைய நாடுகளில் தலையிடவும், தனது நலன்களைத் திணிக்கவும் கூப்பாடு போடுகின்ற அமெரிக்க அரசினது சுயரூபத்தை வெளிப்படுத்த இத்தகவலும் ஒரு சான்றாக அமைகின்றது. எல்சல்வடோர், பெரு, நிக்கரகுவா போன்ற தென்னமெரிக்க நாடுகளின் பிற்போக்கு சக்திகள், அரசுகளினது சகலவித பாசிச கொலைவெறியாட்டங்கள், மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா பின்னணியாக செயற்பட்டு வந்தது பகிரங்கமான விடயமே. தமது வளர்ப்பு நாய்களாக விளங்கும் தரகு முதலாளிய, தேசவிரோத சக்திகளினது சகல மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதும், தேசபக்த, புரட்சிகர, ஜனநாயக சக்திகளை பயங்கரவாதிகளாக, ஜனநாயகவிரோதிகளாக சித்தரிக்கின்றதுமான அமெரிக்க வல்லரசின், ஏகாதிபத்தியங்களின் 'ஜனநாயகக்காவல்' வேடத்தை பாதிப்புறும் உலக மக்கள் நன்கு புரிந்தேயுள்ளனர்.

## ருவாண்டா நாட்டை தனது அடிமை நாடாக தக்க வைக்கும் முயற்சியில் பிரஞ்சு ஏகாதிபத்தியம்

இனரீதியான யுத்தமாக கூர்மைபெற்று ஐந்து லட்சம் மக்களுக்கும் மேல் படுகொலைக்காளாகி யுத்த பூமியாக மாறியுள்ள ஆபிரிக்க நாடான ரூவாண்டாவில் அந்நாட்டு பிற்போக்கு அரசினது போஷகனாக இருந்து வந்த பிரஞ்சு ஏகாதிபத்தியம் தனது நலன்களுக்கு பாதகமான சூழ்நிலை உருவாகி வருவதால் யுத்தத்தினால் பாதிப்புறுகின்ற மக்களுக்கு மனிதாபிமான உதவி வழங்கவென கூறிக்கொண்டு விசேட பயிற்சிக் கமாண்டோக்களையும் நவீன ஆயுத தளபாடங்களையும் கொண்டு போய் இறக்கி விட்டுள்ளது. பெரும்பான்மை இன 'ஹூடு' இன அரசிற்கு இராணுவ பயிற்சிகள், உதவிகள், ஆயுதங்கள் வழங்கி இன்றைய படுகொலைக்கு காரணமான காட்டுமிராண்டி இராணுவத்தின் பின்புலமாக இருந்த ஏகாதிபத்தியம் இன்று மக்களைப் பாதுகாக்கவென கூறிப் புறப்பட்டிருப்பது ஆடு நனையுதென்று ஓநாய் அழுத கதைதான்.

'ஹூடு' இன அரசிற்கும் அதன் இராணுவ வெறியாட்டத்திற்கும் எதிராக போராடி வருகின்ற 'ரூட்சி' சிறுபான்மை இன ரூவாண்டன் தேசபக்த முன்னணி (RPF) பல பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதுடன் தலைநகர் கிகாலி (KIKALI) அவர்களது கரங்களில் விழ நாட்களை எண்ணிக்கொண்டுள்ளது. ஐக்கியநாடுகள் (UN) என்னும் பெயர்ப்பலகையில் வல்லரசுகள் குரங்கு அப்பம் பங்கிட்டுக் கொடுத்த கதையாக மற்றைய நாடுகளது விவகாரங்களில் தலையிட்டு நீதிவழங்க ஒப்பமிடும் UN இனது பேச்சுவார்த்தை தந்திரங்களிலோ, ஏகாதிபத்திய நாடுகளினது வலைகளிலோ சிக்காமல் தமது போராட்ட வெற்றியில் இதுவரை ஊன்றி நிற்கும் ருவாண்டன் தேசபக்த முன்னணி UN துருப்புக்கள் சகலதையும் வெளியேறக் கோரியுள்ளதுடன் பிரஞ்சுத் துருப்புக்கள் தமது எதிரிகள் எனவும், பிரஞ்சுத் துருப்புக்களினது தலையீடு யுத்தத்தை விரிவுபடுத்துமெனவும் அறிவித்துள்ளனர். ஹூடு இன இராணுவமும் பெரும்பான்மை இனவெறியர்களும் தமது ருட்சி இன சொந்த தேசிய இன மக்களை லட்சக்கணக்கில் கொடூரமாக கொன்றொழித்து வருகின்றபோதும் பதில் படுகொலைகளை நிகழ்த்தாமல் கட்டுப்பாடுமிக்க சேனையாக தம்மை வெளிப்படுத்திவரும் தேசபக்த முன்னணியினர் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் பிரிவுகளை நியமித்து வருகின்றமையும் அறியவருகின்றது. தமது நலன்களுக்கு பாதகமான சூழ்நிலை உருவாகி வருவதால் 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களது அழிவுவரை வாளாவிருந்தவர்கள் இன்று அம்மக்களது பிணங்களைக் காட்டி அந்நாட்டை அடிமைநாடாக்க புறப்பட்டுள்ளனர். மேற்கத்தைய பிரச்சார சாதனங்களால் கூட பெரிதும் அவதூறுகளைக் கட்டவிழ்த்து விட இயலாதளவு தகைமைகளைக் கொண்டுள்ள ருவாண்டன் தேசபக்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னணி (RPF) பெரும்பான்மை இனமக்களது நலன்களையும் முன்னெடுத்து அனைத்து மக்களையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் இணைப்பதன் மூலமே ருவாண்டா நாட்டினது சுயாதிபத்தியத்தையும் வளமான எதிர்காலத்தையும் உத்தரவாதம் செய்ய இயலும்.

# மெக்சிக்கோ துயரத்தின் புரட்சி.

தங்கரூபன

" இன்று சொல்கிறோம், நடந்தவை போதும் ! நாம் எமது தேசத்து மூதாதையரின் வழித்தோன்றல்கள், மரணத்திலிருந்தும், பசியிலிருந்தும் பல லட்சம் மக்களை காப்பதற்கு ஒரே ஒரு சந்தர்ப்பமான இத்தருணத்தை, 70 வருட சர்வாதிகார, அதிகார வெறி பிடித்த அரசுக்கு எதிராக பயன்படுத்துமாறு எமது சகோதரர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம். சந்தர்ப்பவாத, தேசத்துரோக பிற்போக்கு வாத குழுவுக்கு எதிராக அணிதிரள்வோம். "

மேற்குறித்த அறிவித்தல் மெக்சிக்கோவின் "சபாதா விடுதலை அமைப்பின்" ரால் (EJERCITO ZAPATA DE LIBERATION NATIONAL-EZLN)வெளியிடப்பட்டது. இவ்வமைப்பு 1.1.94 இல் மெக்சிக்கோவின் தெற்கு மாநிலமான சியாபஸ் (CHIAPAS)இல் 6 பெரிய நகரங்களையும், பல கிராமங்களையும் கட்டுப்பாட்டில் வைத்தும் முக்கியமான மிகப்பெரிய பண்ணையாரையும் (ABSALON CATELLANOS), முன்னாள் கவர்னரையும் கைது செய்தனர். இவை சலினாஸ் (SALINAS) தலைமையிலான அரசைப் பீதிக்குள்ளாக்கியதுடன், உலகெங்கும் பரபரப்பையும் ஏற்படுத்தியது.

EZLN னரை அடக்கப்போவதாக அறிவித்த அரசு பெருமளவில் இராணுவத்தை அனுப்பி பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது. விமானத்தாக்குதல்களையும் நடத்தியது. இவை மூலம் அரசபடைகளின் அடாவடித்தனம் அம்பலப்பட்டதே ஒழிய புரட்சியாளரை அடக்க முடியவில்லை.

1910- 1917 களில் விவசாயிகளின் புரட்சிக்குத் தலைமை தாங்கிய எமிலானோ சபாதா (EMILANO ZAPATA) என்பவரின் வழியில் புரட்சி தொடரும் எனவும், கியூபாவைப் போல, ஆனால் கியூபாவை விட நல்லதான சோஷலிசம் அமையும் எனவும் EZLN அறிவித்துள்ளது.

## யார் இந்த சபாதா?

எமிலானோ சபாதா பண்ணைமார்களுக்கும் (நிலச்சுவான்தார்கள்) அரசுக்கும் எதிராளியான போராளியாகவும், விடுதலை வீரனாகவும் மெக்சிக்கோ மக்களால் கருதப்படுகிறார். இவர் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற போரின் தலைவராக இருந்தவர். சியாபாஸ் விடுதலை அமைப்பு அவரது பெயரையே தமது அமைப்புக்கு (ZAPATA) சூட்டியமை தற்செயலானதல்ல.

எமிலானோ சபாதா 1879ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மெக்சிக்கோ நகருக்கு (MEXICO CITY) தெற்குப் புறத்திலுள்ள மாநிலமான வளம் நிறைந்த MORELOS இலுள்ள, ANE NE CUILO என்ற நகரத்தில், பண்ணையார்களால் நிலம் அபகரிக்கப்பட்ட வறிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். தனது இளம் பிராயத்திலேயே தன்னை வறிய விவசாயிகளினதும், பூர்வகுடி


சபாதா

இந்தியர்களினதும் "காவலன்" எனக் கருதி வந்தார். பண்ணைமார்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் தனது 20 வயதிற்குள்ளேயே செயற்பட்டார். 1908 ம் ஆண்டு குடியரசுத் தலைவர் PORFIRIO DIAZ உடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் விவசாயிகளின் சார்பில் தலைமை வகித்தார். பூர்வகுடி இந்தியர்கள் மற்றும் ஏழைவிவசாயிகள் தங்கள் நிலங்களுக்கான உரிமையை ஆதாரங்களுடன் நிரூபித்தும் கூட ஏமாற்றப்பட்டனர். இதனால் சபாதா மக்களுக்கு ஆயதம் ஏந்தித்தான் விவசாயிகள் தங்கள் நிலங்களை பாதுகாக்க முடியும் எனவும், பலவந்தமாக, ஆயுதங்கள் மூலம் பறிக்கப்பட்ட நிலங்களை அதே முறையைப் பாவித்துத்தான் திரும்ப பெறமுடியும் எனவும் அறிவித்தார். அதற்கான அமைப்பையும் கட்டினார்.

இப்புதிய அமைப்பு அடித்தட்டு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றது. பல வருட பண்ணைகளின் சர்வாதிகாரத்தின் விளைவாக இது தோன்றியது. இதை திசை திருப்ப எண்ணிய அரசு ZAPATA வை இராணுவ சேவைக்கென மெக்சிக்கோவிற்கு அனுப்பியது. 6 மாதம் அங்கு பயிற்சி பெற்று திரும்பும் தருணத்தில் கவர்னர் தேர்தல் நடைபெற்றது. ஆளும் கட்சி வேட்பாளருக்கு எதிராக ZAPATA நின்றும், ஆளும் கட்சியே "வென்றது". ஆயினும் ஆயுதப் போராட்டம் ஒன்றே வழி எனும் முடிவுக்கு வந்தார். அரச எதிர்ப்பாளர்களை இணைத்துக்கொண்டு அதற்கு தலைமை தாங்கினார். அந்த நேரத்தில் ஏற்கனவே பல ஆயுதம் தாங்கிய குழுக்கள் இயங்கி வந்தன. அவற்றில் ஒன்றான வடமெக்சிக்கோவை சேர்ந்தபண்ணையார் ஒருவரின் மகனான FRANCISCO MADERO என்பவர், 1910 இல் நடைபெற்ற தேர்தலில் சர்வாதிகாரி DIAZ இடம் தோல்வியுற்று, பின் ஆயுதப் போராட்டத்தை நடாத்துவதாக அறிவித்தார். ZAPATA தனது குழுவை MADERO



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வுடன் இணைத்தார். MADERO வும், அவரது குழுவும் நிலச் சீர்திருத்தம், அரசியல் சுதந்திரம் போன்றவற்றை தங்கள் புரட்சியின் நோக்கம் என அறிவித்தனர்.

MEROLOS இல் நடைபெற்ற போரில் MADERO தோற்றதும், ZAPTA அதற்கு தலைமை தாங்கி, மாநிலத்தின் மிகப் பெரிய நகரத்தில் நடைபெற்ற கடும் போரில் சர்வாதிகாரியின் சிறப்புப்படையை (அரசபடை) தோற்கடித்துப் புகழ் பெற்றார். MADERO ஜனாதிபதியானார். ஆனால் அவரோ, அவரது குழுவோ வெற்றி பெற்றதும் நிலச் சீர்திருத்தம் பற்றி அக்கறை காட்டாததால் ZAPATA மீண்டும் "புதிய குறிக்கோளாக" நிலம், சுதந்திரம் என்பவற்றை ஏற்று ஆயுதம் தாங்கினார்.

சபாதாவினது புதிய குறிக்கோள் மீதான சந்தேகத்தை தீர்க்க புரட்சியின் புதிய கட்டமாக ''AYALA திட்டம்" அறிவிக்கப்பட்டது. இதுவே அவர்களின் திட்டமாகியது. இது பண்ணையாளர்களால் பறிக்கப்பட்ட நிலங்களை திரும்ப பெறுதல், நிலச் சீர்திருத்தம், விவசாயக் கூட்டுடமையை உறுதிப்படுத்தல், அரசியல் சுதந்திரம், தொழிலாளர் உரிமை பாதுகாத்தல் போன்றவற்றை அங்கீகரித்தது. மேலும் அந்நிய முதலீட்டிற்கு சலுகை மறுப்பையும் அறிவித்தது. ஏனெனில் அக் காலத்தில் அந்நிய முதலீட்டு அதிகாரம், மெக்சிக்கோ சுரங்கங்களில் 80–90 வீதம் அமெரிக்க முதலீட்டாளர்கள் கைகளிலேயே இருந்தன.

ஜனாதிபதி MADEROS நிச்சயமற்ற பேர்வழியாக விளங்கினார். இவரால் கிராமப்புறங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாமையும், மற்றும் மேல்தட்டு வர்க்கத்தின் பீதியும், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையின்மையும், அரசின் கொள்கையால் தாமே முழுவதும் பாதிப்படையப் போவதாகவும் இவை சபாதாவுக்கு ஆட்சியை அமைக்கும் தகுதியை கொடுத்துவிடும் எனவும் வருந்தினர். இதனால் MADEROS இன் இராணுவ தளபதியான VICTORIANO HUERTA (இவர் தான் சர்வாதிகாரி DIAZ இன் இராணுவ தளபதியாக இருந்தவர்) , அமெரிக்கத் தூதர் WOODROW LANE WILSON உடன் (இவர் பின்னாளின் அமெரிக்க ஜனாதிபதி WOODROW WILSON இன் மைத்துனராவார்) இணைந்து MADROS ற்கு எதிராக இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு செய்து, MADROS ஐயும் அவரது முக்கிய ஆலோசர்களையும் படுகொலை செய்தனர். புரட்சியாளர்களை நரவேட்டையாடும் இயக்கம் HUERTUA வால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சபாதா அமைப்பை வெல்லுவதற்கு, அவர்களை அங்கீகரித்து, உடன்படிக்கைக்கு வர அழைத்த வேண்டுகோள் சபாதாவால் நிராகரிக்கப்பட்டது. சபாதா மீதான வன்முறையில் இராணுவம் குதித்து, ஆயிரக் கணக்கான மக்களை கொன்றும், நகரங்களை விட்டு விரட்டியடித்தது. ஆனால் சபாதாவைப் பிடிக்கமுடிய வில்லை.

1914 இல் ஆயுதம் தாங்கிய குழுக்களின் தாக்குதலால் HUERTA நிலைகுலைந்தது. VEUSTIANO CARRANZA என்ற வட மெக்சிக்கோ பண்ணையார் தலைமையில் இக்கூட்டு இருந்ததுடன் அது ஜனாதிபதி பதவியையும் கோரியது. ஆனால் சபாதா தனது குழுவை PANCHO VILLA என்ற புரட்சித்தலைவருடன் இணைத்து CARRANZA வை வெளியேற்ற தனது AYALA திட்டத்தை அறிவித்தது.

1915 இல் CARRANZA மீண்டும் தம்மை தயார்ப்படுத்தி VILLA, SAPATA வினரது படையைப் பின்தள்ளி நாட்டின் பெரும் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அவர் தனது சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவற்றில் இந்தியர்களினதும் விவசாயிகளினதும் நிலவுரிமை, தேசிய உரிமை, மூலவள, தொழில் உரிமை, வேலைநிறுத்தம் செய்யும் உரிமை, கல்வி, சமூகப்பாதுகாப்புத்திட்டம் போன்றவை சபாதாவின் AYALA திட்டத்தைப் போன்றதாக இருந்ததெனினும், சபாதா அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் இவை உறுதி அற்றனவாகவும், நிச்சயமற்றதாகவும் இருந்தது. சபாதாவின் செல்வாக்குமிக்க பகுதிகளில் இவற்றைவிட கூடியளவு உரிமை இருந்தது. சபாதா உள்ளூர் மாவட்டங்களுக்கு ஜனநாயகம், சுயாட்சி போன்றவற் றையும் அங்கீகரித்தார்.

அரச எதிர்ப்புப்பிரிவில் மன்னிக்கும் பழக்கம் இல்லாததாலும், CRRANZA சபாதாவை சிறைப்பிடிக்க முயற்சி எடுத்ததாலும் கடுமையான போர் ஆரம்பித்தது. ஆனால் சபாதாவை இராணுவ ரீதியில் முறியடிக்க முடியாது என்றறிந்த அரசு சூழ்ச்சி மூலம் முயற்சித்தது. carranza வின் நம்பிக்கைக்கு பாத்திரமான இராணுவ அதிகாரி jusus guajardo, தான் CARRANZA வுடன் அதிருப்தியடைந்துள்ளதாகவும், சபாதாவுடன் இணைய விரும்புவதாகவும் அறிவித்து சபாதாவின் நம்பிக் கைக்குப் பாத்திரமாகியது. ஏராளமான ஆயுதங்கள், போர் வீரர்களுடனும் இணைவதாக ஆசையூட்டியது. இது பற்றிப் பேச சபாதாவுடன் கூட்டம் கூட ஏற்பாடுகள் செய்யப்பட்டது. கூட்டத்தில் ஒளிந்திருந்திருந்த ஓர் இராணுவவீரன் சபாதாவைச் சுட்டுக்கொன்றான்.

மேல்தட்டு வர்க்கத்தையும், அரசையும் பீதிக்குள்ளாக்கிய விவசாயிகளின் அன்புக்குரிய தலைவனின் உடல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. அதன்பின் சபாதாவின் அமைப்பு கலையத் தொடங்கியது. மீண்டும் பண்ணைகளின் சர்வாதிகாரம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வரலாற்றுப் பின்னணிகளுடன் இன்றைய போர் ஆரம்பித்துள்ளது. மெக்சிக்கோ அரசின் கணிப்பின்படி புரட்சியாளர்கள் 'ஆகாயத்திலிருந்து' தான் வந்தார்கள். உண்மையில் இவ்வமைப்பு 1968ம் ஸ்தாபிக்கப்பட்டாலும், 1983ல் தான் அதற்கென ராணுவப்பிரிவு அமைக்கப்பட்டது. அன்றிலிருந்து தம்மை இறுக்கமாகவும், ரகசியமாகவும் EZLN னர் வைத்திருந்தது எல்லோரையும் வியப்புக் குள்ளாக்கியுள்ளது.

மெக்சிக்கோவின் மிகவும் பின்தங்கிய மாநிலமான CHIAPASல் 3.2மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 26 வீதம் மாயா இந்தியர்கள், இவர்கள் பலபிரிவாகவும், பலமொழி பேசுபவர்களாகவும் உள்ளனர். இவர்கள்(மாயாஇந்தியர்) உலகின் நாகரீக உச்சியில் வாழ்ந்த மாயாஇந்தியன் இன வம்சாழியாவார்கள். இவர்களின் நாகரீகம் ஐரோப்பியர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருகைக்கு சற்றுமுன் வீழ்ச்சியடைந்தது. சியாபாஸின் 80 வீதமான மக்கள் வறுமையிலும், பலர் வேலையில்லா மலும், 30 வீதமானோர் எழுதவோ, வாசிக்கவோ தெரி யாதவர்களாக உள்ளனர். மெக்சிக்கோவின் 1, 75, 000 இராணுவத்தில் 16,000 பேர் இங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

பண்ணைகளினாலும், நீதிமன்றம், பொலீஸாரினாலும் அச்சுறுத்தப்பட்ட மக்கள் காடுகளுக்கும் பாறை நிலங்களுக்கும் குடி பெயர்ந்தனர். கைது செய்தல், சித்திரவதை செய்தல், கொலை போன்றவையே இன்று அரசுக்கு எதிரான போரில் இணைத்துள்ளது. இவ் எதிர்ப்பு மெக்சிக்கோவின் மூலை முடுக்கெல்லாம் சமூகத்து அடித்தட்டு மக்கள் எரிந்து கொண்டு இருப்பதை பறைசாற்றியுள்ளது. எழுத்தறிவின்மை, நோய், மோசமான வறுமை போன்ற வை முதலாளித்துவத்தின் வக்கிரத்தைக் காட்டி நிற் கின்றது. அதனால் தான் EZLN சோசலிஷப் புரட்சியை மாற்றீடாக அறிவித்துள்ளது. பரந்துபட்ட மக்கள் இம் முடிவுக்கு வந்துள்ளமை ஆச்சரியமான தல்ல. ஆளும் கட்சியான THE INSTITUTIONAL REVOLU TIONAL PARTY(PRI) 60 வருடமாக ஆட்சி நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

" சர்வாதிகாதிகள் அறிவிக்கப்படாத, மக்களை படுகொலை செய்யும் போரை பல வருடங்களாக நடாத்தி வந்துள்ளார்கள். அதனால் உங்களுடைய உதவியையும், போராடவேண்டும் என்ற முடிவையும் உறுதிப்படுத்தி மெக்சிக்கோ மக்களின் முடிவுக்கு உதவுங்கள். நிலம், வீடு, உணவு, மருத்துவம், கல்வி, சுதந்திரம், நீதி, விடுதலை, அமைதி போன்றவற்றுக் காகப் போராடுவோம் " எனவும் " நாம் மக்களைப் பாதுகாப்போம், ஏனெனில் ராணுவத்தினரின் வரலாற்றை நன்கு அறிவோம். நாம் ஆயுதப் போரை ஆரம் பித்துள்ளோம், இது ஒரு அரசியல் கொள்கைப் போர், பொருளாதாரப் போர். வேறுவிதமான போர்முறையை ஆயுதப்போராட்டத்திற்கு முன் பிரயோகிக்கமுடியாது. சுதந்திர, ஜனநாயக, தாய் நாடு அமைக்கும் வரையும், மேற்குறித்த உரிமைகள் பெறும் வரையும் இப் போரை நிறுத்த முடியாது " எனவும் EZLN அறிவித்துள்ளனர்.

பேருவிய, மாவோயிச கெரில் லாக்களை போதைப் பொருள் கடத்துபவர்கள் என அவதூறு செய்யும் ஏகாதிபத்தியங்கள் EZLN மீதும் அதே அவதூறு பரப்பியுள்ளது. EZLN னரின் போரை அரசின் எதிர்கட்சிகள் எதுவும் ஆதரிக்கவில்லை. எனினும் மெக்சிக்கோவின் அரசியல் விமர்சகர்கள் EZLN இன் நடவடிக்கைகள் புரிந்து கொள்ளக்கூடி யவையே என அறிவித்துள்ளனர். சியாபாஸில் கட்ட விழ்த்து விடப்பட்ட ராணுவத்தினரின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து மனித உரிமை அமைப்புக்கள் செய்திகள் வெளியிட்டன. செய்தி திரட்ட சியாபாஸிற்கு சென்ற பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள் அடித்து விரட்டப்பட்டனர். ராணுவத்தினரின் சூட்டுக்கு ' LA JORNDA ' என்னும் பத்திரிகையின் நிருபர் இலக்காகி, மயிரிழையில் தப்பினார். போர் ஆரம்பித்த ஒரு கிழமையில் 90 பேர் இறந்ததாக அரச தரப்பு செய்திகள் கூறின. ஆனால் 400 பேர் இறந்ததாக கத்தோலிக்க திருச்சபை அறிவித்தது. SANCRIS TOBAL நகரில் நடைபெற்ற கண்மூடித்தனமான விமானத்தாக்குதலால் பெரும் சேதம் ஏற்பட் டுள்ளது எனவும், அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டு வீதிகளில் வீசப்பட்டதையும் REUTER செய்தி நிறு வன புகைப்படக்காரர்கள் அம்பலப்படுத்தினார்கள்.

மெக்சிக்கோ அரசில், இராணுவம் தனது சிறப்புப்பாத்திரத்தை தக்கவைத்துக் கொள்ள அரசியலில் தலையிடமாட்டோம் என உறுதியளித்து வந்துள்ளது. ஆனால் இராணுவமே தன்னிச்சையாக இயங்குமளவுக்கு உறுதிவாய்ந்ததாகவும் உள்ளது. இராணுவ தளபதிகளை மகிழ்விப்பதற்காக உல்லாச மாளிகைகள், கார், உயர்கல்விபீட வசதி, சிறந்த வைத்தியசாலை, மற்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்படாத சலுகைகளால் அவர்களைச் சாந்தப்படுத்தியது அரசு. இவை சிறப்பாக LA ARO CARDENAS (1934-40) காலத்தில் ஆரம்பித்தது. இவர் 1910 களில் நடைபெற்ற புரட்சியில் அரச ஜெனரலாக இருந்தவர்.

அன்றிலிருந்து உள்நாட்டில் எதிர்க்கட்சிகளையும் அரசை விமர்சிப்பவர்களையும் குறிப்பாக இடதுசாரிகளையும், மக்கள்திரள் அமைப்புக் களையும், விவசாய, தொழிற்சங்க இயக்கங்களையும் ஒடுக்கி வந்துள்ளது. சிறப்பாக 1968 இல் நடைபெற்ற மாணவர் எழுச்சி கொடூரமான படுகொலைகள் மூலம் ஒடுக்கப்பட்டது. சியாபாஸ் நகரத்தின் ஆறு நகரங்களை EZLN கைப்பற்றியதைக் காரணம் காட்டி இராணுவத் தைக் குவிக்க அரசுக்கு தர்க்க ரீதியான நியாயம் இருந்தாலும் இராணுவத்தில் ஏற்பட்ட கருத்துமுரண் பாடுகளால் அவை வெற்றியளிக்கவில்லை. கிளர்ச்சியாளர் களை ஒடுக்குவது என்ற பெயரால் மாநிலம் முழுவதை யும் ஒடுக்குவதை இராணுவத்தில் பலர் ஏற்கவில்லை. ஆயினும் அரசு தனது 'கௌரவத்தை' க்காக்க இராணுவ நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும்படி அறிவித்தது. அதனூடே அமைதிக்கான பேச்சுவார்த்தை யை நடாத்த முடியும் எனவும் கருதியது. இதனை ஏற்று எதிர்க்கட்சிகளும் SALINAS ற்கு ஆதரவ ளித்தன. ஆனால் சியாபாஸ் ஜெனரல் MIGUEL ANGEL CODINEZ பத்திரிகையாளர்களிடம் "தங்க ளை இனம் காட்ட விரும்பாத பல இராணுவ அதிகாரி கள் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித் துள்ள தாக" த் தெரிவித்தார். ஒழுங்கு படுத்தப்படாத, முறை யான பயிற்சியற்ற இராணுவம் போரில் இறங்குமாயின் நடுவழியில் தோற்கடிக்கப்படுவோம் எனத் தனது எதிர் காலம் குறித்து தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத ஜெனரல் கூறியுள்ளார்.

இப்படிப் பல அதிகாரிகள் எச்சரிப்பினும், சில இராணுவ அதிகாரிகள் விமர்சனங்களை ஏற்காமல் பத்திரிகையாளர்ளிடம் மிக எச்சரிக்கையாகப் பேட்டி கொடுத்துள்ளனர். LA JURDANA பத்திரிகைக்கு ஜெனரல் GODINEZ வெற்றி பற்றிக் கூறியதாவது -

" இங்கு போர் மூழும் என்பது உறுதியானால் எமது பயிற்சியளிக்கப்பட்ட வீரர்கள் தயாராவார்கள்... ஆனால் மிகப் பெரிய இழப்புக்கள் இருபகுதியிலும் ஏற்படும்.

ஆனால் சியாபாஸ் இராணுவத்தின் பலம் இவரின் கூற்றுக்கு நேர்மாறான உள்ளதென்றும் இராணுவம் மிகவும் பலவீனமானதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வும், தாக்குதலுக்கு தகுதியற்றதாகவும் உள்ளது என பத்திரிகைகள் கூறியுள்ளன. இராணுவத்தளபதியான FRANCISCO RODKIGUEZ அரசியலில் டாக்டர் பட்டம் பெற MEXICO NATIONAL UNIVERSITY இல் அவர் தேர்ந்தெடுத்த " மனித உரிமைகளை மதித்தலும், தேசிய பாதுகாப்பும்" என்ற விஷயத்திற்காகவும், FORUM என்ற இதழுக்கு அரசு இதற்கென தனியொரு அமைப்பை உருவாக்க வேண்டும் எனக் குறிப்பிட்டு பல விடயங்களை எழுதியிருந்தார். அது இராணுவத்தை தரக்குறைவாக மதிப்பிடுகிறது என்றும், இராணுவத்தை இழிவுபடுத்தியுள்ளது என்றும் குற்றம் சாட்டப்பட்டு இராணுவத்தளம் 1 இல் (CAMPO MILITAR NO 1) சிறைவைக்கப்பட்டுள்ளார். இப்படி இராணுவத்திற்குள்ளேயே முரண்பாடுகள் பெருகும் நிலையே உள்ளன என பத்திரிகைகள் எழுதுகின்றன.

அப்பாவி மக்களுக்கு எதிரான திட்டமிட்ட படுகொலை, கடத்தல் போன்றவற்றை கடந்த ஆண்டுகளில் பொலீசும், இராணுவமும் நடாத்தி வந்துள்ளது. இவற்றைக் கண்டித்து சியாபாஸ் மாநிலத்திலுள்ள SANCRISTOBAL நகர கத்தோலிக்க பிசப் SAMUEL RUIZ ம் மனித உரிமை இயக்கமும் செயற்பட்டு வந்துள்ளனர். குறிப்பாக RUIZ இக் குற்றங்களுக்காக அரசை விமர்சித்தவராவர். இதனால் மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்ற பிசப் பாக விளங்குகிறார். இவை பண்ணையாளருக்கு ஆத்திரத்தை ஊட்டியுள்ளது. நடைபெற்ற கிளர்ச்சிக்கு இவரையே அரசு காரணம் காட்டியுள்ளது. இவரை வத்திக்கான் மதபீடமும் பலதடவை கண்டித்து வந்துள்ளது. வத்திக்கானின் மெக்சிக்கோ பிரதிநிதியான பிசப் JEROMINO PRIGINE , " RUIZ இன் நடவடிக்கை தமக்கு மிகவும் ஆபத்தானதாகும் " எனும் கணிப்பு போப் JOHANNES PAUL 2 ஆல் தீவிரப்படுத்தப்பட்டது. பிசப் பதவியிலிருந்து அவரை நீக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டும் அது நிறைவேற்றப்படவில்லை. அது நிறைவேறியிருந்தால் இந்தியர்களை நெருப்பூட்டிவிட்டிருக்கும். (பண்ணைமார்களுக்கு எதிரான நேரடியான வன்முறையை தூண்டியிருக்கும் ) எனக் காரணம் கூறப்பட்டது. 450 வருடமாக கத்தோலிக்க மதம் மக்களை ஏய்க்க பயன்பட்டு வந்துள்ளது.

சென்ற வருடம் நவம்பர் மாதம், RUIZ ஐ " மாக்சிய சமுதாயப் பார்வை கொண்டவர் " என்ற பெயரில் போப்பிடம் குற்றம் சாட்டியுள்ளனர். மக்கள் நலனில் அக்கறை கொண்ட பாதிரிமார்களில் அவரும் ஒருவர். PRIGINE னின் முறையீடுகளை எதிர்த்து RUIZ ஆல் தாக்குப் பிடிக்க முடியாது என அரச சார்பான செய்திகள் கூறின.

உலகின் இரண்டாவது பெரிய கத்தோலிக்க திருச்சபையின் (மெக்சிக்கோ) பெரிய திருச்சபை பிரேசிலில் உள்ளது) மீது வத்திக்கான் நேரடியாக கட்டுப்பாடு விதிக்க கோரியுள்ளனர். ஏனெனில் உண்மையில் மெக்சிக்கோ மதபீடம் பல பிரிவுகளாகச் சிதறிப்போயுள்ளது. அவைகளில் முக்கியமானவை.

1. வத்திக்கான் பிரிவு: இது PRIGINE தலைமையில் வத்திக்கானின் பிரதிநிதியாகவுள்ள " அரசியலில் தலையிடாத திருச்சபை" எனத் தம்மை அறிவித்துள்ளது. இது 1917 சட்டவங்கீகாரம் மூலம் "மெக்சிக்கோவின் திருச்சபை" எனக் கூறுமளவுக்கு உள்ளது.
2. மெக்சிக்கோ பிசப் பீடம்: இது PRIGINE தலைமையை நிராகரிக்கும் பிசப் ERNESTO AHUMADA என்பவரை தலைமையாகக் கொண்டது. AHUMADA பழைமைவாதி எனக் கருதப்படுகிறார்.
3. சிகுவாகுவா பிரிவு: வட மெக்சிக்கோவின் பாதிரிமார் சங்கம். கடந்த 10 வருடங்களாக அரசின் தேர்தல் தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்தியதுடன், நேர்மையான தேர்தலை வைக்கும்படி நேரடியாக விமர்சிக்கும் எதிர்க்கட்சியான THE NATINAL ACTION PARTY (PAN) ஐ ஆதரிக்கிறது.
4. தென் மெக்சிக்கோப் பிரிவு: இது தெற்குப்பகுதி பாதிரிமார்களின் அமைப்பு. CHIAPAS, GUERRERO, OXACA போன்ற வறுமைப் பட்ட மாநிலங்களில் செல்வாக்கு கொண்டுள்ளது. ஏழைமக்களுக்கு ஆதரவாகவும், அரசு, பண்ணைமார்கள், உள்ளூர் அரச அதிகாரிகளையும் நேரடியாக விமர்சிப்பவர்கள். இதனால் வத்திக்கானாலும், அரசாலும் கண்டனத்துக்கு உள்ளாகும் பிரிவு.
5. புனிதப்பிரிவு: மேற்குறிப்பிட்ட எதிலும் இவர்கள் அடங்காதவர்கள். தனியே மத நடவடிக்கைகளுடன் இருந்து விடவேண்டும் எனும் இவர்கள் PRIGINE இன் " வத்திக்கான் தலையிட வேண்டும் எனும் வாதத்தை எதிர்ப்பவர்கள்.

4வது தவிர்ந்த ஏனைய பிரிவுகள் யாவும் RUIZ ஐ வெளியேற்ற வேண்டும் என்பதில் உடன் கொண்டுள்ளார்கள்.

மெக்சிக்கோ (சியாபாஸ்) பிரச்சனை கத்தோலிக்க திருச்சபையை அரசியலுக்கு இழுத்து வந்துவிட்டது என்பது நிதர்சனமாகிவிட்டதுடன் RUIZ ஐ பதவியிலிருந்து விலக்குவதைத் தடுத்துவிட்டது. புரட்சியாளர்கள் அவரையே தங்களுக்கும் அரசுக்கு மிடையில் தொடர்பு ஏற்படுத்துபவராக அறிவித்துள்ளனர். இது மெக்சிக்கோவின் கத்தோலிக்க திருச்சபை RUIZ ஐ தவிர்க்கமுடியாமல் ஏற்றுக்கொள்ள வைத்துள்ளது. இரண்டாவது பாப்பரசர் PAUL " நிகாரகுவா மயப்படுத்தலை " எதிர்த்தவர் என்பதால் சிறப்பாக இது அவருக்குப் படுதோல்வி எனப் பத்திரிகைகள் எழுதின.

RUIZ , REFORMA எனும் நாளிதழுக்கு கூறுகையில் " நான் இப்போது SANCRISTOBAL நகரின் பிசப் அல்ல, ஆனால் மெக்சிக்கோ திருச்சபையை பிரதிநிதிப்படுத்தும் பேச்சாளர் " என்றார்.

வத்திக்கானிலிருந்து விலகுவதற்கு RUIZ தலைமை தாங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அவதானிகள் கருதுகின்றனர். 55 பிசப்கள், 12 பிரதான பிசப் மற்றும் மெக்சிக்கோ மக்களின் சின்னமாகவும் அவர் கருதப்படுகிறார் எனக் கருத்துக்கள் நிலவுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெக்சிக்கோவின் தெற்கு எல்லைப்புறத்திலுள்ள குவாட்டமாலா நாட்டைச் சேர்ந்த 40,000 இந்திய வம்சாவழி அகதிகள் சியாபாஸ் மாநிலத்தில் வாழ்கின்றனர். இவர்களின் பிரதிநிதியாக கருதப்படும் 1992 இல் நோபல் பரிசு பெற்ற ரிகோபெட்டா மெஞ்சு (REGOBERTA MENCHU) இராணுவத்தினரின் தாக்குதலுக்கு அகதிகளும் இலக்காகக்கூடும் எனக் கவலை தெரிவித்திருந்தார். ஆயுதப் போர் இல்லாமல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என வற்புறுத்தியிருந்தார். ஆனால் குவாட்டமாலா கம்யூனிஸ்ட் புரட்சிக்குழு ஆயுதப் போராட்டத்தை ஆதரித்து வருகிறது.



ரிகோபெட்டா மெஞ்சு

மெக்சிக்கோ விவசாயிகள், பூர்வ இந்தியர்களின் நிலைமை முன்னெப்போதையும் விட (புரட்சிக்கு முந்திய காலத்தை விட) மிகவும் மோசமாகவே உள்ளது. 1916 ம் ஆண்டு 70 மில்லியன் ஹெக்டர் நிலம் 3 மில்லியன் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டது. தனி ஒருவருக்கு ஆகக்கூடியது 100 ஹெக்டர் நிலம் எனச் சட்டம் போடப்பட்டதாயினும், அதன் வளர்ச்சிப்போக்கு சிறிய விவசாயிகளைத் தரித்திரர்களாக்கியுள்ளது. பண்ணைமார்கள் எவ்வித உத்தரவுமின்றி அதிகமான நிலங்களை வளைத்துப் போட்டுள்ளனர்.


மெக்சிக்கோவின் விவசாயம் மேம்படக் கூடிய நிலத்தில் 40 வீதத்தை சிறுபான்மையான பண்ணையார்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். ஆனால் 3.5 வீதமானது மாத்திரம் விவசாயிகளின் பாவனையில் உள்ளது. ஆளும் கட்சி ஆட்சிக்கு வந்ததிலிருந்து (1929) இவை இன்றைய நிலையை எட்டியுள்ளது.

தெற்கு மெக்சிக்கோவில் ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளின் நிலைமையே நிலவுகின்றது. ஏனெனில் பண்ணையாளர்கள் தமக்கென்று அடியாட்களை நிறுவி (பல சந்தர்ப்பங்களில் பொலீஸ், இராணுவம்) அவர்கள் மூலம் ஏழைகளை அடித்துத் துரத்தி, அவர்களது நிலங்களை அபகரிக்கின்றனர். பொலீஸ், நீதிமன்றம் பண்ணைகளின் பைக்குள்ளேயே கிடக்கின்றது. கடன், வட்டி என்ற பெயரிலும், உரம், கிருமிநாசினி போன்றவற்றிற்கும் பண்ணைகளையே நம்பும் நிலையும், வட்டியை அடைக்க அவர்கள் நிலத்தில் வேலை செய்யவும், ஈடு செய்ய முடியாத போது முழுக்குடும்பமும் பண்ணைமார்களிடம் அடிமையாக்கப்படுகின்றனர்.

எஞ்சியிருக்கும் நிலத்தையும் NAFTA எனும் அமெரிக்க வர்த்தக வலையம் மூலம் சுரண்ட மெக்சிக்கோ அரசு அநுமதி வழங்கியது. 3,00,000 ஹெக்டர் (கிட்டத்தட்ட இலங்கையைப்போல் இரண்டு மடங்கு ) இந்தியர்களின் காட்டுப்பகுதி நிலங்களை குறிவைத்துள்ளது NAFTA ஒப்பந்தம்.

EZLN னரின் புரட்சியுடன் மெக்சிக்கோ எழுச்சிபெறத் தொடங்கிவிட்டது. இது அரசுக்கு எதிரான சக்திகளை உற்சாகமடையச் செய்துள்ளது. அரசியல் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது. மெக்சிக்கோவின் தலைநகரில் (MEXICO CITY) 1,00,000 மக்கள் அரசை எதிர்த்தும் , EZLNற்கு ஆதரவாகவும் ஊர்வலம் நடாத்தினர். " சலினாஸ் கொலைகாரன் " , " சியாபாஸில் படுகொலைகளை நிறுத்து " என்ற முழக்கங்கள் ஒலித்தன.

மார்ச் மாத நடுப்பகுதியில் மெக்சிக்கோவின் மிகப் பெரிய வங்கியான "BANAMEX "ன் அதிபர் ALFREDO HARB HELU இனம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டார். அவர் பற்றிய விபரம் இன்னமும் தெரியாது. நாட்டின் மிகப்பெரிய SUPERMARKET உரிமையாளர் மற்றும் செல்வந்த வியாபாரிகளையும் கடத்தியுள்ளனர். இவற்றை விட, இவ்வருடம் நடைபெறவிருக்கும் மெக்சிக்கோ தேர்தலில் ஆளும் கட்சியின் வேட்பாளர்களாக நின்ற (ஜனாதிபதி வேட்பாளர்)LUIS DONALDO COLOSIO சுடப்பட்டு இறந்தார். இவர் ஆளும் கட்சியின(PRI) மிகவும் செல்வாக்கு வாய்ந்தவராவர். ஆளும் கட்சியின் இளவரசன் எனப் புகழப்பட்டவர்.



ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சுடப்பட்டு இறந்து கிடக்கும் காட்சி

நிலைமைகள் இவ்வாறிருக்க ஜனாதிபதி சலினாஸ், மெக்சிக்கோவில் ஸ்திரமான நிலைமை நிகழுவதாகவும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை முதலீடு செய்யும்படியும் அழைப்பு விடுக்கின்றார். வினை விதைத்தவன் வினையைத்தானே அறுவடை செய்ய முடியும்!.

முன்னெப்போதையும் விட மெக்சிக்கோ மக்கள் புரட்சியை வேண்டி நிற்கிறார்கள். அப்புரட்சியை ஆரம்பித்து வைத்துள்ள விவசாயிகள் அதன் சிறப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணிகலனாக விளங்குகிறார்கள். எதிரியின் நாட்களை எண்ணத் தொடங்கிவிட்டார்கள் அவர்கள்.

# சரிநிகர் பிரதான ஆசிரியர் சேரனுக்கு சபாலிங்கம் படுகொலை கம்யூனிச எதிர்ப்புக்குப் பயன்படுகிறது

சபாலிங்கம் படுகொலையைக் கண்டிக்கும் ஒவ்வொரு வரும் தமது அரசியல் நோக்கை மையமாக வைத்தே செய்கின்றனர். இந்த வகையில் சரிநிகர் பிரதான ஆசிரியர் சேரனுக்கு இக் கொலை கம்யூனிச எதிர்ப்பாக வெளிப்படுகிறது. இதன் ஊடாக சரிநிகரின் அரசியல் போக்கையும் நாம் காண முடியும்.

சபாலிங்கம் கொலையை நாம் சமர் 11 இல் கண்டித் தோம். அக் கொலை மாற்றுக்கருத்துக்களின் மீதான மிரட்டல் என்பதுடன் இது எதிர்காலத்தில் ஐரோப்பா வில் மாற்றுக் கருத்துக்கள் மீதான நடவடிக்கையின் முன்னோடி என்பதாலும் இதைக்கண்டித்தோம். இதே நேரம் சபாலிங்கம் வாழ்வியல், அவரின் நோக்கம் என்பனவற்றை நாம் விமர்சிப்பதைத் தவிர்த்தோம். ஏனெனில் கொலையும் அதன் நோக்கமும் எல்லாவற் றையும் விட முதன்மையானது என்பதனால் ஆகும். அந்த வகையில் இக் கட்டுரையில் சபாலிங்கம் பற்றிய விமர்சனத்தைக் கைவிட்டு அக் கொலையை நாம் கண்டிப்பதுடன் அதன் மீதான ஆழமான தாக்கத்தை எடுத்துச் செல்கிறோம்.

ஆனால் சேரன் கம்யூனிச எதிர்ப்பு உயர்த்தப்படுவதன் ஊடாக சபாலிங்கம் போன்றோரை புரட்சிகர புனிதர்களாக காட்டிவிட முனைகின்றார். சபா லிங்கம் படுகொலையை சாதாரணமாக கண்டிப்பது வேறு அதைவிடுத்து இதை கம்யூனிச எதிர்ப்பாக வளர்த்துச் செல்ல முனைவதன் நோக்கம் கபடத்தன மானது.

உலகம் வர்க்கங்களால் உருவானது. நாள் தோறும் மோதல்கள் ஊடாகவும் சுரண்டுவோர், சுரண்டப்படுவோரை அழிப்பதன் ஊடாகவுமே உயிர் வாழ்கின்றனர். சர்வதேச மனித உரிமைச் சங்கங்கள் முதல் அனைத்து மனிதத்துவம் என முழங்கும் (மனிதம் அல்ல) நிறுவனங்களே இன்று உலகை யுத்தங்களுக்குள் அழைத்துச்செல்கின்றன.

சர்வதேச ரீதியாக இன்று சுரண்டப்படும் வர்க்கம் ஆயுதம் ஏந்திப் போராடும் போது அங்கே இம் மனித உரிமைச் சங்கங்கள் பிரசன் னமாவதுடன் மனித உரிமை பற்றிப் பீற்றுகின்றன. மனித உரிமை பற்றி ஒருபக்கம் மட்டும் உயர்த்தி ஏகாதிபத்தியங்களின் நேரடிக் காலனியாக்க மறைமுகமாக உதவி வருகின்றன.

மேலெழுந்தவாரியாக பல மனித உரிமை மீறல் பற்றி குரல் எழுப்பும் இவர்கள், இன்று உலகை மறுபங்கீடு செய்ய, அங்கு ஐக்கிய நாட்டுப் படைகளை இறக்க அதற்கு இசை வாக்கம் செய்ய மனித உரிமை பற்றி அடிக்கடி உரத்து குரல் எழுப்புகின்றனர். அண்மைக்காலம் வரை இன்று ஐக்கிய நாட்டு படைகள் என்ற வகையில் இவ் ஏகாதிபத்தியங்கள் மனித உரிமைப் பெயரால் இறங்கி உலகை மறுகாலனியாக்க இம் மனித உரிமை சங்கங்கள் துணைபோகின்றன.

இன்று உலகில் எல்லா யுத்தங்களின் பின்பும் உள்ளது பொருளாதார நலன்களே. இந் நலன்கள் அனைத்திலும் இவ் ஏகாதிபத்திய நலன்கள் இறுகிப் பிணைந்துள்ளது. இந்நலன்களும், கொள்ளையுமே யுத்தத்திற்கான அடிப்படையாகும்.

உலகில் உள்ள மனித மீறல்கள் அனைத்தின் அடிப்படையும் இப் பொருளா தார நலன்களே. இதை மாற்ற, எதிர்க்க, கண்டிக்க மறுக்கும் அனைத்து சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களுமே இதன் ஊற்று மூலமாகும்.

இந்த நிலையில் வர்க்கங்களால் உருவான உலகில் வர்க்கங்கள் இல்லாது போகும் வரை யுத்தங்களும், முடிவற்ற வன்முறையும் இருக்கும். ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கம் மீது வன்முறையைக் கையாளும். இது சரிநிகர் பிரதான ஆசிரியருக்கு தெரிய நியாய மில்லைத்தான். அதனால் தான் அவர் சரிநிகர் 48 இல் இப்படிக் கூறுகிறார்.

" உண்மையில் இத்தகைய கொலைகள் பயனுடையது மட்டுமன்றி அவசியமானதும் கூட. இத்தகைய படுகொலைத் தீர்ப்புக்கள் நாங்கள் எவ்வித ஈவு இரக்கமுமின்றித் தொடர்ந்தும் போராடுவோம், எதற்கும் தயங்கமாட்டோம் என்பதை உலகுக்குக் காட்டுகிறது. எதிரிகளை அச்சுறுத்தவும், கிலிகொள்ளச் வைக்கவும், நம்பிக்கை இழக்கச்செய்யவும் மட்டுமன்றி நமது சொந்தப் போராளிகளை உலுப்பவும் முழுமையான வெற்றி அல்லது பூரணமான அழிவு இரண்டில் ஒன்றைத் தவிரப் பின்வாங்குதல் என்ற பேச்சே இல்லை என்பதை அவர்களுக்குக் காட்டவும் இத்தகைய படுகொலைகள் அவசியம். ""

சோவியத் புரட்சியின் பின்பு சார் மன்னரும் அவருடைய மனைவியும் ஐந்து பிள்ளைகளும், வீட்டு வேலைக்காரனும், வீட்டு மருத்துவரும், சமையல்காரரும், பிள்ளைகளின் வளர்ப்பு நாயும் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தித் தன்னுடைய நாட்குறிப்புக்களில் ட்ரொட்ஸ்கி எழுதியுள்ளவற்றில் ஒரு பந்தி மேலுள்ளது.

ட்ரொட்ஸ்கினுடைய மகன் லியோன் ஸேதவ் பின்பு ஸ்டாலினுடைய கையாட்களால் பரிஸ் நகரில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். ட்ரொட்ஸ்கியும் மெக்ஸிக்கோவில் வைத்து ஸ்டாலினின் ஆட்களான மெக்ஸிக்கோ இடதுசாரிகளால் படுகொலை செய்யப்பட்டார். ஒரு வரலாற்றுக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக எத்தகைய படுகொலைகளையும் புரியலாம் என்று நம்பியவர்களுள் ட்ரொட்ஸ்கியும் ஒருவர். அத்தகைய தர்க்கம் அவருடைய படுகொலையில் மட்டுமன்றி ஸ்டாலினை விரோதித்த லட்சக்கணக்கானோரின் படுகொலைகளிலும் முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விசுவாசமும் நம்பிக்கையும் எல்லாவகையான படுகொலைகளையும் நியாயப்படுத்தும் என்பது எமது தேசியப் போராட்டத்திலும் ஊடுபாவாக ஓடி நிற்கிறது. எனினும் இது எங்களுடைய தேசியத் தற்கொலை என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய படுகொலையைப் புரிபவர்களும் நியாயப்படுத்துபவர்களும் திரிகரண சுத்தியாக நம்புவது என்னவென்றால் இத்தகைய படுகொலைகள் தாம் சார்ந்த குறிக்கோளை எய்த அவசியம் என்பது மட்டுமல்ல இந்தக் குறிக்கோள் புனிதமானது, தெய்வீகமானது அல்லது உன்னதமானது என்பதால் இத்தகைய படுகொலைகளைப் புரிபவர்கள் சாதாரணமான ஒழுக்கத்தளைகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதையுமாகும். இது ஒரு ஆழ்ந்த கேள்விக்குட்படுத்த முடியாத ஒரு நம்பிக்கையாகும்.

மூடுண்ட மனமும் கோட்பாடுகளுடன் சார்ந்து இறுகிப்போன சிந்தனையின் உறுதிப்பாடும் விமர்சனங்களை வெறுக்கும் போக்கும் அரசபலத்துடனும் இராணுவபலத்துடனும் ஒன்றிணை யும் போது கிடைப்பது கிட்லர், பொல்பெட், ஸ்டாலின்.

"" கிறிஸ்துவின் பெயரில் நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் தவறிழைப்பது சாத்தியம் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்"" குறோம் வெல் அவர்களுடைய இந்த அறிவுரையை சபாலிங்கம் மிகவும் மதிப்பு வைத்திருந்த ரெஜி சிறிவர்த்தன அவர்களின் கட்டுரையொன்றிலிருந்து நான் பெற்றுக் கொண்டேன். ""
என சேரன் தனது கம்யூனிச எதிர்ப்பு கட்டுரை ஊடாக இச்சமூக அமைப்பை கிறிஸ்துவின் பெயரால் கோருகின்றார்.

கம்யூனிச எதிர்ப்பை ஸ்டாலின், பொல்பேட் பெயரில் திரிகரண சுத்தியாக ஏகாதிபத்தியங் களுடன் இணைந்து உயர்த்தி உள்ளார். லெனின், மாவோ, மாக்ஸ், ஏங்கல்ஸ் என எல்லோரும் வன்முறை யை ஏற்றதுடன் அவர்களின் புரட்சிகாலத்தில் அதை நடைமுறையில் கைக்கொண்டனர். பிரஞ்சுப் புரட்சியின் போதும் மாக்ஸ்சும், ஏங்கல்சும் ரசியப் புரட்சியின்போது லெனினும் சீனாப்புரட்சியின் போது மாவோவும் வன்முறையை ஏற்றனர். ஆனால் ஏகாதிபத்தியங்கள் முதல் சேரன் போன்ற கம்யூனிச விரோதிகள் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், மாவோவை கடவுள்கள் ஆக்கிவிட்டு ஸ்டாலின், பொல்பேட் பெயரால் கம்யூனிச விரோத பிரச்சாரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

தம்மீதுள்ள சுரண்டல் சுமையை ஒழிக்க போராட முனையும் மக்களுக்கு அவ நம்பிக்கையை ஏற்படுத்த, திட்டமிட்ட சேரனின் கம்யூனிசவிரோத கனவு, அவர் சார்ந்துள்ள மனித உரிமை என்ற பெயரில் உள்ள ஏகாதிபத்திய பொருளா தாரத்தை நியாயப்படுத்தும் அடிப்படையிலானது.

ஒரு கொலை நிகழும்போது எப்படி அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது ? அதில் சரி பிழை களை ஆராய்வது என்பது சமூகத்தை விஞ்ஞான ரீதியில் புரிந்து கொள்வதில் இருந்தே எடுக்க முடியும். மாறாக கிறிஸ்துவின் கோட்பாட்டின் அடிப்படையில் கருத்து முதல் வாதக் கோட்பாட்டால் அல்ல.

மக்கள் கூட்டம் வர்க்கங்களால் பிளவுண்டது. அங்கு நாள்தோறும் போராட்டம் நிகழ்கின்றது. அப்போ ராட்டம் சகிக்க முடியாதபோது மக்கள் ஆயுதம் ஏந்து கின்றனர். எதிரிவர்க்கத்தை அழிக்கின்றனர்.

ஒரு கொலையை மதிப்பிட அங்கு சுரண்டலின் வடிவம் பற்றி ஆராயப்பட வேண்டும். சுரண்டும் வர்க்கம் தனது கொள்ளையைப் பாதுகாக்கவும், பெருக்கவும் செய்யப் படும் கொலைகள் மொத்த மக்கள் சமூகத்துக்கும் எதி ரானது. அதேநேரம் மக்களை கொன்றும், கொள்ளை யடித்தும் தமது சுகபோகத்தில் வாழும் பிரிவினர் கொல்லப்படும்போது ஆதரிக்கப்பட வேண்டும். உதார ணமாக பிரேமதாச 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள மக்களைக் கொன்றும், ராஜீவ் ஈழப் போராட்டம் முதல் பல நாடுகளில் மக்களை கொன்று ஆண்டவர். இவர்கள் கொல்லப்படும் போது ஆதரிக்கப்பட வேண்டும். ஆனால் இதைச் செய்தவர்களின் தனிமனித பயங்கரவாத அரசியலை விமர்சிக்க வேண்டும்.

இந்த வகையில் சபாலிங்கம் கொலை சுரண்டும் வர்க்க கனவுகளுக்காக, இதை செய்தவர்களை அம்பலப்படுத்தும் அடிப்படையில் அமைந்ததால் கண்டித்தோம். பிரேமதாச கொலையை நாம் ஆதரிக்க காரணம் அவனின் மக்கள் விரோத செயற்பாடே. அதேநேரம் பிரேமதாசவைக் கொன்றவர் களின் அரசியலையும், தனிநபர் பயங்கரவாதத்தையும் விமர்சிக்கின்றோம்.

வர்க்கம் அற்ற சமூகம் உருவாகும் வரை சுரண்டுவோருக்கும், சுரண்டப்படுபவர்களுக்குமிடையில் மோதல் இருக்கும். அதுபோல் சுரண்டுவோருக்குள்ளும் ஐக்கியத்துடன் மோதல் இருக்கும். இதில் எது சரி எது பிழை என ஆராயும் போது எது மக்களின் நலன் சார்ந்தது என்பதில் தான் உள்ளது.

கொலைகளை நாம் நேசிக்கவில்லை. அதுபோல் எந்த கம்யூனிஸ்டும் நேசிப்பதில்லை. ஆனால் அவர்கள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்படும் போது பலாத்காரத்தை நாடவேண்டி ஏற்படுகின்றது. சிங்கள இனவாதிகள் தமிழ்மக்கள் மீது தாக்குதலைத் தொடுத்தபோது தமிழ்மக்கள் போராட முனைகின்றனர். இதில் பலாத்காரம் பயன்படுகின்றது. இதை ஆதரித்த சேரனின் கவிதைகளில் மட்டும் கொலைக்கு அங்கீகாரம் இருக்கவில்லையோ ? அல்லது காலத்தால் பக்குவப்பட்டு பழைய கவிதையில் புகழ் பெற்றபடி அதில் உமது இன்றைய சர்வதேச வெளிநாட்டு நண்பர்களின் கனவுகளை எம்மண்ணில் நிலைநிறுத்த முயற்சியோ ?

சார் மன்னனின் குடும்பம், குடும்ப மருத்துவர், குடும்ப வேலைக்காரி, பிள்ளைகளின் நாய் கொலை செய்யப்பட்டதாக அழும் சேரன் அதன் ஊடாக பிரேமதாசாவுக்காகவும், ராஜீவுக்காகவும் அழும் போது அவரின் வர்க்க நோக்கம் தெளிவானதே.

சார் மன்னனின் குடும்பத்தை சொல்லி குடும்ப மருத்துவர், குடும்ப வேலைக்காரி, நாய் என அழும் போது சாதாரண மக்களின் நிலையில் சார் மன்னனைக் கொண்டு வந்து ஒரு அனுதாபத்தின் ஊடாக ரசியப்புரட்சியையும், லெனின் மீதும் தனது காழ்ப்புணர்ச்சியை சேரன் வெளிப்படுத்தியுள்ளார். இவை மனித உரிமை மீறல் என சேரன் சர்வதேச மனித உரிமையாளருடன் இணைந்து கூக்குரல் இட்டு ஏகாதிபத்தியத்தின் சிறந்த சேவகனாகியுள்ளார்.

சார் மன்னன் ஒரு சாதாரண குடிமகன் அல்லன். மாறாக பலகோடி மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக்குடித்த ஒரு அட்டை. சார் மன்னனினதும் அவனது குடும்பத்தவர் ஆடம்பர வாழ்வுக்காகவும் செய்யப்பட்ட கொலைகள்பற்றி கண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூடியபடி, அவனின் வர்க்க நோக்கம் பற்றி கண்மூடிய படி, ஆக்கிரமிப்பு பற்றி கண்மூடியபடி சேரன் நியாயப் படுத்தும் மனித உரிமை மீறல் எந்த வர்க்க கனவு என நாம் கூறத்தேவையில்லை. வாசகர்கள் தீர்மானிப்பார் கள்.

நேருவின் மகள் என்பதால் இந்திராவும், இந்திராவின் மகன் என்பதால் ராஜீவும், ராஜீவின் மனைவி என்பதால் இத்தாலிய சோனியா காந்தியும் நாட்டை ஆள தகுதி உண்டு எனின் அவர்கள் அனைவரும் அழிக்கப்பட வேண்டும். இதுபோல் செல்வநாயகத்தின் கார் ஓட்டும் வேலைக்காரன் என்பதால் வாமதேவன் PLOT இல் ஒரு தலைவனாக முடியும் எனின் வேலைக்காரனும் அழிக்கப்படவேண்டும். சிவபெருமானின் வாகனம் பசு என்பதாலும், நந்தியின் வாகனம் எலி என்பதாலும் பசுவையும் எலியையும் விழுந்து தொட்டுக் கும்பிட முடியும் எனின் சாரின் வளர்ப்பு நாய் அரசு ஆள முடியும் எனின் அழிக்கப்பட வேண்டும். அந்த நாய் உயிர் தப்பி இருப்பின் சிலவேளை சோவியத் புரட்சிக்கு எதிராக அதன் தலைமையில் (பொம்மையாக நிறுவி) அணிதிரண்டிருப்பர். இல்லையெனில் அந்நாய் பலகோடி பெறுமதியான ஏலத்துக்கு அரசியல் நோக்கோடு விலைபோயிருக்கும். உயிருடன் இருந்திருப்பின் அதன் வாரிசுகள் இன்று உலவும். இன்று அவை ஏலத் துக்கோ அல்லது மீண்டும் சோவியத்தில் ஒரு ராஜா வாக வாழும் வாய்ப்பையோ பெற்றிருக்கும்.

சார் மன்னன் கொல்லப்பட்ட நிகழ்வு அந்தக் கணத்தில் தவிர்க்க முடியாததாக இருந்தது. சார் மன்னனை மக்கள் முன் விசாரித்து கொல்ல வேண்டும் என கட்சி விரும்பியபோது சார் மன்னன் இருந்த இடத்தை எதிர்ப்புரட்சிவாதிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் சுற்றி வளைத்தபோதே கொல்லப்பட்டனர். எதிர்பாராமல் தப்பி இருப்பின் முரண்பாடு இல்லாத ஒரு தலைவனின் கீழ் எதிர்ப்புரட்சிவாதிகள் அணிதிரண்டு புரட்சியை முளையில் அழித்து இருப்பர். சேரன் கனவு அதுதான். அதுதான் ரொக்சியின் பெயரால் சார்மன்னன் பற்றி ஒரு ஒப்பாரி.

ரொக்சி பற்றிய பிரச்சனையில் கூட ஒரு வர்க்க அரசியலே உள்ளது. ரொக்சியே தனது வாழ்க்கை வரலாறு என்ற நூலில் தனது மகன் சட்டவிரோத நடவடிக்கையில் 1924 இல் ஈடுபட்டார் என்கின்றபோது ஒரு வர்க்க அரசியலுக்கு எதிராக இன்னுமொரு வர்க்க அரசியல் போராடுகின்றது. சோவியத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சியை கைப்பற்றிய பின் சகல எதிர்ப்புரட்சிவாதிகளும் கட்சிக்குள் குழுமினர்.

ஆட்சியைப் பிடித்தபின் அனைத்து வர்க்க எதிரிகளும் கட்சிக்குள் பாட்டாளி வர்க்கம் என்ற கோசத்தின் கீழ் அணி திரள்வர். இதை நாம் சோவியத், சீனாவில் தெளிவாகக் காணமுடியும். ஸ்டாலின் ஆட்சியின் பின் எவ்வளவு களையெடுப்பின் பின்பும் குருசேவ், பிரஸ்னேவ் திரிபுக்கும்பல் உள்ளிருந்து சோவியத்தைச் சிதைத்தனர். சீனாவில் மாவோ மாபெரும் கலாச்சாரப் புரட்சி ஊடாக கட்சி விரோதிகளை ஒழித்தபோதும் கட்சிக்குள் திரிபுகள் இருந்து சீனாவை இன்று சிதைத்துள்ளனர். வர்க்க எதிரிகள் ஆட்சியைப் பிடித்தபின் கட்சிக்குள் அணிதிரள்கின்றனர். இதை எப்படி நிவர்த்திப்பது என்பதும் தொடர்ந்து புரட்சியை நடத்துவதும் என்பதும் அவசியமானது. இந்த வகையில் கலாச்சாரப் புரட்சி இது போன்று பல வழிகளில் புரட்சி தொடரப்பட வேண்டும். இது தொடரப்படும் போது வர்க்க எதிரிகள் அழிக்கப்படுவர்.

இந்த வகையில் ஸ்டாலின் வர்க்க எதிரிகளை இனம் கண்டபோதும், அதை மக்களைக் கொண்டு அழிப்பதில் முன் அநுபவம் இன்மையால் தவறுகள் இழைத்தார்.

ஆனால் பல எதிரிகள் அழிக்கப்பட்டபோது பல எதிரிகள் கட்சிக்குள் ஒளித்துக் கொண்டனர். சில நல்ல சக்திகளும் மக்களுக்கு ஊடாக புரட்சியை நகர்த்தாததால் அழிக்கப்பட்டனர். பொல்போட் கூட ஆட்சியைக் கைப்பற்றிய பின் சோவியத், அமெரிக்கா என்ற இரு ஏகாதிபத்தியத்தை முகம் கொள்ள வேண்டிய நிலையில் சுயபொருளாதாரத்தின் தேவையை அதிகளவு உணர்ந்தார். இந்நிலையில் நகர்ப்புறத்தில் குவிந்து இருந்த மக்கள் கூட்டத்தில் 10 லட்சம் பேரை கிராமப்புறத்துக்கு மாற்றவேண்டிய நிலை கட்சிக்கு இருந்தது. இதைச் செய்வதன் ஊடாகவே சுயபொருளாதாரத்தைக் கட்ட முடியும் என்ற நிலையில் கிராதப்புறத்தை நோக்கி மக்கள் பலாத்கார வழிகளில் இடம் பெயர்க்கப்பட்டனர். இது வன்முறையில் எழுந்தபோது படுகொலைகள் தொடர்ந்தன. பொல்போட்டும் கட்சியும் புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தை தவறாக மதிப்பிட்டதும், சோசலிச காலகட்டத்தை நோக்கி இடைவெளி பற்றிய தவறான மதிப்பீடும் இக்கொலைக்கு காரணமானது.

மக்கள் சார்பான இவ்வரசுகள் சில தவறுகள் செய்யும் போது பாரிய விளைவுகளை ஏற்படுத்தின. இது ஒரு கோட்பாட்டுத்தவறு.

சேரன் திசைதிருப்புவது போல் மாற்றுக் கருத்துக்கள் என்பதால் அல்ல. மாறாக சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்து ஸ்டாலின், பொல்போட் போராடியபோது கோட்பாட்டுத் தவறுகள், தவறுகளை இழைக்க வைத்தன. இது போன்றவற்றை வரலாற்றுப் பாடமாகக் கொண்டு புரட்சியாளர்கள் சுயவிமர்சனமாகப் பார்க்க வேண்டும். சார் மன்னன் கொலைக்கு உள்ள காரணமான சுரண்டல் அடிப்படையில் பொல்போட், ஸ்டாலின் தவறு இழைக்கவில்லை. மாறாக சுரண்டலை ஒழித்துக் கட்டும் பணியில் தவறிழைத் தனர். இத் தவறுகளை யாரும் நியாயப்படுத்த முடியாது. இவை படிப்பினையாகும் புரட்சியாளருக்கு. ஆனால் சேரனுக்கு இது ஏகாதிபத்திய கனவுகளுக்கு உதவும் கம்யூனிச எதிர்ப்பாக மாறுகின்றது.

கிறிஸ்துவின் வாரிசுகள் கூறும் " நீங்கள் தவறு இழைக்க வாய்ப்பு உண்டு " என்பதன் ஊடாக சுரண்டல் அமைப்பு பாதுகாக்கப்படுகின்றது. அதாவது தவறுகள் இழைக்க வாய்ப்பு உண்டு என்ற கோட்பாடு சுரண்டும் வர்க்கம் சார்பானது. சுரண்டப் படும் வர்க்கம் எதிர்த்து போராடும் போது சுரண்டும் வர்க்கம் அடக்குமுறையைக் கையாளுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்போது இந்த கிறிஸ்து வாரிசுகள் கண்மூடியபடி பால் குடிக்கின்றனர். சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்து ஆயுதம் ஏந்தி சுரண்டப்படும் வர்க்கம் வீறுநடை போடும்போது இந்த கிறிஸ்து வாரிசுகள் நிறுத்துங்கள் எல்லாம் கிறிஸ்துவே தீர்மானிப்பார் எனக் கூறி சுரண்டும் வர்க்கத்தை பாதுகாக்கின்றனர்.

கலிலியோ பூமி உருண்டை என அறிவித்தபோது இதே கிறிஸ்து வாரிசுகள் மரண தண்டனையைப் பரிசாகக் கொடுத்தனர். வெள்ளைத் தோல் ஆண்டவனின் பிறப்பு எனவும் கறுப்புத்தோல் சாத்தான் பிறப்பு எனவும் கூறும் கிறிஸ்து பைபிள் வாரிசுகள் தவறு இழைக்க வாய்ப்பு உண்டு எனக் கூறி இச்சுரண்டல் சமூகத்தை பாதுகாக்கப் போராடுகின்றனர். இதில் சேரன் என்ன விதிவிலக்கா ?

தவறுகள் சுரண்டும் வர்க்கத்தை எதிர்க்கும்போது அங்கு அவை சுயவிமர்சனமாக அமையும். இது ஸ்டாலின் பொல்போட்டுக்கு பொருந்தும். ஆனால் சார் மன்னனுக்கு பொருந்தாது. சார் மன்னன் தவறு இழைக்கவில்லை. மாறாக அது ஒரு கோட்பாடு. இது போல் ராஜீவ், பிரேமதாச ---- தவறு இழைக்க வில்லை. இவர்கள் சுரண்டும் வர்க்கப் பிரதிநிதிகள். அதன் கோட்பாட்டின் பாதுகாவலர். இவை தவறு அல்ல. கோட்பாட்டின்படி இம் மதவாதிகள் உட்பட இவர்கள் சுரண்டல் வாதிகள். அதன் பாதுகாவலர்.

சபாலிங்கம் வாழ்வியலில் தவறுகளைக் கொண்டிருந்தபோது அவை திருத்தப்படக்கூடியன. விமர்சனம், சுயவிமர்சனத்துக்கு உட்பட்டவை. அவை எதிர்ப்புரட்சிகரமானது அல்ல. இக்கொலை சுரண்டும் வர்க்க கனவுடன் செய்யப்பட்டன. அந்த வகையில் இதை நாம் எதிர்க்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் பெயரால் அல்ல. ஆனால் பிரேமதாச, ராஜீவ் -- போன்றோர் கொலையை ஆதரிக்கின்றோம். ஆனால் இக் கொலையைச் செய்தவர்களின் அரசியலை விமர்சிக்கின் றோம்.

கொலையை கண்டிப்பவர்களுக்கும் வர்க்க நோக்கம் இருக்கும். அது அவர் சொல்லவரும் கருத்துக்களைக் கொண்டு பார்க்க முடியும். "சுத்திகள்" ஒடுக்கும் வர்க்க கனவுகளை நசுக்கும் ஒரு கருவியே. இச் சுத்திகள் மீது சேரனுக்கு வெறுப்பு ஏற்படக் காரணம் அவரின் வர்க்க கனவுகளை நொருக்குவதால். சுரண்டப்படும் வர்க்கம் தமது கைகளில் 'அரிவாள் சுத்திகள்' உடன் எழும்போது இந்த சேரன் முதல் அனைத்து ஏகாதிபத்தியங்களும் வெருண்டு மனித உரிமை பற்றி கூறியபடி ஆக்கிர மிப்பை அடக்கு முறையைத் தொடர்கின்றனர். ஆனால் சுரண்டும் வர்க்க கனவுகள் நீடிக்க முடியாது என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்றது.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

# மார்க்சியம் என்ற பெயரால் மார்க்சிய விரோதக்கருத்தை மூடி மறைக்கக் கோருகின்றார் அ.மார்க்ஸ் ..

அ.மார்க்ஸ் மனிதம் இதழுக்கு எழுதிய வாசகர் கடிதத்தைப் பார்ப்போம் " கட்சி-அரசு-சிவில் சமூக நிறுவனங்களுக்கிடையேயான உறவு பற்றிய கட்டுரையை மனிதம் 23 இல் பார்த்தேன். பயண அவசரத்தில் அதுபற்றி விரிவாக எழுத முடியவில்லை. பொதுவாக அக்கட்டுரையின் கருத்துக்களோடு உடன் படுகின்றேன். கடந்த ஆறு ஆண்டு காலமாக இத்தகைய கருத்துக்களை நாம் வலியுறுத்தி வருகின் றோம். ஆனால் மேற்படி கட்டுரையில் தேவையில்லாமல் மார்க்சிய எதிர்ப்புத் தொனி வெளிப்படுவதைத் தவிர்த் திருக்கலாம் என்பது எனது கருத்து." என்கின்றார் அ. மார்க்ஸ்.

அ.மார்க்ஸ் பற்றிய ஒரு சிறு குறிப்புடன் விமர்சனத்தை வைக்கின்றோம். அ.மார்க்ஸ் இந்தியாவில் அதுவும் தமிழ் நாட்டில் உள்ள ஒரு புத்திஜீவி. இவர் முன்பு மனஓசை, கேடயத்துடன் செயற்பட்டவர். மனஓசையை விட்டு வெளியேறிய அ.மார்க்ஸ் மற்றும் எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா -- போன்றோர் மார்க்சிய விரோதக் கருத்துக்களை தமிழ் மொழியில் கொண்டு வருவதில் மூலகர்த்தாக்கள். இவர்கள் உயர்த்தும் இக்கருத்துக்கள் லெனின் காலத்தில் உயர்த்தப்பட்டு அவை மார்க்சிய விரோதக் கருத்துக்களாக போல்சவிக் கட்சி அம்பலப்படுத்தி அவைகளைச் சவக்குழிகளுக்கு அனுப்பினர். இன்று அ.மார்க்ஸ் மார்க்ஸிய விரோத திரிபுவாதிகள் அவைகளை எலும்புக் கூடுகளாக எடுத்து சதைகளை அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்த முனைகின்றனர்.

கரிகாலன் போன்றோர் இக்கருத்துக்களை அ.மார்க்ஸ் போன்றோரிடமிருந்தே பெருமளவில் உட்கொண்டனர். இதை நாம் சமர் 10 இலும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அ. மார்க்ஸின் கருத்தை விமர்சகத்துக்கு எடுக்கமுன் நாம் இது போன்ற கட்டுரைகளை ஒட்டி மார்க்சிய விரோதக் கருத்துக்கள் என மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டினோம். மார்க்சி யத்தை உச்சரித்தபடி மார்க்சிய எதிர்ப்பை உயர்த்து வதை நாம் சுட்டிக்காட்டி அதை நாம் திரிபாக இனம் காட்டினோம். இதை மனிதம், உயிர்ப்பு நிராகரித்தது டன், இக் கருத்து மார்க்சிய எதிர்ப்பு இல்லை, மார்க்சியத்தை வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் கருத்து என்று மீண்டும் மீண்டும் வாதிட்டதுடன் எம்மைப் பார்த்து மலை உச்சியில் ஏற முடியாத மூடர்கள் என்றனர். இதைத் தொடர்ந்து நாம் மனிதத்துடன் விவாதத்தை நிறுத்தி கரிகாலனின் புதிய கட்டுரையை ஒட்டி ஒரு விவாதத்தை முன் வைத்தோம். அ.மார்க்ஸ் கரிகாலனின் கட்டுரையில் மார்க்சிய எதிர்ப்பு உள்ளது என்பது எமது நிலையை சரியாக்கி உள்ளது. இது மனிதம், உயிர்ப்புக்குப் புரிந்தால் சரி.

இனி அ.மார்க்ஸின் கருத்தை விவாதிக்க முனைகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" தேவையில்லாமல் மார்க்சிய எதிர்ப்புத் தொனி வெளிப் படுவதைத் தவிர்த்திருக்கலாம். "
என அ.மார்க்ஸ் கூறுகின்றார். எவ்வளவு தான் மூடிமறைக்கும் புத்தி ஜீவியாக அ.மார்க்ஸ் இருந்த போதும் யானைக்கும் அடி சறுக்கும் என்பார்களே அப்படி தனது முகத்தை முகமூடியைக் கழற்றி மார்க்சிய எதிர்ப்புத் தொனியைக் காட்டி விட்டார்.

மார்க்சிய எதிர்ப்பு தேவையில்லாமல் தொனிக்கத் தேவையில்லை என்பதன் ஊடாக தேவை யெனின் மார்க்சிய எதிர்ப்பை கோருகின்றார். மார்க்சியம் என்பது ஒன்றே. தேவையானபோது மார்க்சிய எதிர்ப்பை கோருவது என்பது மார்க்சியத்துக்கு எதிரான முதலாளித்துவ கருத்தை உயர்த்துவதே. தமது வர்க்க நலன்கள் பாதிக்கும் போது மார்க்சியத் தை எதிர்க்க கோருகின்றார். இதன் ஊடாக மார்க்சியத் தை எதிர்க்க கோரும் அ.மார்க்ஸ், மற்றும் கரிகாலன் போன்றோர் மார்க்சிய விரோதிகளே. இச்சமூக அமைப் பைப் பேண மார்க்சியத்தை கோசித்தபடி மார்க்சியத்தை எதிர்ப்பவர்கள்.

இனி அ. மார்க்ஸ் அவர்கள் தேவையில் லாமல் மார்க்சிய எதிர்ப்புத்தொனி வெளிப்படுவதைத் தவிர்த்து இருக்கலாம் என்கின்றார். தொனி வெளிப்படுவதை தவிர்க்க கோரும் அவர் இதன் ஊடாக மார்க்சிய எதிர்ப்பை மூடி மறைக்க கோருகின் றார். வெளியில் அப்பட்டமாகத் தொனி தெரியாவகையில் சாதாரண வாசகர்கள் புரியாத வகையில் மூடிமறைக்கப் பட்ட கட்டுரையை வரையக் கோருகின்றார். இதையே அ.மார்க்ஸ் இந்தியாவில் செய்கின்றார். அதையே செய்யும்படி கரிகாலன் போன்றோரைக் கோருகின்றார்.

இதன் ஊடாக தமிழீழ மக்களை ஏமாற்றி புரட்சியைத் தடுக்கக் கோருகின்றார். இதை ஒட்டி லெனின் என்ன கூறுகிறார் எனப் பார்ப்போம்.

""" உழைக்கும் மக்களுக்கு உடனடியாக வெறுப்பூட்டும், அப்பட்டமான சந்தர்ப்பவாதம் மூடி மறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதத்தைப் போன்று அபாயகர மானதும் ஊறுவிளைவிக்கக் கூடியதும் அல்ல. மூடிமறைக் கப்பட்ட சந்தர்ப்பவாதம் தனது சந்தர்ப்பவாத நடைமுறைக்கு உரிய தருணம் வரவில்லை என்றும் இன்ன பிறவாகும் என்றும் நிரூபிக்க மார்க்சிய சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறது. """

– லெனின் –

கரிகாலன் போன்று அப்பட்டமான கருத்துக்களை மறைக்கக் கோரும் அ.மார்க்ஸ் இன்னும் எமது காலம் வரவில்லை எனப் பறைசாற்றி மக்களை ஏமாற்ற மூடிமறைக்கக் கோருகின்றார்.
அ.மார்க்ஸ் முதல் கரிகாலன் போன்றோர் வரை எல்லோரும் மார்க்சியத்தை உச்சரித்தபடி உள்ள போலிகளே. இதை மனிதம், உயிர்ப்பு போன்றோர் புரிந்து கொள்வார்களா? அல்லது அவர்களின் பின் அணிதிரண்டு தொடர்ந்து மக்களை ஏமாற்றப் போகிறார்களா? என்பதை அ.மார்க்ஸ் மூடிமறைக்க கோரும் (தேவையில்லாமல்) ஒருமுறை திரும்பிப் பாருங்கள்

நடந்துமுடிந்த ஸ்ரீலங்காவின் பாராள மன்ற தேர்தல்கள் முடிவுகள் தமிழ்த்தே சிய இனப்பிரச்சினைக்கு எந்தவிதத்திலும் உதவப்போவதில்லை.
ஆனால் தேர்தலில் போட்டியிட்ட அரசி யற்கட்சிகள் இனப்பிரச்சினையையும், கவர்ச்சிகரமான ஏமாற்றுத்திட்டங்களை யுமே பந்தயக்குதிரைகளாகப் பயன்படுத் தின. இருந்தும் எந்த ஒரு பேரினவாதக் கட்சியும் பெரும்பாண்மையைப்பெறாதது அவர்களின் ஏமாற்ற அரசியல் பொய்வாக் குறுதிகள் காடைத்தனமான நடவடிக்கை களால் வாக்குகள் சிதறிக்கப்பட்டது மட் டுமல்லாமல் மீண்டும் ஸ்ரீலங்காவின் போலி ஜனநாயக ஆட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதையே காட்டுகிறது.
இந்தக் கொலைக்கலாச்சார ஏமாற்றுப் பேர்வழிகளிடமிருந்து மக்கள் தப்பிக்கொள் வது எப்போது ?

## தேர்தலும் புலிகளும்

தேர்தல் பற்றியும், தேர்தல் தொடர்பாக தமிழ்பேசும் மக்கள் என் னசெய்யவேண்டும் என்பது பற்றியும் புலிகளின் தலைமை மௌனமாக இருப் பதாக கொழும்புப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

### புலிகளின் மனிதவெடிகுண்டுகள் (தற்கொலைப்படை)

புலிகளின் தற்கொலைப்படையினர் பலாலி முகாமுக்குள் புகுந்து ஹெலி ஒன்றை அழித்தனர். இச்சம்பவத்தில் எட்டு புலிகள் மாண்டனர். இது பற்றிச் செய்தி வெளியிட்ட பாரிஸ் -ஈழநாடு அழிக்கப்பட்ட ஹெலியின் பெறுமதி 400 கோடி என அண்டப்புழுகு புழுகிறது.

""" மேதைக்கு அறிகுறி சராசரி அறிவை விட சற்று அதிகமான அறிவுடையதாகும்.
ஆனால் மேம்பட்ட அறிவு என்பது ஒரு தனி மனிதனையோ அல்லது ஒரு சில மக்களையோ சார்ந்திருப்பது அல்ல.
இது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையாக விளங்கும் ஒரு கட்சியைச் சாந்திருக்கின்றது.
ஒரு சரியான அரசியல் வழியையும் மக்களின் ஒட்டுமொத்தமான அறிவையும் சார்ந்திருக்கின்றது.""" – – – – மாவோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதம்

அன்புடன் சமர் ஆசிரியர் குழுவுக்கு!

சமர் பத்திரிகை இதழ் 10 படித்தேன். அரசியல் பிரக்ஞை கொண்ட முற்போக்கு சக்திகள் என்ற ஒரே வட்டத்தினுள் புலம் பெயர்ந்த நாடுகளில் மனம் திறந்த விவாதம், ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றம் போன்ற இன்னோரன்ன சொற்றொடர்களின் பின்னால் பல கருத்துக்கள் முளைவிட்டமை புலம் பெயர்ந்த நாடுகளின் கடந்தகால சூழல் எனினும் இதன் பின்னே புலம் பெயர்ந்து வந்து முன்னேறிய அரசியல் பிரிவினரிடையே தத்தமது வர்க்க நலன்கள் அடிப்படையில் கருத்துருவாக்கம் நிகழ்ந்து வருவது இன்றைய நிகழ்வுப் போக்காக உள்ளது. " ஒவ்வொரு நபரினதும் சொல்லுக்கும் செயலுக்கும் பின்னால் ஒரு வர்க்கம் ஒழிந்து கொண்டுள்ளது" என்பதற்கு புலம் பெயர்ந்த ஈழத்து அரசியல் மட்டும் விதிவிலக்கா என்ன ? தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்க நலன்களுக்கமைந்த கருத்துருவாக்கத்தை முன்வைக்கும் அரசியல் பிரிவுகள் அனைத்தும் மார்க்சியத்தை வளமாக்குவதாக கட்டியழுவது தான் விசித்திரம். இவ் யதார்த்த நிகழ்வுப் போக்கை அடையாளம் காட்டி சமர் வெளிவருவதை என்னால் அவதானிக்க முடிகிறது. சமர் தனது கருத்தை முன் வைக்கின்ற வடிவத்தில் சில விமர்சனம் எனக்கிருப்பினும் அது கருததின் உள்ளடக்கத்தைப் பாதிக்கும் காரணியல்ல.

உலக சமாதானம், அனைத்து மக்களது அரசு போன்றே ஐக்கியம், மனம் திறந்த விவாதம் இச்சொற்றொடர்களும் வேறான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. மனம் திறந்த விவாதத்தை, மாற்றுக் கருத்துக்களை அணுகுவதில் நிதானத்தை வலியுறுத்திய மனிதம் ஆசிரியர் குழு மனிதம் 23 இல் ஒருபக்க அறிமுகத்துடன் கரிகாலனிடமிருந்து எனக்கு எழுதப்படுகின்ற கடித வடிவிலான கட்டுரை ஒன்றைப் பிரசுரித்திருந்தது. அக்கட்டுரைக்கு கரிகாலன் என்னிடமிருந்து பதிலைக் கோரியிருந்தார். தாமதமின்றி என்னால் அளிக்கப்பட்ட பதில் கட்டுரையை மனிதம் 25 இல் பிரசுரிப்பதாக, அனுப்பப்பட்டு இரண்டு மாதங்களின் பின் அறியத் தந்திருந்தனர். அனுப்பப்பட்டு 5 மாதங்களின் பின், பிரசுரிப்பதாக அறியத்தந்து 3 மாதங்களின் பின் மனிதம் 26 வெளிவந்த காலத்தில் கட்டுரை பெரிதாக இருப்பதாகவும் உற்சாகத்தை வாசகர்களுக்கு தூண்டும்படி இல்லாத விவாதம் போல் அமைவதாகவும், வெளியிடாமையை நட்புடன் புரிந்து கொள்ளும்படியும் கேட்டிருந்தனர். அப் பதில் கட்டுரையே தேடல் இதழ் 13 கருத்தை வெளிக்கொணர வாய்ப்பளிக்கும் நோக்குடன் வெளியிட்டது. மனிதம் ஆசிரியர் குழு அனுப்பப்பட்டு 5 மாதத்தின் பின் வேறு வடிவத்தில் எழுதும்படி கோரியிருந்தனர்.

கட்டுரையின் தரம், தரமின்னை வாசகர்களின் தீர்ப்புக்குரியது. வெளியிடுவதா இல்லையா என முடிவெடுப்பது மனிதம் ஆசிரியர் குழுவின் உரிமை எனினும் வெளியிடுவதாக அறியத்தந்து, அனுப்பப்பட்டு 5 மாதத்தின் பின் நிராகரிப்பதை கரிகாலனினது கருத்துக்களுக்கான பதில் கருத்துக்களை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகின்ற வாசகர்களுக்கு அறியத்தருவது எனது கடமையாகும் என நான் கருதுகின்றேன்.

மேலும் நூறு பூக்கள் மலரட்டும், மனம் திறந்த விவாதம் மூலம் பொதுக்கருத்து போன்றவற்றை வலியுறுத்துகின்ற அனைத்து அரசியல் சக்திகளுமே தத்தமது வர்க்க இயல்புக்கேற்ப தத்துவார்த்த முடிபுகளை கொண்டுள்ளன. அன்றேல் அதை உருவாக்க செயற்படுகின்றன. பல சக்திகளும் பல தரப்பட்ட அனைத்தும் தழுவிய கோஷங்களையும், வளர்த்தெடுப்பு போன்ற கோஷங்களையும் நம்புகின்றார்கள். இச் சக்திகள் ஒவ்வொன்றின் பின்னாலுமுள்ள வர்க்க இயல்புகளை அடையாளம் காணவும் மார்க்சிய லெனினியத்தின் அடிப்படைகளைப் பாதுகாத்து, கிரகித்து, இன்றைய நிலைமைகளுக்கு அவற்றைப் பிரயோகிக்க கற்க வேண்டுமென்ற ஆர்வம் காரணமாக இக் கடிதத்தின் மூலம் சிலவற்றைக் கூற விரும்பினேன். சமர் இடமளிக்குமென்ற நம்பிக்கையாலேயே சமரிற்கு அனுப்பியுள்ளேன்.

அன்புடன்
மாறன்

## பழையன கழிதல் காலத்தின் விதி!



தஸ்லிமா நஸ்ரீன் - பங்களாதேஷ் முல்லாக்களை நடுங்க வைக்கும் ஓர் எழுத்தாளர்; கவிஞர்; நாவலாசிரியர். அயோத்தி பிரச்சினையையொட்டி அவர் எழுதிய அவமானம் எனும் நூலுக்காக முஸ்லீம் மதவெறியர்களால் வேட்டையாடப்பட்டவர்.

அண்மையில் ஸ்டேட்ஸ்மேன் பத்திரிக்கையில் 'குர்ஆன் காலாவதியாகிவிட்டதாக' நஸ்ரீன் பேட்டி கொடுத்திருந்தார் என்று பிரச்சினை ஒன்று கிளம்பியது. தஸ்லிமா மறுப்பு ஒன்றை வெளியிட்டார். ''மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற குரான், வேதங்கள், பைபிள் போன்ற எல்லா மதநூல்களும் 'இடப் பொருத்தமில்லாதவை, காலப் பொருத்தமில்லாதவை' எந்த சமூக வரலாற்று நிலைமைகளில் அவை வெளியிடப்பட்டனவோ அந்த சந்தர்ப்பத்தை நாம் கடந்து விட்டோம். எனவே அந்தக் கருப்பொருள் நம்மை வழி நடத்தக் கூடாது. அவற்றை முழுவதும் திருத்த வேண்டுமா வேறு ஏதாவது செய்ய வேண்டுமா என்ற கேள்விக்கே இடமில்லை. நாம் முன்னேற வேண்டுமானால், பழைய நூல்களைக் கடந்து நாம் போக வேண்டும். நமது ஆன்மீகத் தேவைகளுக்கு நாம் மனித நேயத்தையே புதிய நம்பிக்கையா

கக் கொள்வோம்.'' -இது
அறிக்கை.

இதை அடுத்து வங்காள
அவரைக் கைது செய்ய உ
பித்தது. முஸ்லீம் மதவாதி
தலைக்கு விலை பேசி
நாடெங்கும் மதவெறியர்க
பாட்டம், ஊர்வலங்கள்
தஸ்லிமாவின் வீடு அவரது
வீடுகளின் மேல் குண்டுகள்
றன; அவர்கள் மீது அரசு எ
போடாமல் வேடிக்கை பார்

இஸ்லாம், பெண்க
விதம் பற்றி ஒளிவு மறைவி
லிமா விமரிசிக்கிறார். ''எ
(இஸ்லாம்) பெண்களுக்
மனித மதிப்பையும் வ
பெண்களை அடிமைகளாக
பெண்கள் ஆண்களின் வி
லிருந்துதான் உருவாக்கப்ப
இஸ்லாம் கூறுகிறது. அதன
லாத்தை எதிர்த்து எழுதுகி
கள் மனிதர்களாக நடத்தப்
மானால், அவர்கள் மத





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியேறி வாழ வேண்டும்'' இவை ஆஸ்திரேலிய தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தஸ்லிமாவின் பதில்கள்.

இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்த தஸ்லிமா பகுத்தறிவைக் கொண்டு அதை விமரிசிக்கிறார். இஸ்லாமியரல்லாதவர்கள் இஸ்லாமை விமரிசித்தால் 'அவர்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று சமாளிக்கும் முல்லாக்கள், இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்த தஸ்லிமா இஸ்லாம் மதத்தை விமரிசிக்கும் போது அவரை மிரட்டுகிறார்கள். முன்பு சால்மன் ரஷ்டி: இன்று தஸ்லிமா.

மத நம்பிக்கை இல்லாத நாம், மத நம்பிக்கை கொண்ட மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்த முனைவதில்லை. ஆனால் அறிவின் துணை கொண்டு தஸ்லிமா போன்றோர் விமரிசனம் செய்யும் போது, அதற்குப் பதிலளிக்கத் துப்பில்லாத கோழைகளான மதவெறியர்கள் விமரிசனம் செய்பவர்களை வேட்டையாடுகிறார்கள்.

ஆனால், தஸ்லிமா கேட்கிற கேள்விக்கு பதில் அளிக்கப்படாமலேயே இருக்கிறது. 'குரான் காலப்பொருத்தமில்லாதது', என்ற விமரிசனத்தை மறுத்து 'அது காலப் பொருத்தமுள்ளதுதான்' என்று வாதமும் ஆண்மை மதவெறியர்களுக்கு இல்லை.

இஸ்லாம் உள்ளிட்ட எந்த மதத்தின் வரலாறும் வெற்றி வரலாறு அல்ல; தோல்வியின் வரலாறுதான். 1200 ஆண்டுகளில் குரானுக்கு ஒரே ஒரு நிலையான வியாக்கியானம் இல்லை. எத்தனையோ குழுக்கள், எத்தனையோ விளக்கங்கள், எத்தனையோ நம்பிக்கைப் பிரிவுகள். இவை ஏன்? கரிஜைட்டுகள், மூர்ஜஜைட்டுகள், குதிரைட்டுகள், ஹன்பலைட்டுகள் என்று பல பிரிவுகள் ஏன்? பல வர்க்கங்கள், மற்றும் ஆதிக்கத்திலிருந்த நபர்களுக்கேற்ப இந்தப் பிரிவுகள் இருந்தன. எகிப்திய அறிஞர் டாக்டர் தாஹா ஹூசைன் குறிப்பிடுவதை வைத்துப் பார்த்தால் மக்காவின் குரைஷி இன மக்கள், மதீனாவுக்கு இடம் பெயர்ந்து சென்ற முஸ்லீம்களுக்கு உதவி புரிந்த அன்சார்கள், நாடோடி அராபியர்கள், வென்றடக்கப்பட்ட நாட்டு மக்கள் - என்று நான்கு குழுக்கள் இருக்கின்றன. அவர்கள் குரானுக்குச் சொன்ன விளக்கங்கள் வேறு வேறு தான்.

முகம்மது நபி மறைந்த முப்பதே ஆண்டுகளுக்குள் முஸ்லீம் மன்னர்கள் உள்நாட்டுப் போரில் இறங்கினார்களே, கலிஃபாக்கள் சாராயத் தொட்டியில் மிதந்தார்களே! இஸ்லாமிய சட்டங்களைச் செல்லாததாக்கியவர்கள் யார்? தஸ்லிமா போன்றோரா? இஸ்லாமிய மன்னர்களா?

எங்கே இருக்கிறது 'தூய இஸ்லாமிய நெறி'? காஷ்மீர் முஸ்லீம்கள் சூஃபி வழிபாட்டைப் பின்பற்றுகிறார்கள். ஹிஸ்புல் முஜாகிதான் குழு பர்தா போடாத காஷ்மீரி பெண்களை பர்தா போடச் சொல்லி மிரட்டுகிறது. முஸ்லீம்கள் நாகூர் தர்காவுக்குப் போவதுகூட இஸ்லாமிய சட்டத்துக்குப் புறம்பானதுதான்.

அவ்வளவு ஏன், பெண்கள் நாடாளக்கூடாது என்பதுதானே இஸ்லாமியக் கோட்பாடு? தஸ்லிமாவுக்கு எதிராகப் போராடுவதற்கு முன்னால் வங்க தேசத்தின் பெண் அதிபருக்கு எதிராகவல்லவா அவர்கள் போராட வேண்டும்?

இஸ்லாமிய தத்துவம், கோட்பாடு போன்ற மண்டைகனக்கும் விஷயம் கூட வேண்டாம். சாதாரண சகோதரத்துவ கோட்பாட்டின் படி பார்த்தாலும் சவுதி செய்வது சரியா? ஈவிரக்கமற்ற முறையில் ஈராக் மீது குண்டுமாரி பொழிந்தது அமெரிக்கா.

ஈராக்கிய (முஸ்லீம்) குழந்தைகளை வியாபாரத்தடை மூலம் இன்னும் பட்டினி போடுகிறது. அந்த அமெரிக்காவின் கூட்டாளியான சவூதி அரசு இஸ்லாமிய துரோகி இல்லையா? 'சாத்தான்' இல்லையா? ஹஜ் யாத்திரை சென்ற முஸ்லீம்கள் சவூதி ஷேக்குகள் மீதல்லவா கல்லெறிந்திருக்க வேண்டும்? இந்தியாவில் சதாம் உசேனுக்கு ஜிந்தாபாத் போட்டு என்ன பயன்?

முஸ்லீம்களை கொல்லும் செர்பியாவுக்கு ருமேனியா வழியாக எண்ணெய் விற்றுப் பணம் கொள்ளை அடிக்கிறது ஈரான். குர்ரானில் எத்தனையாவது சூறாவில் எத்தனையாவது வசனத்தின் படி ஈரானின் நடத்தைக்கு அங்கீகாரம் இருக்கிறது?

யுகோஸ்லோவியா - சராஜெவோ முஸ்லீம்களுக்காக உலகெங்கிருந்தும் அனுப்பப்பட்ட 1747 விமான லோடுகள் உதவியில் மொத்த முஸ்லீம் உலகம் அனுப்பிய உதவி வெறும் 30 லோடுகள் மட்டுமே. இதுதான் இஸ்லாமியச் சகோதரத்துவமா? உலகளாவிய தரும நெறியா?

குரான் காலத்துக்கு ஒவ்வாதது என்று ஒருவர் விமரிசித்தால் காது கொடுத்து முல்லாக்கள் முதலில் கேட்கட்டும். குரான் காலத்தில் அடிமைத்தனம் இருந்தது; தோற்கடிக்கப்பட்ட நாடுகளில் கிடைக்கும் பெண்களை 'சட்டப்படி உரிமையாக்கிக் கொள்ள' (வசனம் 33:50) அனுமதி கொடுக்கிறது குரான். முஸ்லீம் பேரரசில் வெள்ளமெனப் பெருகிய அடிமைகள் பற்றி வரலாறு ஏராளமாகக் கூறுகிறது. மூஸா பின் நூஸைர், ஆப்பிரிக்காவிலிருந்து 3 லட்சம் அடிமைகளைப் பிடித்து வந்ததும், ஸ்பெயினில் காதிக் (GOTHIC) பிரபுக்கள் குடும்பங்களிலிருந்து 30,000 கன்னிப் பெண்களைக் கைப்பற்றியதும் வரலாறு. அடிமைகளைச் சட்டப்படி உரிமையாக்கிக் கொள்ள குரான் வழங்கும் அனுமதி இப்போது செல்லுமா? அதை அமல் படுத்தக் கோருவார்களா இந்த மதவெறியர்கள்? முகமது நபி காலத்திலேயே இருந்தாலும், அடிமைத்தனம் சகோதரபாசத்துக்கு நேர் எதிர் அல்லவா? இது ஒரு சோற்றுப்பதம்தான். இன்னும் எவ்வளவோ இருக்கிறது.

குரான் காலத்துக்கு ஒவ்வாதது என்று வரலாறு நிரூபித்து வருகிறது. அதை முஸ்லீம்களே நிரூபிக்கிறார்கள். ஆண் ஆதிக்கவாதிகளும் பணம் படைத்தவர்களும் மத முகமூடி போட்டு நாடகம் ஆடுகிறார்கள். விமரிசிப்பவர்களை எதிர்ப்பவர்களின் உண்மை முகம் இதுவே.

கலீஃபா உத்மான் சொந்த உறவினர்களுக்கு அரசுக்கருவூலத்தில் கைவைத்து தாராளமாகச் செலவு செய்தார். ஆனால், இவருக்கு முன்னாலிருந்த கலீஃபா உமர் அப்படிச் செய்யவில்லை; அவர் கடுமையான ஒழுக்கவாதி. உத்மான் சொன்னாராம்; ''உமர் இறை பயத்தினால் உறவினர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை; நான் இறை பயத்தினாலேயே உறவினர்களுக்குக் கொடுக்கிறேன்''. குரானில் வரும் உறவினரைப் பாதுகாப்பது குறித்த 'சிலா-ஏ-ரஹ்மி' என்ற பண்பை உத்மான் என்ன 'நயமாக'க் கையாண்டார் பார்த்தீர்களா? உமரும் குர்ஆனைக் காட்டினார்; உத்மானும் குரானைத்தான் காட்டுகிறார். குரானை எப்படி வளைக்கலாம் என்று முகமதுநபி மறைந்து 30 ஆண்டுகளிலேயே வளைத்துக் காட்டி வரலாறும் படைத்து விட்டார்கள் முஸ்லீம் ஆட்சியாளர்கள். வரலாற்றுக்குப் பதில் சொல்ல வக்கற்றவர்கள் தஸ்லிமாவைத் தூக்கில் போடத் துடிக்கிறார்கள்.

இந்தியாவில் ஷாபானு வழக்கில் நியாயமான ஜீவாம்சத்தை மறுத்து முல்லாக்களுக்கு வக்காலத்து வாங்கியது காங்கிரசு. இப்போது உத்தரப்பிரதேச சிவில் வழக்கொன்றில் நிலச் சொத்து விவகாரத்தில் தொடங்கி, மும்முறை தலாக் கூறி (ORAL) விவகாரத்து செய்வது செல்லுபடியாகாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. உடனே சீர்திருத்தம் பற்றிக் கூட சிந்திக்காமல் அவசர அவசரமாக ஷரீஅத் கோர்ட்டுகளை சட்டரீதியாகவே அங்கீகரித்து விட்டது காங்கிரசு அரசு.

ஷரீஅத் சட்டங்கள் குரானிலிருந்தும், நபிகள் வாழ்க்கை அனுபவமான சுன்னாவிலிருந்தும் தொகுக்கப்பட்டவை என்று சொல்லப்படுகின்றன. இவை காலகாலமாக மாறாது காக்கப்படும் புனிதச் சரக்கு அல்ல; இஸ்லாமிய ஆட்சி நடக்கும் நாடுகளில் எத்தனையோ முறை இவை மாற்றப்பட்டு விட்டன.

ஷரீஅத் கோர்ட் முல்லாக்களின், ஆண்-ஆதிக்க, ஆளும்வர்க்க நபர்களின் கரங்களில் ஓர் ஆயுதம். முஸ்லீம் அல்லாதவர்களுக்கு இதனால் முஸ்லீம் பெண்கள், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் தான் பாதிப்படைவார்கள்.

அவர்கள் மத்தியிலிருந்து தஸ்லிமா போன்ற கலகக் குரல்கள் உருவாகி விடக்கூடாதென்றுதான் வெறியர்கள் காட்டுக்கூச்சல் போடுகிறார்கள். கலகக்குரல்கள் இல்லாமல் ஜனநாயகம் பிறக்காது; மத வெறியர்களுக்கு வரலாற்றுப் பாடங்கள் உதவுவதில்லை.

எவ்வளவுதான் உயர்ந்த நோக்கத்துக்காக ஒரு மதம் உருவாகியிருந்தாலும், காலம் கடந்தது என்றால் அது காலம் கடந்தது தான்.

ஒட்டகம் அருமையான பயண ஊர்தி; ஆனால் இன்றைய அராபிய ஷேக்குகள் ஒட்டகத்தின்மேல் பயணம் செய்வதில்லையே!. டெல்லி நட்சத்திர ஓட்டல்களில் வந்து தங்கும் ஷேக்குகளின் அறைக்கதவை உடைத்து உள்ளே நுழைந்து பாருங்கள், அவர் கரங்களில் குரான் தவழ்வதில்லை.

● க.மு

நன்றி : புதியகலாச்சாரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண் என்றால் கருவிலேயே கொல்லுகிறார்கள்

ஐந்து மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை நேரம். பத்திரிக்கைகள் பரபரப்பாக விற்றன. ''ஆஸ்பத்திரியிலிருந்து ஓர் ஆண் குழந்தையைக் காணோம்!''—கொட்டை எழுத்துக்களில் விளம்பரங்கள் அலறின. பிறந்து இரண்டே நாட்களான ஆண் குழந்தை ஒன்று — சிறு நீரகக் கோளாறு என்று ஆஸ்பத்திரியில் அனுமதித்திருந்தார்கள் — இப்போது காணோம்!

ஆஸ்பத்திரி ஆயாமீது சந்தேகப்பட்டார்கள். அது நிரூபிக்கப்பட்டது. ''ஆண் குழந்தை கொண்டு வராமல் வீட்டுக்குவராதே!'' என்று அவள்கொழுந்தன் கட்டளை போட்டானாம். ஒரு மாதத்துக்கு முன்னால் அவள் தங்கை ஆண் மகவைப் பெற்றாள்; அப்போதே உடல் சுகமில்லாமல் செத்து விட்டது. அதனால்தான் கொழுந்தன் மிரட்டியிருக்கிறான். அக்காளின் வாழ்வுக்காக தங்கை கொடிய திருட்டையே செய்யத் துணிந்தாள்.

இப்படி ஒருவரல்ல, ஆயிரக் கணக்கான பெண்கள் இந்தியாவெங்கும் நாட்டுப்புறத்திலும், நகர்ப் புறத்திலும் பயமுறுத்தப்படுகிறார்கள்; ''ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றுக் கொடுக்க வக்கற்ற சாக்கடை வயிறே!'' என்று ஏசப்படுகிறார்கள்; ஈவிரக்கமேயில்லாமல் கொலைகள்கூடச் செய்யப்படுகிறார்கள்.

குழந்தை பெறாததற்குக் காரணம் தன் மகனா, மருமகளா என்றுநிரூபிக்கக்கூட முடியாத நிலையில், முதலாமவள் இருக்கும் போதே இரண்டாவதாக ஒரு பெண்ணை அதிக வரதட்சணைக்குப் பெறத் துடிக்கிறாள் ஒரு மாமியார்க்காரி. இவர்களது கருத்துக்களுக்கு அடி எடுத்துக் கொடுத்த 'கடவுளின் வாக்கு' என்று சொல்லப்படும் அதர்வண வேதமும் இதையே ஆதியில் சொன்னது: ''பெண் குழந்தை வேறெங்காவது பிறக்கட்டும்; இங்கே ஓர் ஆண் மகவை அருள்வாயாக!''

பிறந்த பிறகு மட்டுமல்ல, பிறப்பதற்கு முன்பே கருவிலேயே ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்து பெண் என்றால் அது வளருவதற்குள் அபார்ஷன் செய்து அழித்து விடுவது இப்போது நடக்கத் தொடங்கி விட்டது. இது 'நாகரீகமான' முறையிலே பிற்போக்காளர்கள் தொடர்ந்து நடத்தும்நரபலிகள்.

இந்த முறைக்கு உயிரியல் பெயர் அம்னியோசெண்டசிஸ் (பார்க்க: பெட்டிச் செய்தி) ஒரு சில நேர்மையான உள்ளம் கொண்ட மருத்துவர்கள் தவிர ஆயிரக் கணக்கான மருத்துவர்களும், மருத்துவ நிறுவனங்களும் புதிய பிழைப்பிலே புகுந்து விட்டார்கள்.

அமெரிக்காவில் படித்துத் திரும்பிய மருத்துவர்கள் புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டு வந்தார்கள். ''உங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என்றறிய வேண்டுமா? இங்கே மேல் நாட்டில் செய்வது போல முதல் தரமாகச் சோதிக்கப்படும்!'' இங்கே உள்ள மூட நம்பிக்கையும் ஃபாரின் (அந்நிய) மோகமும்—இவர்களுக்குப் பிழைப்புக்கான வழி.

''இப்போது ரூ 80 செலவழித்தால் போதும்; பின்னால் ரூ 5000 சேமிக்கலாம்'' என்று விளம்பரப்படுத்துகிறார்கள். அதாவது அபார்ஷனுக்கு ரூ80 தான்; பெண் கருவைக் கலைத்து விட்டால், பெரிதாக வளர்ந்து வரதட்சணைக்காக ரூ 8000 செலவழிக்க வேண்டாமாம். முன்பு ரூ 500, ரூ 1000 என்றிருந்த கட்டணம் ரூ 200 ஆகக் குறைந்ததும், உழைக்கும் மக்களிடமும் இந்தச் சோதனைகளை நுழைத்து விட்டார்கள்.

பிழைப்புக் காரர்கள் அடுக்கடுக்காகக் காரணங்களைச் சொல்லி இந்தக் கொலைகளை நியாயப்படுத்துகிறார்கள்.

— தனக்கொரு மகன் பிறக்கும் வரை பிள்ளைகளைப் பெற்றுப் போட்டுக் கொண்டே இருக்க வேண்டாமல்லவா?

— ஒரு பெண் பிறப்பதைத் தடுப்பது சரிதானே? அலட்சியத்திலும் அடக்கு முறையிலும் அவள்வளர வேண்டாமில்லையா?

— மக்கள் தொகையில் பெண்கள் குறைந்தால் என்ன? அப்போது அவள் மதிப்பு தன்னால் உயர்ந்து போகும். பெண்கள்கிடைப்பதுஅரிதாகிப் போவதால் ஆண் வரதட்சணை கொடுக்க வேண்டி வரும்.

இவை என்ன வாதங்களா? கிறுக்குப் பிடித்தவனின் உளறல்கள். இவர்கள் முட்டுக் கொடுத்து நிலைக்கவைக்கிற நியதிகள் அழுகி நாறும் இன்றைய சமூக நியதிகள். 'ஆணே ஆதிக்க அதிபதி; பெண் விசுவாசமான அடிமை; சேவை செய்யப் பிறந்தவள்'—இதுதானே நிலப்பிரபுத்துவ நியதி?

ஈவிரக்கமில்லாமல் பெண்களை நடத்துமிந்தக் கொடியவர்கள் பெண்களின் உடம்புகளை என்ன




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வென்றுதான் எண்ணியிருக்கிறார்கள்? பெண் என்ன பரிசோதனைக் கூடமா? அவள் உடல் என்ன ஆவது? மனவேதனை எத்தனை?

அம்னியோ சென்டசிஸ் சோதனையால் வரும் கேடு களின் பட்டியலைப் பாருங்கள்:

- கரு முழுமையாக வளராமல் குறைப் பிரசவ மாகும்;
- ஊசியைக் குத்தி 'தாய் நீரை' எடுப்பதால், குழந்தைமீது ஆறாத கீறல்கள் விழும்;
- இடுப்புப் பட்டை இறங்கிப்போகும்; மூச்சி றைப்பு வரும்;
- மருத்துவ மனையில் நாலாம்தரமான சுத்தம் சுகாதாரம் இருப்பதால் கர்ப்பப்பைத் தடத்தில் எளிதில் தொற்று நோய்கள் தாக்கும்.
- இப்படிப்பட்ட அபார்ஷனுக்குப் பிறகு மறுபடி கருத்தரிக்காமல் போனால் அப் பெண்ணுக்கு மயக்கம் வருவது நிரந்தரமாகிவிடும்
- இந்தப் பரிசோதனைகள் பற்றி ஒன்றுமே யறியாமல் கணவன்/மாமியார்/கொழுந்தியாள்/கொழுந்தன் பலவந்தங்களால் செய்து கொண்டு விடுகிறாள். ஆனால் பெண் கருவை அழித்த பிறகு பெண்பாலுக்கு எதிராக இப்படிச் செய்து விட்டோமே என்ற குற்ற உணர்வினால் வாழ்வில் நீண்ட நாள் அவதிப்படுகிறாள்.

அவர்கள் நியாயமாகவே கேட்கிறார்கள் ''இதில் நாங்கள் படும் கஷ்டம் ஆண்களுக்கு என்ன தெரியும்?'' ஆம், பொறுப்பற்ற, நிலப்பிரபுத்துவ ஆண் ஆதிக்கக் காரர்களுக்கு எதுவும் தெரியாதுதான்.

வேறு யார் பொறுப்பாக இவர்களுக்காக வாதாடு வார்களாம்? அரசாங்கம் என்ன சொல்கிறது? ''மக்கள் தொகை பெருகுவதைத் தடுக்கலாம்'' என்கிறது. மக்கள் தொகைப் பிரச்சனை முதல் பிரச்சினையா? பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், குடி யிருப்பு இல்லாமை, சுகாதாரக் கேடுகள், மருத்துவ வசதி இல்லாமை ஆகிய தேவைகளில் தான் பிரச்சனை யே உள்ளது. இதைத் தீர்க்க வக்கற்ற சுரண்டும் அரசு வேறென்ன சொல்லும்?

பெண்ணைக் கருவிலே கொன்றுவிடும் அம்னியோ சென்டசிஸ்—அபார்ஷன் கொடுமை ஒருபுறம். சமூகத் தில் பெண்ணடிமையை வைத்துள்ளதால் நடக்கும் பெண்குழந்தைக் கொலைகள் இன்னொரு பக்கம்.

மதுரை உசிலம்பட்டியில், தேனி வட்டாரத்து கோட்டூர் கிராமத்தில் இது சாதாரண நிகழ்ச்சியாக நடக்கிறது. அரளிக் கொட்டையை அரைத்துக் கொடுத்துப் பெண் குழந்தை பிறந்தவுடனேயே கொன்று விடுவார்கள். ''இடுப்பு வலிக்கிற நேரம் சங்குல நல்லெண்ணெய் எடுத்துட்டு ஓடைப்பக்கம் போயி அங்கனயே புள்ளயப் பெத்து எருக்கம்பாலப் புடிச்சுக் குடுத்துட்டு வீட்டுக்குத் திரும்பின தாய்மார்களும் இருக்காங்க'' என்றுகிராமத்து மக்களே அறிக்கை படிக்கிறார்கள்.

சமூகம் சமூகமாகவே இக்கொலைகளை நடத்து வதன் பொருள் என்ன? பட்டினி, திருமணம்—சடங்கு —செலவுகளுக்கு ஈடுகொடுக்க முடியாத தட்டுப்பாடு தவிர, வாழ்க்கையில் நிரம்பி வழியும் ஆண் ஆதிக்க வரதட்சணை, மூட நம்பிக்கைகள். அவர்களே சொல் வதைக் கேளுங்கள்:

பெத்த பெண்பிள்ளையைக் கொல்லத் துணிகிற அளவுக்குப் பெண்களின் மனது இறுகிய பாறாங்கல்லா கியது அவளது உறுதியால் அல்ல, அடிமை வாழ்வின் பழக்கத்தால்.

பெண்ணடிமையை உடைத்தெறியும் ஜனநாயக பூர்வமான சமுதாயத்தை நாம் முன்னே வைத்து விடி வாகப் பேசினால், அடிமை எசமானர்கள் மூர்க்கமாகத் தாக்கிப் பேசுகிறார்கள். தத்தா என். பாய் என்ற மருத் துவரின் உளறல் இதோ: ''பல நூற்றாண்டுகளாக வாழையடி வாழையாக வரும் மரபுச் சிந்தனையை எப்படி நீங்கள் ஒதுக்கித் தள்ளலாம்—சும்மா ஆண்— பெண் சமத்துவம் பேசினால் போதுமா?...''

வாழையடி வாழையாக இருந்தால் அடிமை வாழ்வு நல்ல வாழ்வாகி விடுமா? மோகத்துக்கு என்று சொன் னால் சின்னவீடு, பெரிய வீடு எல்லாம் தேவை என்று பேசி 'அடிமை நான் தினமும் ஓதும் வேதம் நீ புதிய ராகம் நீ' என்று பாடும் அதே ஆசாமிகள் பெண்ணைப் பேதையாகவே வாழ வைத்துப் பிரச்சனை வரும்போ தெல்லாம் 'அழிவதெல்லாம் பெண்ணாலே!' என்று ஒரேயடியாக 'நச்' சென்று அடித்து விடுகிறார் கள்.

அம்னியோ சென்டசிஸை ஆதரித்து ஏன் வெறி யோடு வாதிடுகிறார்கள்? பழமை வெறி இங்கே சாய வில்லை—அதுவே அடிப்படைக் காரணம்.

அம்னியோ சென்டசிஸ் என்ற அறிவியல் செயல் முறையை நாம் எதிர்க்கவில்லை; பிற்போக்கு நடை முறைக்கு ஓர் ஆயுதமாக அதைத் தூக்குவதையே நாம் எதிர்க்கிறோம். உரிமையோடு ஒரு குழந்தை பிறப்பதில் தேர்ந்தெடுக்கவோ, கட்டுப்படுத்தவோ இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்த அருவெறுப்பான, அபாயகரமான வழியை நாம் எதிர்க்கிறோம். சமு தாய அறுவைச் சிகிச்சை இல்லாமல் இதை முற்றாகத் தூக்கி எறியவும் முடியாது. அதுவரை பிறக்கவிருக்கும் பெண் குழந்தைகளின் அலறல்கள் ஊமை அலறல்களா கவே தொடர்வதைப் பார்த்துக் கொண்டு குருடர்களாக நாம் வாழ முடியாது, வாழக் கூடாது.

நன்றி- புதிய கலாச்சாரம்
12/1986

## நிறைய சாப்பிடுங்கள்

'நிறைய சாப்பிடுங்கள்''
— கோஷங்கள் சொல்கின்றன,

'நிறைய மீன்கள்' 'நிறைய இறைச்சி'
நிறைய சோறு சாப்பிடுங்கள்
—கோஷங்கள் வற்புறுத்துகின்றன.

ஆனால்...... நானோ
சம்சாரியாகி வேலையில்லாத
மூன்றாவது வருடத்தில் இருக்கிறேன்.
எனக்கு
இந்தக் கோஷங்கள்
இப்படித்தான் பொருந்துகின்றன;

''நிறைய புல்லைச் சாப்பிடுங்கள்.''

—ஜோ கொர்ரி
ஸ்காட்லாந்து

www.tamilarangam.net

# கருக்கொலை செய்வது பெண் விடுதலையா அப்படியாயின் உங்கள் சிந்தனைக்கு

❶ குழந்தையைப் பெற்று எடுத்தால் அழகு கெட்டு விடும் என்பதால் கொல்லலாமா? இது எந்த வர்க்கத்துக்கு துணைபோவது ? அழகைக் காப்பாற்றக் கோரும் ஆணாதிக்கத்துக்கு துணைபோவது ஆகாதா? இதற்கும் பெண்விடுதலைக்கும் என்ன சம்பந்தம்?

❷ ஒரு முதலாளிக்குக் கீழ் வேலை செய்யும் போது பெண் கருத்தரிக்கக் கூடாது என்பதால் கொல்லலாமா? இது முதலாளிக்கு சேவை செய்யாதா? இதற்கு எதிராகப் போராடக் கூடாதா? இது வர்க்கப் போராட்டத்துக்கு எதிரானது இல்லையா? ஆணாதிக்க சமூக அமைப்பை பாதுகாப்பது அல்லவா?

❸ விபச்சாரத்தில் ஈடுபட்டு உருவான கரு என்பதால் கொல்லலாமா? இது சீரழிவுக்கு துணைபோவது இல்லையா? ஆணாதிக்க விளைவுகளைத் தொடர வழி வகுக்காதா? இது பெண் விடுதலையா ? விபச்சாரத்தை ஊக்குவிக்காதா?

❹ பொருளாதார நெருக்கடி என்பதால் கொல்லலாமா? குழந்தையை கொல்வதால் பொருளாதார நெருக்கடிக்கான சுரண்டல் அமைப்புக்கு துணைபோவது ஆகாதா? இது வர்க்கப் போராட்டத்துக்கு எதிரானது அல்லவா? குழந்தையைக் கொன்று பொருளாதாரத்தில் மீண்டு பெண்விடுதலையை அடைந்து விட முடியுமா?

❺ போகத்தைக் கருத்தில் கொள்ளும் போது பெண்ணின் வயிற்றில் உருவாகும் குழந்தையைக் கொல்லலாமா? இது சீரழிவைக் கோராதா? அராஜகவாதத்தைக் கோராதா?(மார்க்சிய அர்த்தத்தில்) இதைச் செய்தால் அப் பெண் பெண்ணிலைவாதியா?

❻ தவறான உறவு முறையால் (சமூகத்துக்குப் பயந்த கள்ள உறவு) உருவான கரு என்பதால் கொல்லலாமா? இது ஆணாதிக்க சமூகக் கட்டுமானத்தைக் காப்பாற்றாதா ? தவறான உறவுக்கு போக காரணமான இவ் ஆணாதிக்க சமூகத்துடன் சமரசத்தை நாடாதா?

❼ வீட்டுப் பிரச்சனை என்பதால் கொல்லலாமா ? வீடு தர வேண்டிய சுரண்டல் எதிராகப் போராடுவதை தடுக்காதா? அழித்தால் வீடு கிடைத்து விடுமா? பெண் விடுதலை பெற்று விடுவாளா? வீட்டுப் பிரச்சனையில் (குறிப்பாக இதில்) எங்கே ஆணாதிக்கம் உள்ளது ?.

❽ சமுதாயம் கேவலமாகக் கருதும் என்பதால் கொல்லலாமா? இது இவ் ஆணாதிக்க சமூகத்தை பேணாதா? ஆணாதிக்கத்துக்கு எதிரான போரை நிராகரிக்கவில்லையா?

❾ ஆண் கணவன் கூறினார் என்பதால் கொல்லலாமா? இது ஆணாதிக்கத்துக்கு துணைபோவது இல்லையா? இதில் எங்கே பெண் விடுதலை உண்டு?.

❶⓿ மாமியார் கூறினார் என்பதால் கொல்லலாமா? இது மாமியாரின் ஆணாதிக்க செயற்பாட்டுக்கு துணைபோவது இல்லையா?

❶❶ பெண்குழந்தை (ஆண்குழந்தை வேண்டும் என்பதால்) என்கதால் கொல்லலாமா? அப்படியாயின் இது பெண்விடுதலையா? பெண்விடுதலைக்கு எதிரானது இல்லையா ?

இது போன்ற நாம் விட்டுவிட்ட எந்தப்பிரச்சனையையும் எடுத்து நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். பெண் விடுதலை என்பது என்ன? பெண்விடுதலை வர்க்கப் போராட்டத்தை நிராகரித்துப் பெறமுடியுமா? வர்க்கப் போராட்டம் ஊடாகவே பெண்விடுதலையை அடைய முடியும் எனின் கருக்கொலைக்கான காரணங்கள் பெண்விடுதலைக்கு உட்பட்டது இல்லையா? வர்க்கப் போராட்டத்துக்கு உட்பட்டது இல்லையெனின் எது வர்க்கப் போராட்டக் காரணிகள்? (குறிப்பாகப் பெண்களுக்கு). இவை உங்கள் சிந்தனைக்கு !

✉ தொடர்பு முகவரி:
"SAMAR"
87,Rue De Colombes
92600- Asnieres Sur Seine
FRANCE

சந்தா அனுப்ப வேண்டிய தபாற்கணக்கு:—
2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUESFRANCE

சந்தாவுக்கான அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | 60 F |
| | 12 பிரதிகள் | 120 F |
| ஐரோப்பிய நாடுகள் | 6 பிரதிகள் | 100 F |
| | 12 பிரதிகள் | 200 F |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | 225 F |

வாசகர்களே! உங்களிடமிருந்து ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானமும் மாற்றுமொழிக்கட்டுரைகளும்

நாம் ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம் மீது இவ்விவாதத்தை நடத்த இக்கட்டுரை எழுதப்பட வில்லை. மாறாக ஐரோப்பிய பாராளு மன்ற தீர்மானத்தை ஐரோப்பிய கொள்ளைக்கு துணைபோகும் மொழிபெயர்ப்பு அல்லது மாற்று மொழி கட்டுரைகளை ஒட்டியும், அவை எதைச் சாதிக்கின்றன என்பதை ஒட்டியும் விவாதிக்க முனைகிறோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று முடக்கப்பட்டு முன்னேற முடியாதும், பின்னேறமுடியாதது மான ஒரு இக்கட்டில் தொடரும் நடவடிக்கை ஊடாக இருபகுதி யினரும் நிலையாக வைத்திருக்க விரும்புகின்றனர். இதன் ஊடாக தத்தம் வர்க்க இருப்புக்களை பாதுகாக்கவும், ஏகாதிபத்தியத்துக்கு சேவையைத் தொடர முனைகின் றனர்.

தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் மாற்றுக் கருத்துக்கள் அற்று சூனியமான நிலையில், இன்று செய்வதறியாது திகைத்துப் போய் நிற்கின்றது. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை புலிகள் தமது வர்க்க நலனுக்கு இசைவாக மொத்தத்தில் குத்தகைக்கு எடுத்து வைத்துள்ளனர். இதனால் பல ஆயிரம் தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். வெளியேறி வருகின்றனர். இந்த வகையில் எம் மண்ணில் மாற்றுக் கருத்துக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டதால், புலம் பெயர்ந்த நாடுகளில் தமது கருத்துக்களை வெளியில் முன்வைத்து வருகின்றனர். இதே நேரம் மாற்று மொழிகளில் மொழி பெயர்ப்பாகவும், நேரடியாகவும் கருத் துக்கள் முன் வைக்கப்படுகின்றன. இன்று மாற்று மொழியில் கருத்துக்களை வெளியிடுவோர் மூன்று பிரிவுக்குள் அடங்குவர்.

1. துரோகக் குழுக்கள் மாற்று மொழியில் வெளியிடும் கருத்துக்கள்.

2. புலிகள் மாற்று மொழியில் வெளியிடும் கருத்துக்கள்.

3. இரண்டும் இல்லாதோர் வெளியிடும் கருத்துக்கள்.

மூன்று பிரிவினரும் தமிழீழத்தை உச்சரித்தபடியே, தமிழ் மக்களுக் காக என்ற கோசத்தின் அடிப்படையில் கருத்துக்களை வெளியிடுகின்றனர். நாம் 1, 2 பிரிவினரை ஒட்டி சுருக்கமாகக் கூறி பின் விடயத்துக்கு வருகின் றோம்.

துரோகக் குழுக்கள் அரசுடனும், இந்தியாவுடனும் கூடிக் குலவியபடி புலிக்கு எதிராக புலி எதிர்ப்பை உயர்த்துகின்றனர். அரசை எதிர்க்காது அவர்களின் கால்களை நக்கியபடி புலிக்கு எதிராக சர்வதேச அளவில் புலிக்கு எதிராக மாற்று மொழியில் முடிந்தளவு பிரச்சாரம் செய்கின்றனர். இவர்கள் புலி எதிர்ப்பின் ஊடாக தமிழ் ஈழப் போராட்டத்தை ஏலம் விடுகின்றனர். சொந்த மக்களை நம்பி அணி திரட்ட முடியாதவர்கள், ஏகாதி பத்தியங்களிடமும், தூதுவராலயங் களிலும் ஏகாதிபத்திய பொருளாதார சார்பு ஸ்தாபனங்களிலும் ஏகாதிபத் திய பொருளாதார மன்னிப்புச் சபை களுக்கு மாற்று மொழி மூலம் புலி எதிர்ப்பை உயர்த்தி அதன் ஊடாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுக்கின்றனர்.

இரண்டாவதாக மாற்று மொழிக் கட்டுரைகளை வெளியிடும் புலிகள் தமது நிலையைப் பேண, உண்மை நிலையை மறைத்தபடி தமிழீழத்துக்காக குரல் கொடுக்கின் றனர். இவர்களின் வெளியீடும் ஏகாதிபத்திய நிறுவனத்துக்கும் தூதுவராலயத்துக்கும் என மட்டுமே வெளியிடப்படுகின்றன. இந்த நிலைமை என்பது புலிகளை அங்கீகரிக்க இவ் ஏகாதிபத்தியத் தைக் கோரி வெளிவருவனவே. ஆனால் இதில் தமிழீழப் போராட் டம் பிழையானதென்றும் ஏகாதிபத் திய தயவுக்காக நியாயப்படுத்தப்படுகி ன்றது.

மூன்றாவது பிரிவினரின் மாற்று மொழி வெளியீடுகள் எனப் பல வெளிவருகின்றன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மனித உரிமை களுக்கான ஆசிரியர்கள் வெளியீடுகள் முதல் பல வெளிவருகின்றன. இவ் வெளியீடுகளின் நோக்கம் என்ன என்பதை நாம் மிகத் தீர்மானகரமாக ஆராயும் போது அதிர்ச்சி அளிப்பன வாகவே உள்ளன. இவை அனைத்தும் மாற்றுக் கருத்துக் கள் என்ற அடிப்படையில் வெளி வருவதுடன், கொலைப் பயமுறுத் தல்களையும் எதிர் கொள்கின்றன. இவ் வெளியீடுகளின் நோக்கத்தை ஆராயும் முன் சில விடயங்களை ஒட்டி நாம் பார்ப்போம். இன்று தமிழ் பேசும் மக்களின் தமிழீழப் போராட்டமும் அதன் வெற்றியுமே தமிழ்த் தேசிய இனம் உயிர் வாழ்வதற்கான அடிப்படையாகும். தமிழ் தேசிய விடுதலையை விரும்பும் மாற்றுக் கருத்துள்ளோர் அனைவரும் புலிகளின் கொலைப் பயமுறுத்தல் ஊடாக தப்பி ஓடி வந்தவர்கள். இந்த நிலையில் மாற்றுக் கருத்துள்ளோர் தமது கருத்துச் சுதந்திரத்துக்காக போரா டும் போது அது தமிழ் மக்களின் தேசிய நலன்களைக் காட்டிக்கொடுப் பதாக அமையக் கூடாது.

இன்று புலிகளின் அரசியல் போக்கை அம்பலப்படுத்தும் போது அதன் பின் தமிழ் மக்களின் தேசிய நலன்களும் இணைந்துள்ளன என்பதை எக்காரணம் கொண்டும் நிராகரிக்க முடியாது. எந்த மாற்றுத் தலைமையும் இன்றி புலிகளை அழிக்கும் போது தமிழீழப் போராட்டமும் சேர்ந்தே அழியும் என்பதை நிராகரிக்க முடியாது. புலிகளை அம்பலப்படுத்தும் போது மாற்றுத் தலைமையால் படிப்படியாக தமிழீழப் போராட்டம் மாற்று ஈடு செய்யப்பட வேண்டும். புலிகளின் பாசிசப்போக்கு அழியும் போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கு இன்னுமொரு சக்தி அப் போராட்டத்தை தலைமை தாங்க வேண்டும். இதன் அடிப்படையில் மட்டுமே மாற்றுக் கருத்துக்கள் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை நியாயப்படுத்தும். இல்லாத வரை அவை சிறிலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் துணை போவதுமாகவே அமையும்.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து இந்தியாவில் புலிகள் தடை செய்யப்பட்டனர். இத்தடையை எதிர்த்த நாம் இது ஈழப் போராட்டம் மீதான தடை என சுட்டிக் காட்டி வந்தோம். புலிகளின் தடையின் பின் சகல தமிழீழ சார்புக் குழுக்கள் மட்டுமல்லாது, ஈழப் போராட்டத்துக்கு ஆதரவான இந்திய மக்களையும் தடாச் சட்டத்தின் கைது செய்து அடைத்தனர். ஈழப் போராட்டம் மீதான அனைத்தும் தடை செய்யப்பட்டன. புலிகளின் தடையின் பின் ஈழப் போராட்டமே தடையாக மாறி தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டம் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது. இது போன்று ஐரோப்பிய தீர்மானம் புலிகளின் மீது அல்ல மாறாக ஈழப் போராட்டம் மீதான தடையாகவே வெளிப்படும். இதற்கு புலிகளின் வன்முறையும், மாற்றுத் தலைமை பற்றிய நோக்கம் இன்றி வெளிவருவனவற்றில் பல்கலைக் கழக மாற்று மொழி கட்டுரையும் உதவியுள்ளன.

மாற்றுக் கருத்துக்கள் சொந்த மக்களிடத்தில் மாற்றுத் தலைமையை உருவாக்குவதற்காகவும் மாற்று மொழிகள் புரட்சிகர சக்திகளுக்கும் சாதாரண மக்களுக்காகவும் இருக்க வேண்டும். இல்லாத அனைத்து வெளியீடுகளும் தமிழீழப் போராட்டத்தை காட்டிக் கொடுப்பதாகவே அமையும்.

இவ் மாற்றுக் கருத்து கொலைப் பயமுறுத்தலை எதிர் கொண்ட போதும் அக் கருத்துக்கள் மீது கடுமையான விமர்சனத்தை வைப்பது தவிர்க்க முடியாதது. ஏனெனில் புலிஎதிர்ப்பின் பின் தமிழ் ஈழப் போராட்டம் காட்டிக் கொடுக்கப்படுகின்றது. துரோகக் குழுக்களின் நடவடிக்கைக்கு எந்த விதத்திலும் இவை குறைந்தவை அல்ல.

இந்த வகையில் யாழ் பல்கலைக்கழக மனித உரிமைக்கான ஆங்கில வெளியீடுகளின் நோக்கம் என்ன ? அவை யாருக்கு விநியோகிக்கப்படுகின்றன? என ஆராயும் போது அதிர்ச்சி அளிப்பனவாக உள்ளன. மேற்கு நாடுகளில் 10 க்கு மேற்பட்ட முற்போக்கு சஞ்சிகைகள் வெளி வந்தபோது இவ் பல்கலைக் கழக ஆசிரியர் அறிக்கையை இவர்களில் பலர் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக இந் நாடுகளின் அரசு சார்பு நிறுவனங்களும் மனித உரிமை என்ற பெயரில் இயங்கும் ஏகாதிபத்திய பொருளாதாரத்தை காப்பாற்றும் நிறுவனங்களும் ஒழுங்காகப் பெற்றுக் கொள்கின்றன.

பல்கலைக் கழக ஆசிரியர்கள் வெளியீடுகள் ஒரு புரட்சிகர அரசியல் பிரச்சார ஏடாக வெளிவருவதில்லை. யாராவது புரட்சிகர ஏடு என வாய் கிழிய கூற முற்படின் ஐரோப்பிய பாராளுமன்றம் முட்டாள்கள் என வாதிட முனைவதாகும். ஐரோப்பிய பாராளுமன்றம் பல்கலைக்கழக வெளியீட்டைப் போற்றியும் அதன் எழுத்தாளர்களை பாதுகாக்கவும் கோரியுள்ளனர். இது மாற்றுக் கருத்துக்களைப் பாதுகாப்பது அல்ல. மாறாக தமது நலனுக்கு பல்கலைக் கழக ஆசிரியர் வெளியீட்டைப் பயன்படுத்தி உள்ளனர். அதற்கு பல்கலைக் கழக ஆசிரியர் குழுவும் துணை போய் உள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் வெளியீடு புலி, அரசு, துரோகக் குழுக்கள் என எல்லோரையும் விமர்சித்த போதும் அதன் நோக்கம் என்ன? அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ தமிழீழப் போராட்டத்தை புலி எதிர்ப்பின் ஊடாக தாரை வார்க்க முனைந்துள்ளனர்.

இவ் வெளியீட்டை வெளியிடுபவர்கள் புலிகளின் அரசியல் போக்கை விமர்சிக்க அம்பலப்படுத்த விரும்பலாம். ஆனால் யாருக்கு? அது தமிழ் பேசும் மக்களுக்கும், சர்வதேச ரீதியாக புரட்சிகர பிரிவினருக்குமாக இருக்க வேண்டும். ஆனால் இவ் வெளியீடு ஒரு புரட்சிகர வெளியீடு அல்லாததும் புரட்சிகர பிரிவினர் மீது அக்கறை இன்மையும், இன்று மாற்றுத் தலைமைக்காக முனையும் சஞ்சிகைகள் மீது அக்கறை இன்றியும் அம்பலப்படுத்தலைச் செய்கின்றனர். புலிகளுக்குப் பதில் மாற்றுத் தலைமையை உருவாக்கும் அடிப்படையில், அதன் கோரிக்கை மீது, அது சார்ந்த மக்கள் கூட்டம் மீது இவ் வெளியீடு வரவில்லை. மாறாக இவர்களுக்கு அப்பால் எல்லா தூதுவராலயங்களுக்கும், மனித உரிமை என்ற பெயரால் ஏகாதிபத்திய கொள்ளைகளை நியாயப்படுத்தும் சங்கங்களுக்கும், வெளி நாட்டில் இயங்கும் அரசு சார்பு, சார்பில்லாத இவ் ஏகாதிபத்திய அமைப்பை பேணும் நிறுவனத்துக்குமாகவே இவ் வெளியீடுகள் வெளிவருகின்றன.

புலிகளின் அரசியல் போக்கும், அதை ஒட்டியும் இவ் ஏகாதிபத்தியத்திற்கு எந்த கவலையும் கிடையாது. அது போன்று இவ் ஏகாதிபத்தியத்தில் உள்ள 90 வீதமான பத்திரிகைகளுக்கும் கவலை கிடையாது. இந்த மாதிரியான புலிகளின் பாசிசப் போக்கின் ஊடாகவே தமது ஏகாதிபத்திய பொருளாதார நலன்கள் பாதுகாக்கப்படும் என நம்புகின்றனர். எனவே பாசிசப் போக்கை ஊக்குவித்து வளர்த்து விடுவார்கள். இந்த வகையில் அரசு, புலிகள் என இரு தரப்பினருக்கும் இவர்கள் தேவையான உதவி செய்து வளர்ப்பவர்கள்.

இன்று ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம் புலிகளுக்கு எதிராக வெளிவந்துள்ளது. இது எதிர்பார்க்கக்கூடியதே. இலங்கையை தமது நலனுக்கு இசைவாக நகர்த்த இது அவசியமான தேவையாகவுமுள்ளது. இந்தியா அநுராதபுர தாக்குதலை புலிகள் ஊடாக செய்வித்து சிறிலங்கா அரசை தனது நலனுக்கு இசைவாக பயன்படுத்த முனைந்தது. அதுபோல் புலிகளின் மீதான ஐரோப்பிய தீர்மானம் அரசை தமது நலனுக்கு இசைவாக பயன்படுத்தவும், அதே நேரம் புலிகளை முற்றாக தமது கட்டளைகளுக்கு சரணடைய வைக்கவும் எடுக்கப்பட்ட முயற்சியே. இதை நாம் இந்தியாவின் பல நடவடிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கு இன்னுமொரு சக்தி அப் போராட்டத்தை தலைமை தாங்க வேண்டும். இதன் அடிப்படையில் மட்டுமே மாற்றுக் கருத்துக்கள் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை நியாயப்படுத்தும். இல்லாத வரை அவை சிறிலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் துணை போவதுமாகவே அமையும்.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து இந்தியாவில் புலிகள் தடை செய்யப்பட்டனர். இத்தடையை எதிர்த்த நாம் இது ஈழப் போராட்டம் மீதான தடை என சுட்டிக் காட்டி வந்தோம். புலிகளின் தடையின் பின் சகல தமிழீழ சார்புக் குழுக்கள் மட்டுமல்லாது, ஈழப் போராட்டத்துக்கு ஆதரவான இந்திய மக்களையும் தடாச் சட்டத்தின் கைது செய்து அடைத்தனர். ஈழப் போராட்டம் மீதான அனைத்தும் தடை செய்யப்பட்டன. புலிகளின் தடையின் பின் ஈழப் போராட்டமே தடையாக மாறி தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டம் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது. இது போன்று ஐரோப்பிய தீர்மானம் புலிகளின் மீது அல்ல மாறாக ஈழப் போராட்டம் மீதான தடையாகவே வெளிப்படும். இதற்கு புலிகளின் வன்முறையும், மாற்றுத் தலைமை பற்றிய நோக்கம் இன்றி வெளிவருவனவற்றில் பல்கலைக் கழக மாற்று மொழி கட்டுரையும் உதவியுள்ளன.

மாற்றுக் கருத்துக்கள் சொந்த மக்களிடத்தில் மாற்றுத் தலைமையை உருவாக்குவதற்காகவும் மாற்று மொழிகள் புரட்சிகர சக்திகளுக்கும் சாதாரண மக்களுக்காகவும் இருக்க வேண்டும். இல்லாத அனைத்து வெளியீடுகளும் தமிழீழப் போராட்டத்தை காட்டிக் கொடுப்பதாகவே அமையும்.

இவ் மாற்றுக் கருத்து கொலைப் பயமுறுத்தலை எதிர் கொண்ட போதும் அக் கருத்துக்கள் மீது கடுமையான விமர்சனத்தை வைப்பது தவிர்க்க முடியாதது. ஏனெனில் புலிஎதிர்ப்பின் பின் தமிழ் ஈழப் போராட்டம் காட்டிக் கொடுக்கப்படுகின்றது. துரோகக் குழுக்களின் நடவடிக்கைக்கு எந்த விதத்திலும் இவை குறைந்தவை அல்ல.

இந்த வகையில் யாழ் பல்கலைக்கழக மனித உரிமைக்கான ஆங்கில வெளியீடுகளின் நோக்கம் என்ன ? அவை யாருக்கு விநியோகிக்கப்படுகின்றன? என ஆராயும் போது அதிர்ச்சி அளிப்பனவாக உள்ளன. மேற்கு நாடுகளில் 10 க்கு மேற்பட்ட முற்போக்கு சஞ்சிகைகள் வெளி வந்தபோது இவ் பல்கலைக் கழக ஆசிரியர் அறிக்கையை இவர்களில் பலர் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக இந் நாடுகளின் அரசு சார்பு நிறுவனங்களும் மனித உரிமை என்ற பெயரில் இயங்கும் ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தை காப்பாறும் நிறுவனங்களும் ஒழுங்காகப் பெற்றுக் கொள்கின்றன.

பல்கலைக் கழக ஆசிரியர்கள் வெளியீடுகள் ஒரு புரட்சிகர அரசியல் பிரச்சார ஏடாக வெளிவருவதில்லை. யாராவது புரட்சிகர ஏடு என வாய் கிழிய கூற முற்படின் ஐரோப்பிய பாராளுமன்றம் முட்டாள்கள் என வாதிட முனைவதாகும். ஐரோப்பிய பாராளுமன்றம் பல்கலைக்கழக வெளியீட்டைப் போற்றியும் அதன் எழுத்தாளர்களை பாதுகாக்கவும் கோரியுள்ளனர். இது மாற்றுக் கருத்துக்களைப் பாதுகாப்பது அல்ல. மாறாக தமது நலனுக்கு பல்கலைக் கழக ஆசிரியர் வெளியீட்டைப் பயன்படுத்தி உள்ளனர். அதற்கு பல்கலைக் கழக ஆசிரியர் குழுவும் துணை போய் உள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் வெளியீடு புலி, அரசு, துரோகக் குழுக்கள் என எல்லோரையும் விமர்சித்த போதும் அதன் நோக்கம் என்ன? அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ தமிழீழப் போராட்டத்தை புலி எதிர்ப்பின் ஊடாக தாரை வார்க்க முனைந்துள்ளனர்.

இவ் வெளியீட்டை வெளியிடுபவர்கள் புலிகளின் அரசியல் போக்கை விமர்சிக்க அம்பலப்படுத்த விரும்பலாம். ஆனால் யாருக்கு? அது தமிழ் பேசும் மக்களுக்கும், சர்வதேச ரீதியாக புரட்சிகர பிரிவினருக்குமாக இருக்க வேண்டும். ஆனால் இவ் வெளியீடு ஒரு புரட்சிகர வெளியீடு அல்லாததும் புரட்சிகர பிரிவினர் மீது அக்கறை இன்மையும், இன்று மாற்றுத் தலைமைக்காக முனையும் சஞ்சிகைகள் மீது அக்கறை இன்றியும் அம்பலப்படுத்தலைச் செய்கின்றனர். புலிகளுக்குப் பதில் மாற்றுத் தலைமையை உருவாக்கும் அடிப்படையில், அதன் கோரிக்கை மீது, அது சார்ந்த மக்கள் கூட்டம் மீது இவ் வெளியீடு வரவில்லை. மாறாக இவர்களுக்கு அப்பால் எல்லா தூதுவராலயங்களுக்கும், மனித உரிமை என்ற பெயரால் ஏகாதிபத்திய கொள்ளைகளை நியாயப்படுத்தும் சங்கங்களுக்கும், வெளிநாட்டில் இயங்கும் அரசு சார்பு, சார்பில்லாத இவ் ஏகாதிபத்திய அமைப்பை பேணும் நிறுவனத்துக்குமாகவே இவ் வெளியீடுகள் வெளிவருகின்றன.

புலிகளின் அரசியல் போக்கும், அதை ஒட்டியும் இவ் ஏகாதிபத்தியத்திற்கு எந்த கவலையும் கிடையாது. அது போன்று இவ் ஏகாதிபத்தியத்தில் உள்ள 90 வீதமான பத்திரிகைகளுக்கும் கவலை கிடையாது. இந்த மாதிரியான புலிகளின் பாசிசப் போக்கின் ஊடாகவே தமது ஏகாதிபத்திய பொருளாதார நலன்கள் பாதுகாக்கப்படும் என நம்புகின்றனர். எனவே பாசிசப் போக்கை ஊக்குவித்து வளர்த்து விடுவார்கள். இந்த வகையில் அரசு, புலிகள் என இரு தரப்பினருக்கும் இவர்கள் தேவையான உதவி செய்து வளர்ப்பவர்கள்.

இன்று ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம் புலிகளுக்கு எதிராக வெளிவந்துள்ளது. இது எதிர்பார்க்கக்கூடியதே. இலங்கையை தமது நலனுக்கு இசைவாக நகர்த்த இது அவசியமான தேவையாகவுமுள்ளது. இந்தியா அநுராதபுர தாக்குதலை புலிகள் ஊடாக செய்வித்து சிறிலங்கா அரசை தனது நலனுக்கு இசைவாக பயன்படுத்த முனைந்தது. அதுபோல் புலிகளின் மீதான ஐரோப்பிய தீர்மானம் அரசை தமது நலனுக்கு இசைவாக பயன்படுத்தவும், அதே நேரம் புலிகளை முற்றாக தமது கட்டளைகளுக்கு சரணடைய வைக்கவும் எடுக்கப்பட்ட முயற்சியே. இதை நாம் இந்தியாவின் பல நடவடிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த வகையில் புலிகள் ஒரு சரணடைவை ஐரோப்பிய நாடுகளுக்கு செய்வது அல்லது இன்னொரு ஏகாதிபத்தியத்திற்கு முற்றாக சரணடைவது என ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம் ஏற்படுத்தியுள்ளது.

இன்று உலகம் மூன்று மையங்களாக உருவாகியுள்ளது. அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பான் என பிரிந்துள்ளது. இவர்கள் உலகில் உள்ள அனைத்து அரசுகளையும், போராடும் குழுக்களையும், தமக்கு இசைவாக, தமது பொருளாதாரக் கொள்ளைக்கும் இசைவாக மாற்ற முனைந்துள்ளன.

ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானமும் புலிகளின் மீதான நடவடிக்கையும் அரசை ஐரோப்பாவின் கால்களுக்கும், புலிகளை முற்றாக ஐரோப்பாவுக்கும் சரணடையவும் இல்லாது போனால் முற்றாக அமெரிக்க ஏகாதிபதியத்திற்கும் சரணடைய வைத்துள்ளது. இதன் ஊடாக புலிகளின் பாசிசத்தின் பின் மறைந்துள்ள தமிழீழப் போராட்டம் ஏகாதிபத்திய கால்களின் கீழ் கொண்டு சென்று வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக அறிக்கையின் நோக்கம் இவ் ஐரோப்பிய காலனித்துவ நோக்குடன் இணைந்து போயுள்ளது. சாதாரண மக்கள் இதன் ஊடாக மாற்றுத் தலைமைக்கு அணி திரளவில்லை. அத்துடன் மாற்றுத் தலைமை உருவாக பல்கலைக் கழக அறிக்கை தடையாக மாறியுள்ளது.

இவ் அறிக்கையும், அதன் தீர்மானமும் புலிகளை ஐரோப்பாவில் தலைமறைவு நடவடிக்கைக்கு வழி விட்டுள்ளது. மாற்றுத் தலைமை பற்றிய விவாத நிலையில் உள்ள நிலையில் மாற்றுக் கருத்தே வர முடியாதபடி, புலிகளின் வன்முறையை ஊக்குவிக்க ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம் ஒரு திருப்பு முனையாகும். இந்த வகையில் மாற்றுத் தலைமை பற்றிக் கதைக்காத அதை நோக்கிய வேலைத்திட்டத்தைக் கொண்டிராத பல்கலைக் கழக அறிக்கை புலிகளை மேற்கு நாடுகளில் வன்முறையில் ஈடுபட அதன் ஊடாக மாற்றுக் கருத்துகளுக்கு வேட்டு வைக்கு மறைமுகமாக உதவியுள்ளது.

பல்கலைக் கழக அறிக்கைகள் மூலம் புலிகளின் பாசிச அரசியலை இல்லாது ஆக்கி விட முடியுமா ? நிச்சயமாக இல்லை. நாய் வாலை நிமிர்த்த முடிந்தால் நிமிர்த்தலாம். புலியின் அரசியலையும் அதன் போக்கையும் மாற்ற முடியாது. ஒரே வழி மாற்றுத் தலைமை மட்டுமே. ஏதாவது பத்திரிகை அல்லது ஐரோப்பிய பாராளுமன்றம் புலிகளிடம் பாசிசத்தின் மீது ஒரு கேள்வி எழுப்பின் அது அவர்களைப் பாதித்தாலும் தமது அரசியலைக் கைவிடுவதாக இருக்காது. மாறாக மேலும் இவ் ஏகாதிபத்திய சார்பு நிறுவனங்களிடம் சரணடைவதாகத் தான் இருக்கும்.

இதைப் புலிகளின் 94 ம் ஆண்டு 5 ம் மாத களத்தில் கூடத் தெளிவாகப் பார்க்க முடியும். ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானத்தின் மீது தமது கடுமையான விமர்சனத்தை வைத்தவர்கள், அதே நேரம் பாராளுமன்ற தீர்மானத்தை மாற்ற வேறு சிலரை நம்பும் அதே நேரம் அமெரிக்க ஏகாதிபத்தியம் மீது அதே பேப்பரில் நம்பிக்கையை வெளியிட்டுள்ளனர். ஒன்று நடவடிக்கை எடுப்பின் மற்றையதிடம் சரணடையத் தயாராக உள்ள நிலை. இதன் ஊடாக தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் எங்கேயோ ஒரு இடத்தில் தீர்மானிக்கப்படுகின்றது. இதைச் செய்ய வேறு எந்த நோக்கமும் அற்ற பல்கலைக் கழக அறிக்கை உதவுகின்றது. மாற்றுக் கருத்து என்ற பெயரால் தேசிய விடுதலைப் போராட்டம் சொநத மக்களை விட்டு விலை பேசப்படுகின்றது. பல்கலைக் கழக அறிக்கையை வெளிவிடுபவர்கள் அதை தமிழ் மக்களுக்கு தமிழமொழியிலும், விரும்பின் சிங்கள புரட்சிகர மக்களுக்கும் வெளியிடின் மட்டுமே, அது தமிழீழ தேசவிடுதலைப் போராட்டுத்தின் மீதும், மாற்றுத் தலைமை மீதான நோக்கோடும் வெளிவருவதாகக் காணமுடியும். இல்லாதவரை இவ் ஏகாதிபத்தியங்களிடம் சரணடைய வைக்கும் நோக்கில் மட்டுமே இம் மாற்று மொழிக்கட்டுரைகள் வெளிவருவனவாக இன்று உள்ளன.

இதைவிட இன்னுமொரு பிரிவினர் தமது சொந்த புகழ்களுக்கும், வெளிநாடுகளிடம் பணம் பெறவும், தமது சொந்த வாழ்வைக் கருத்தில் கொண்டும் வெளிவிடுகின்றனர். சொந்த மக்களிடம் வேலை செய்ய அக்கறை அற்று, சொந்த மக்களைக் கொண்டு ஒரு மாற்றத்தை தமிழீழத்தில் ஏற்க வைப்பதில் எந்த அக்கறையும் இன்றி தமிழீழக் கோஷத்தை உயர்த்தி தமது பைகளை நிரப்ப முனைகின்றனர். இந்த வகையில் ஈழத்தில் இருந்து இயங்கும் அகதிகள் சங்கங்கள் முதல் பல ஐரோப்பா வரையான மாற்று மொழி வெளியீடுகள் வரை பணம் பெற்று தமது சொந்த வாழ்வை வளப்படுத்தி வருகின்றனர். அதற்காக புதிது புதிதாகப் பலர் முனைகின்றனர்.

இதற்கென இவர்கள் தொடர்பு உள்ள நிறுவனங்கள் எதுவும் புரட்சிகரமானவை அல்ல. உலகில் புரட்சிகர அரசியல் மேற்கு நாடுகளில் சூனியமாகியுள்ளது. அப்படி உள்ள நிலையில் ஒரு புரட்சிகர ஸ்தாபனம் ஒன்று இருப்பின் அதற்கு பணம் கொடுக்கும் அளவுக்கு பலம் வாய்ந்தவையும் அல்ல. இன்று புரட்சிகர ஸ்தாபனங்கள் இன்றியே அவைகளை புரட்சிகர ஸ்தாபனங்கள் என்று கோஷித்தபடி அவர்களிடம் பணம் பெறுவதில் சிலர் முனைப்புப் பெற்றுள்ளனர்.

சொந்த மக்கள் மீது அக்கறை அற்ற இவ் வெளியீடுகள் இன்று தமிழ் பேசும் மக்களை விற்று அதன் ஊடாக ஈழப் போராட்டத்தை காட்டிக்கொடுத்து துரோகம் இழைக்கின்றனர்.

முன்பக்கத் தொடர்ச்சி

**கொள்ளைக் ...**

இதற்கு துணைபோவதில் இத் துரோகிகள் போட்டியிடுகின்றனர்.

இலங்கையின் மிக முக்கியமான பிரச்சனையான இனமுரண்பாட்டுக்கும் பெருமளவு பணத்தை ஏப்பமிடும் யுத்தத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கொள்ளைக் ...

துக்கும் ஒரு சிறுதீர்வைக் கூட வழங்கத் தயாரின்றி தமது பேரின வாத நிலையைத் தொடர்கின்றனர்.

இத் தேர்தலில் எஸ்.எல்.எவ்.பி வென்றுவிடக் கூடிய இன்றைய நிலையில் 17 வருட ஊழல் ஆட்சி, பயங்கரவாத யூ.என்.பி ஆட்சி மீதான வெறுப்பு பரிணமித்து நிற்கின்றது.

சிங்கள மக்கள் எஸ்.எல்.எவ்.பி வந்தால் எதையும் பெற்று விடப் போவது இல்லை. மாறாக இதே யூ.என்.பி ஆட்சி போல் தொடரப்போவதுடன் தேசிய இன முரண்பாட்டுக்கு சந்திரிகா தலைமையிலான எஸ்.எல். எப்பி எதையும் வழங்கி விடமாட்டார்கள். மீண்டும் யுத்தமும், தமிழ் மக்கள் மீது கொலைகளும் தொடரவே இவ் ஆட்சி மாற்றம் நிகழும்.

தொண்டைமானும் அண்மைக்காலத்தில் எழுப்பிய ஆரவாரங்கள் நாம் முன்பு சுட்டிக்காட்டியது போல தனது கொள்ளைப் பங்குக்கானது என நிறுவியுள்ளார். மலையக மக்களை ஏமாற்ற அவர்கள் வாழும் நிலம் சொந்தமாகும் என ஒரு போலியான செயற்பாட்டைச் செய்து வாக்குகளை ஒரு பேரின வாத யூ.என்.பி கட்சியின் பக்கம் திருப்பி விட முனைந்து நிற்கின்றார்.

17 வருடம் காதல் கொண்டு ஒட்டி உறவாடிய தொண்டமான் எதையும் மலையக மக்களுக்கு பெற்று கொடுக்கவில்லை. மாறாக மலையக மக்கள் மேலும் தமது உரிமைகளை இழந்து செல்கின்றனர்.

இரத்தக்கறை படியாதவர்கள் என்ற கோசத்துடன் கூட்டணி தமது கடையை மீண்டும் திறந்து தமிழ்மக்களை வரும்படி அழைத்து நிற்கின்றனர். பாராளுமன்றத்தில் எழுதி வாசிப்பவர்கள் வேண்டாம் நேரடியாக பேசும் வேட்பாளர்களைத் தெரியக்கோரி, இதுவே அவர்கள் கொள்கையாகி மக்களைக் கூவி அழைக்கின்றனர்.

யாழ் மாவட்ட தேர்தல் செல்லுபடியாகாது எனக் கூக்குரல் இட்டு வழக்கும் போட்ட கூட்டணி கூறிய காரணம் அங்கு மக்கள் வாக்கு அளிக்கும் நிலையில் இல்லை என்பதே.

இத் துரோகிகளுக்கு தெரியவில்லை வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் மக்கள் வாக்கு அளிக்கும் நிலையில் இல்லை என்பது. எல்லாம் கதிரைச்சுகம், கதிரை எண்ணிக்கைக் கனவுகாண, யாழ் குடாநாட்டில் போட்டி போட முடியாத தமது இயலாமையிலிருந்து எழுந்ததே இந்த மக்கள் பற்றிய கரிசனை. ஆயுதம் ஏந்திய எல்லாக் குழுக்களும் நான் முந்தி நீ முந்தி எனப் போட்டியில் ஈடுபட்டு உள்ளன. வெல்லும் கனவுகள் தராத இடங்களில் கூட்டுக்கு வந்த இத் துரோகிகள் இந்த இனவாத அரசின் கைக்கூலிகளாகப் பவனி வந்தவர்கள் இனியும் வர உள்ளார்கள். மிரட்டல், கொலை, கொள்ளையைத் தொழிலாகக் கொண்ட இவர்கள் அக் கொள்ளையைப் பெருக்க பாராளுமன்றம் ஒரு சிறந்த இடம் என்பதை இனம் கண்டு அதற்கான நாயாக அலைகின்றனர்.

அரசின் கைக்கூலிகள் எனக் கூறியபடி குமார் பொன்னம்பலம் தமிழ்ப் பகுதியில் போட்டியிட முடியாது போகவே கொழும்பில் கடை விரித்துள்ளார். அரசின் கைக்கூலிகள், துரோகிகள் எனின் குமார் பொன்னம்பலமும் கைக்கூலியே. யூ.என்.பி அரசில் சேர்ந்து இருந்து இனவாத நடவடிக்கைக்கு காலம்காலமாகத் துணை போனதுடன், மலையக மக்களின் பிரஜாவுரிமையைப் பறிக்க காரணமாயிருந்தவர்கள். துரோகிகள் கைக்கூலியாக உள்ள அதே வேளை குமார் பொன்னம்பலமும் ஒரு பேரினவாதத்தின் சிறந்த கைக்கூலியே.

EPRLF அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலைப் பகிஸ்கரிக்கக் கோரியவர்கள் பாராளுமன்ற தேர்தலில் தனது கதிரைச் சுகத்தை தக்க வைக்க தேர்தலில் குதித்துள்ளனர். இந்தியத் தரகுக் கைக்கூலிகளான இவர்கள் இத் தமிழ் மக்கள் மீது இந்திய இராணுவத்துடன் இணைந்து 20 ஆயிரம் தமிழ் மக்களைக் கொல்ல காரணமாக இருந்தவர்கள், கள்ளவோட்டில் பாராளுமன்றம் வந்தவர்கள் மீண்டும் கடை விரித்துள்ளனர்.

எல்லாவிதத்திலும் மக்களை சுரண்டவும், கொள்ளையடிக்கவும், சிறுபான்மை இனத்தை விற்று அடக்கி ஆளவும் ஆளுக்கு ஆள் போட்டியிட்டபடி இத் தேர்தலில் நிற்கின்றனர்.

கொள்ளையராகவும், காடையராகவும் பவனி வரும் இந்தப் பன்றிகள் சேற்றுள் மக்களை வரும்படி அழைக்கின்றனர்.

சேற்றுக்குள் உழன்று இத் தேர்தல் திருவிழாவை வென்ற பின்பும், அதற்கு முன்பும் தீர்த்தத்தை இரத்தத்தில் கொண்ட முன் தயாரிப்புக்களை இக் காடையர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

மக்களின் மண்டைகள் உருள அவ்விரத்தத்தில் தமது சேற்றை மறைத்து சிவப்பாக, கண் கவரும் வகையில் பவனிவர எல்லாவித மோசடியுடன் இத் தேர்தல் அரங்கேறுகிறது.

இத் தேர்தலால் சிங்கள மக்கள் சரி, தமிழ் மக்கள், முஸ்லீம், மலையக மக்கள் சரி எதையும் பெற்றுவிடப் போவதில்லை. எல்லாப் பன்றிகளும் இச் சேற்றில் உருண்டபடி, அதில் சொர்க்கத்தைக் காட்ட மக்களை அழைத்து ஏமாற்றும் சிறந்த நடிகர்களே. இத் தேர்தலைப் பகிஸ்கரித்து, இந்தப் பன்றிகளை அழிக்க ஆயுதம் ஏந்தி போராடுவதே எல்லா மக்களின் கடமையாகும்.

முன்பக்கத் தொடர்ச்சி

## குமார் பொன் ...

இவ் இனவாதத் தேர்தலை நியாயப் படுத்த முனைந்துள்ளார். ஏனெனில் தான் கொழும்பில் போட்டியிட நியாயப்படுத்த வேண்டும் அல்லவா. பாராளுமன்ற தேர்தலை மௌனமாக நியாயப்படுத்தியபடி ஜனாதிபதி தேர்தல் பற்றி அதில் தமிழ் மக்களின் நிலை பற்றியும் புதிய விளக்கங்கள் கொடுத்தபடி இனவாத ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஆயத்தங்கள் செய்து வருகின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குமார் பொன் ....

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் யூ.என்.பி, எஸ்.எல்.எவ்.பி என இரண்டுக்கும் வாக்களிக்க கூடாது எனக் கோரியபடி தமிழ் மக்கள் தனது வேட்பாளரை தனியாகக் கேட்டு பலத்தைக் காட்ட கோரியுள்ளார்.

இது போன்று பலம் காட்டக் கோரி கூட்டணி 1977 இலும் பின் பல தடவையும் கோரினார்கள். இதில் இன்று சில துரோகக் குழுக்களும் பாராளுமன்றத்தில் கூட்டாக நின்று பலம் காட்டக் கோருகின்றனர். குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி தேர்தலில் பலம் காட்ட கோருகின்றார்.

இவ்வரசியல் அமைபபில் இனவாத அரசியலே உள்ளது. அதில் எந்த வகையில் எப்படிப் போட்டியிட்டாலும், தமிழ் மக்கள் வாக்கு அளிப்பின் அவர்கள் ஏமாற்றப்பட சில பிழைப்புவாதிகள் தமது பணப்பைகளை மேலும் நிரப்புவதற்கு அப்பால் எதுவும் நிகழப் போவது இல்லை.

இதே குமார் பொன்னம்பலமும் அவரின் கட்சியுமே இந்திய மக்களின் பிரஜா வுரிமையைப் பறித்து நாடற்றவர்களாக மாறக் காரணமானவர்கள். தமிழ் பேசும் மக்களின் மிகப் பெரிய துரோகிகள் இவர்களே.

காலத்துக்குக் காலம் அரசாங்கங்களில் இருந்த காலங்களில் தமிழ் மக்களின் நலனுக்கு எதிராக இவ் இனவாத அரசில் பங்கு போட்டுக் கொள்ளையடித்ததுடன் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து நிர்வாணமாக நடுவீதியில் துரத்தியவர்கள்.

இன்று புதிய விளக்கங்களுடன் ஆயுதப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவுடன் மீண்டும் கடைகளைத் திறந்து வியாபாரத்தை தொடங்க முண்டியடித்து நிற்கின்றனர். தமிழ் மக்கள் மீண்டும் ஏமாறுவதற்குப் பதில் ஆயுதப் போராட்டத்தில் ஊன்றி நிற்பதும் சரியான அரசியலைத் தேடுவதுமே ஒரே வழியாகும்.

எல்லாவிதமான ஒற்றை ஆட்சிக்குள்ளான தேர்தல்களை நிராகரிப்பதும், குமார் பொன்னம்பலம் போன்ற சுரண்டல் பேர் வழிகளை அம்பலப்படுத்தி, அவர்களின் துரோகத்துக்கு பழி வாங்குவதுமே தமிழ் மக்களின் ஒரே வழியுமாகும்.

முன்பக்கத் தொடர்ச்சி

## ருவாண்டாவில் ....

பௌஸ்டின் ருவா கிராமுங்கு பிரதமர் பதவியை ஏற்பதுடன் பரந்தளவிலான ஒரு அரசாங்கம் அமைய உள்ளது. இதனால் நீண்ட கால அஞ்ஞாதவாதத்தை விட்டு இவர் பதவி ஏற்கவிருந்தார்.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் கொள்ளைக் கனவுகளும், சுரண்டலும் கேள்விக்குள்ளாகியுள்ளது. ஹீட்டு அரசாங்கம் பதவி ஏற்பின் 5 நாள் அவகாசத்தில் ருவாண்டா தூதுவர் வெளியேற வேண்டுமென அமெரிக்கா மிரட்டி, ருவாண்டாவுடன் உறவை முறித்துக் கொள்ளுவோம் என அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கிறிஸ்தோபர் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜனநாயக முகமூடியும், மனித உரிமை பற்றி பிதற்றும் ஆக்கிரமிப்புக் கொள்ளைகளும், பயங்கரவாதம் பற்றி பீற்றும் சண்டித்தனமும், அமெரிக்காவின் இனவாதமும் நிர்வாணமாகியுள்ளது.

---

## இந்திய சாதி வெறியர்களின் ஆணாதிக்க வக்கிரங்கள்

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ஜெயித்சார் கிராமத்தில் " புனிதத்துவமான அமர் ஜோதி " மீது ஒரு மலைஜாதியைச் சேர்ந்த சிறுவன் தற்செயலாக விழுந்து ஜோதி அணைந்து போனது. இது தான் காரணம் என அலைந்த பார்பனர்களும் சாதிவெறியர்களும் அச்சிறுவனின் 30 வயது தாயார் பிரகாஷ்கவுரை நாயைப் போல் இழுத்து வந்தனர். அப் பெண்ணை நிர்வாணமாக்கி, மொட்டை அடித்து, முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கோயிலைச் சுற்றி ஊர்வலம்(தேர் இழுத்தது போல்) வைத்தனர்.

அப்போது அப்பெண் மீது பார்வையாளர்கள் ஒருவர் மாறி ஒருவர் தாக்கியதுடன் தமது ஆணாதிக்க சாதி வெறி வக்கிரத்துடன் அப் பெண்ணின் பெண் உறுப்பில் குச்சியால் குத்தி வதைத்தனர். காலை 11 மணி முதல் 3 மணி வரை நடந்த இச் சம்பவத்தில் அப் பெண்ணை கழுதை மீது நிர்வாணமாக இருத்தி ஊர்வலம் வைத்தனர்.

உடல் எங்கும் இரத்தத்தில் வழிய, சாகும் நிலையில் தாகத்துக்கு தண்ணீர் கேட்டபோது, இந்து வெறியர்கள் அவர் வாயில் வெந்நீரையும், மண்ணெண்ணையையும் ஊற்றி தமது சாதி வெறித்தனத்துடன் கூடிய இந்து வதத்தைக் கொண்டாடினர்.

இந் நிலையில் அப் பெண் மரணம் அடைந்து விடவே கோயிலுக்கு முன் வீசி எறிந்தனர்.

இச் சம்பவம் நடைபெற்ற போது அருகில் இருந்த போலீஸார் மௌனமாக இருந்துவிட்டுப் பின்னர் அப் பெண்ணின் நெருங்கிய உறவினரைக் கைது செய்து பொய்க் குற்றச்சாட்டைப் போட்டு இந்து வெறிக்கு காவடி எடுத்துள்ளனர்.

சமயங்களும் அதன் கோட்பாடுகளும் இவைகள் தான். இந்து என்று போலி சம்பிரதாயங்களும், இந்து வெறித்தனத்தில் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமையும் இந்து — என்று சொல்லிச் செய்யும் கொலைகளும், கொள்ளைகளும், சுரண்டலும் வட்டிக் கொள்ளைகளும் எதைக் காட்டி நிற்கின்றன. எந்த சமயமும் ஏழை மக்களுக்கும், சாதி ஒடுக்குமுறைக்கும் விடுதலையைத் தந்து விட மாட்டாது. அதற்கு மேல் சம்பவமே சாட்சி. ஏன் அப் பெண் இந்துவே. அப்போது எங்கு போனார் இந்தக் கடவுள். கடவுள் இருந்தால் தானே. கடவுள் எதுவும் தரப் போவதில்லை. நீங்கள் போராடினால் தான் எதையும் பெற முடியும்.

❁❁❁❁❁❁❁❁❁❁❁❁



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மீண்டும் அடிமைகளாகப் பெண்கள்

வத்திக்கான் கத்தோலிக்க மதபீடம் பாடல், பூசை போன்றவற்றில் பெண்கள் கலந்து கொள்வதை முதன் முதலாக அநுமதித்துள்ளது. வழமையாக இவை சிறுவர்களாலேயே செய்யப்பட்டு வந்துள்ளது. எனினும் பெண்பாதிரிமாருக்கான அநுமதி இன்னமும் வழங்கப்படவில்லை. ஏற்கனவே அமெரிக்க கத்தோலிக்க சர்ச்சுகளில் நடைபெறும் பூசைகளில் பெண்கள் உதவியாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். 'போப்' பின் நேரடி உத்தரவின் பேரில் இவை வத்திக்கானில் அநுமதிக்கப்பட்டுள்ளது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் சமத்துவம் விரும்பும் சிறுபான்மையினருக்கு இது ஒரு வெற்றியாகும். ஆயினும் பெரும்பான்மை இது குறித்து வருத்தம் தெரிவித்துள்ளது என நியூயோர்க் ரைம்ஸ் எழுதியுள்ளது.

மேற்குறிப்பிட்ட பெண்கள் விளக்கேற்றுவதற்கும், வைன் பரிமாறுவதற்கும், பூசையில் கைகழுவுதல் போன்றவற்றிற்கும் உதவியாக இருப்பர். ஒவ்வொரு தனி பாதிரிமாருக்கும் இவர்களை பயன்படுத்தும் உரிமை உண்டு.

ஆனால் எதிர்ப்பாளர்கள் பெண்பாதிரிமார் குறித்தும், இவ்வுதவியாளர்கள் குறித்தும் இதனால் பல நெருக்கடிகள் உருவாகும் எனத் தெரிவித்துள்ளனர். அமெரிக்க சர்ச்சுகளில் நடைபெறும் சம்பவங்கள் இவர்களை வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது. ஏனெனில் சமீபத்தில் சிறுவன் ஒருவனுடன் தகாத உறவு கொண்ட பாதிரி ஒருவருக்கு 8 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பெண்களால் கத்தோலிக்க சர்ச்சுகளின் பெயர் கெடும் என எதிர்ப்பாளர்கள் பீதியடைந்துள்ளனர்.

## கொலம்பியா: அமெரிக்க ராணுவம் கட்டும் பாடசாலை

டிசம்பர் 1993–1994 மார்ச் கால இடைவெளியில் அமெரிக்காவைச் சேர்ந்த 150 இராணுவத்தினர் ( Southern command) civic action என்ற திட்டத்தை கொலம்பியாவின் cauca பள்ளத்தாக்கில், கொலம்பிய இராணுவத்துடன் இணைந்து பாடசாலை, வைத்தியசாலை, வீதிகள் அமைக்க திட்டமிட்டுள்ளது.

இவ் விராணுவச் சந்திப்பு கொலம்பியாவில் எதிர்ப்பைச் சம்பாதித்ததுடன் பாதுகாப்பு அமைச்சர் அமெரிக்க இராணுவம் ஆயுதம் தரிக்கக் கூடாது எனவும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது எனவும் அறிக்கை விட வைத்துள்ளது.

cauca பள்ளத்தாக்கு கொலம்பியாவின் கெரில்லாக் குழுவின் மிகவும் பலம் வாய்ந்த இடமாக இருந்து வருகிறது. அதே நேரத்தில் போதைப்பொருள் கடத்துபவர்களும் குறிப்பிடத்தக்க ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

## இனவெறியன் வின்சன் சேர்ச்சில்

ஆங்கில வரலாற்றாசிரியர் ANDREW ROBERTS வின்சன் சேர்ச்சில் தனது வாழ்நாள் பூராவும் இனவாதியாக இருந்தார் என The Spectator எனும் இதழில் எழுதியுள்ளார்.

சேர்ச்சில் இங்கிலாந்து வெள்ளையருக்கு மாத்திரம் என்ற கருத்துக் கொண்டிருந்தவரும், வெளிநாட்டவரைப் பலவந்தமாக வெளியேற்ற வேண்டும் என்ற கொள்ளை கொண்டிருந்தவரும் ஆவார் எனவும் எழுதியுள்ளார்.

அதற்கு உதாரணங்களாக சேர்ச்சில் கறுப்பின மக்களை "குரங்குகள்" என்றும் சீனர்களை பன்றியின் வால் எனவும், அரேபியர்களை பெறுமதியற்றவர்கள் என்றும் குறிப்பிட்டார் எனவும் ROBERTS எழுதியுள்ளார்.



### திறந்த விழிகளுக்கு

### கட்டுப்பாடுகள்

அடிமையாய் வாழ்வது
அற்பத்தனமானது; கேவலமானது.
இயற்கையின் அழைப்புகளையும்
உங்கள்—
சட்டங்கள் ஆள்கின்றன!

அந்தக் கதவுகள்—
திறந்திருக்கும் வேளையில்
எங்கள் வயிறுகள்
மலங்கழிக்கத் தயாராய் இருப்பதில்லை!

வயிறுகள்—
தயாராய் இருக்கும் போதோ
அந்தக் கதவுகள்
மூடியே கிடக்கின்றன!

ஹோ-சி-மின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பகாசுர கம்பெனிகளின் பிடியில் சிக்கியது உலகம்

உலகப் பொருளாதாரத்தின் தலைவிதியைத் தாங்கி நிற்பவை சர்வதேச வர்த்தக நடவடிக்கையினுடைய நான்கு சிலந்தி வலைப்பின்னல்கள்; அவற்றின் மீது ஒரு சில நூறு தேசங் கடந்த தொழில் கழகங்கள் (TNCs) ஆதிக்கம் வகிக்கின்றன. உண்மையில் தேசிய அரசாங்கங்களைக் காட்டிலும் கூடுதலாக இந்த தேசங் கடந்த தொழில் கழகங்கள் (TNCs) தாம் உலக மக்களின் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன; இந்தப் பூதாகரமான தொழிற் கழகங்களைக் கட்டுப்படுத்துவது இருக்கட்டும்; இவை என்ன செய்கின்றன என்பதை அறிந்து கொள்வதுகூட இந்த தேசிய அரசாங்கங்களுக்கு மேலும் மேலும் கடினமாகி வருகின்றது.

★★★

உருவாகிவரும் உலக ஒழுங்கமைப்பில் ஒரு சில நூறு பகாசுரத் தொழில் கழகங்கள்தாம் முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றன; அவற்றில் பலவும் பெரும்பாலான சுதந்திர தேசங்களைவிட பெரிய்வையாகத் திகழுகின்றன. சௌதி அரேபியா, நார்வே ஆகிய இரு நாடுகளையும் சேர்த்தாலும் அவற்றைவிட ஃபோர்டு (Ford) நிறுவனத்தின் பொருளாதாரம் பெரியதாக உள்ளது. நியூசிலாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஃபிலிப் மோரிஸ் (Philip Morris) நிறுவனத்தின் ஆண்டு விற்பனை தாண்டி விடுகிறது. 20 ஆண்டுகளுக்கு முந்தைய பன்னாட்டு தொழிற்கழகங்கள் (MNCs) பல்வேறு நாடுகளிலும் தனித்தனியே தமது செயல்பாடுகளைக் கொண்டிருந்தன. அச்செயல்பாடுகள் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்பவும் அமைக்கப் பட்டிருந்தன. 1990-களில் பெரும் தொழில் நிறுவனங்

> புதிய் உலகப் பொருளாதாரம் பெருமளவு நிலை கொண்டுள்ள சர்வதேச வர்த்தக நடவடிக்கையினுடைய நான்கு சிலந்தி வலைப் பின்னல்கள் மீது ஆதிக்கம் வகிக்கின்றன, உலகு தழுவிய பிணைப்புகளைக் கொண்ட கையளவேயான சில கம்பெனிகள்.

கள் மட்டுமல்ல, சில சிறிய நிறுவனங்களும்கூட காலம், இடம், தேசிய எல்லைகள், மொழி, பழக்க வழக்கம், சித்தாந்தம் ஆகிய பழைய வரம்புகளைத் தகர்க்கக் கூடிய தொழில் நுட்ப வழி வகைகள் - சாதனங்களையும், நீண்ட காலத் தொலை நோக்கும் பெற்றிருக்கின்றன.


## உலகப் பேரரசுகள்

பூபாகம் முழுவதும் விரவிய தொழில் நுட்பத்தைப் பெறுவதன் மூலம் எங்கு வேண்டுமானாலும் உற்பத்தி செய்து, எங்கு வேண்டுமானாலும் விற்கக் கூடியதாக பொருளுற்பத்தியை முன்னேற்றியதன் மூலம், கடன் வழங்கும் முறையை உலகம் முழுவதும் பரவச் செய்ததன் மூலம், அண்டை அயலானாலும் சரி, அல்லது எந்தக் கிராமமானாலும் சரி அங்கெல்லாம் ஊடுருவக் கூடிய உலகு தழுவிய தகவல் தொடர்பு வழித்தடங்களால் அவற்றை இணைத்ததன் மூலம் இந்த நிறுவனங்கள் 21-ஆம் நூற்றாண்டின் உலகப் பேரரசுகளாக மாறி வருகின்றன; இவை அரசியல் தன்மையுடையன அல்ல, பொருளாதாரத்தின் தன்மையுடையன என்றும் பொதுத்துறை வகைப்பட்டதல்ல, தனியார் வகைப்பட்டது என்றும் சாதாரணமாக நாம் நம்புகின்றோம். சமீப ஆண்டுகளில் உலக அரசியலின் அதிகார பலம் என்பது பிராந்திய அடிப்படையிலான அரசாங்கங்களிடம் இருந்து உலகம் முழுவதும் சுற்றிவரக்கூடிய கம்பெனிகளுக்கு மாறிவருவதாக இந்த விண்வெளி யுகத் தொழில் நிறுவனங்களின் நிர்மாணிகளும் நிர்வாகிகளும் புரிந்து கொண்டுள்ளார்கள். அரசாங்கங்களின் நம்பிக்கைகளும் நடிப்புகளும் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் சுருங்கிவருவதால் இந்தத் தொழில் கழகங்கள் பொது இடங்களை ஆக்கிரமித்துக் கொள்கின்றன; தொடர்ந்து அதிகரித்துவரும் எண்ணிக்கையிலான மக்களது வாழ்க்கையில் இவை கூடுதலான செல்வாககு செலுத்துகின்றன.

ஒரு உலகுதழுவிய அளவில் சிந்தித்துத் திட்டமிடும் மனிதர்களால் (ஒரு சில ரேயான பெண்களாலும்) நடத்தப்படும் இந்த உலகு தழுவிய தொழிற்கழகங்கள் தாம் முதலில் எவ்வித மதச்சார்புமற்ற நிறுவனங்கள். ஒரே சமயத்தில் பல பத்து லட்சம் பேரைச் சென்றடையக் கூடிய, கோகோ - கோலா விளம்பரங்கள்; ஆசியாவின் திடீர் - புதுப்பணக்காரர்களுக்கு சிட்டி வங்கியின் கடன் வழங்கு அட்டைகள் (Credit cards) ஒப்பந்தத் தொகை கொடுத்து அடுத்தவர்களின் ஆலைகளில் பல பத்தாயிரக் கணக்கானவர்களுக்கு விளையாட்டுக் காலணிகளை உற்பத்தி செய்யும் "நைக்" கம்பெனியின் வலை பின்னல் — இப்படி பலதேசிய தொழிற்கழகங்களின் நிர்வாகிகள் 20 ஆண்டுகளுக்கு முன்பு கனவு கண்டவை எல்லாம் இப்போது யதார்த்த நடப்புகளாகிக் கொண்டிருக்கின்றன. உலகச் கலாச்சாரச் சந்தை, உலகப் பொருள் அங்காடி, உலகத் தொழிலகம், உலக நிதி வலைப்பின்னல் ஆகியவை தாம் புதிய உலக பொருளாதாரம் பெருமளவு நிலை கொண்டுள்ள சர்வதேச வர்த்தக நடவடிக்கையினுடைய நான்கு சிலந்தி வலைப்பின்னல்கள்; இவற்றின் மீது ஆதிக்கம் வகிப்பவை, உலகு தழுவிய பிணைப்புகளைக் கொண்ட ஒப்பீட்டு ரீதியில் சிலவேயான கம்பெனிகள்.

எந்தவொரு உலகப் பேரரசோ அல்லது, தேசிய அரசோ முன்னெப்போதும் சாதித்திராத ஒரு அளவுக்கு உலக ஒருமைப்பாட்டை இந்த உலகுதழுவிய வலைப் பின்னல்களின் பொருளாதார நடவடிக்கை ஏற்கனவே சாதித்துவிட்டன. இவை ஒவ்வொன்றின் பின்னாலும் இருந்து இயக்கும் சக்தி அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்சு, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, பிரிட்டன் ஆகியவற்றைத் தலைமையகங்களாகக் கொண்டு செயல்படும் அதே சில நூறு பகாசுரத் தொழிற் கழகங்கள்தாம் என்பதைப் பெரும்பாலும் கண்டு பிடித்துவிட முடியும். மேல்மட்டத்தில் உள்ள 300 நிறுவனங்களின் கூட்டுச் சொத்து உலகின் மொத்த உற்பத்திச் சொத்துக்களின் ஏறக்குறைய கால்பங்காக உள்ளது.

உலக வலைப்பின்னல்களில் புத்தம் புதிதானது உலகக் கலாச்சாரச் சந்தை; அது மிகப் பெரும்பாலும் அகில உலக வீச்சுடையது. திரைப்படங்கள், வானொலி, வானொளி, இசை, பத்திரிக்கைகள், T - சட்டைகள், விளையாட்டுகள், பொம்மைகள், கருத்து - கதைப்பூங்காக்கள் ஆகிய இவை உலகக் கற்பனைப் பாத்திரங்களை மிதக்கவிடக் கூடிய, உலகக் கனவுகளைப் பரப்பக் கூடிய மக்கள் திரள் தொடர்புச் சாதனங்கள். குலுக்கல் இசை - நடன (Rock Stars) நட்சத்திரங்கள், அமெரிக்க திரையுலக (ஆலிவுட்) தடைகளைத் தகர்க்கும் சாதனை சினிமாக்கள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகியவை உண்மையில் உலகத் தயாரிப்புகள். பூபாகம் எங்கும் வாழும் மக்கள் அனைவரும் ஒரே சந்தைத் தயாரிப்பான பாடல்களையும் கதைகளையும், ஒரே மின்னணு சாதனங்களைக் கொண்டு பார்க்கிறார்கள் அல்லது கேட்கிறார்கள். செயற்கைக் கோள், கம்பி வழி, ஒலி-ஒளி பதிப்பான்கள் வந்ததன் விளைவாக, மிக மிக ஏதேச்சதிகாரமான அரசாங்கங்களும் செய்திகள் பரவுவதன் மீது முன்பு கொண்டிருந்த கடுமையான கட்டுப்பாட்டையும் தமது குடிமக்களது கற்பனை கனவு வாழ்க்கையின் மீது அவற்றுக்கிருந்த பிடிப்பையும் இழந்து கொண்டிருக்கின்றன.

> இந்த உலக அமைப்பின் மிகவும் உறுத்தக் கூடிய அம்சம் என்னவென்றால் தமது மக்களுக்காக தேசிய அரசாங்கங்கள் மேற்கொள்ளும் அத்தியாவசிய கொள்கைகளின் செயல்தன்மைகளைத் தகர்க்கும்படி அந்த உலக தொழிற் கழகங்களின் பூதாகரமான சக்தியும் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

'மூன்றாம் உலகம் என்று இன்னமும் அழைக்கப்படும் பழம் பண்பாட்டு சமூகங்களில்கூட சாப்பாட்டு இடைவேளையை வானொளிகள் பிடித்துக் கொண்டு வருகின்றன. உலகம் முழுவதும் உள்ள மதுபான விடுதிகளில், தேநீர் கடைகளில், சிற்றுண்டிச் சாலைகளில், வாழ்விடங்களில் ஒரே நிலைமைதான், தனித்திருந்தாலோ, சேர்ந்திருந்தாலோ, குடும்ப உறுப்பினர்களாக இருந்தாலோ எப்படியானாலும் பேசிக் கொள்ளும். உரையாடல்கள் கிடையாது; ஒருவருக்கொருவர் மனித உறவுகள் கிடையாது; வானொளியின் ஒளிக்குழாய் (Cathode Tube) முன்பு ஆணி அடித்தாற்போன்று உட்கார்ந்து கொள்கிறார்கள். அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பாவில் உள்ளதைப் போல முன்னேறிய தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களின் தாக்கத்தினால் பல நூற்றாண்டு காலப் பழக்க வழக்கங்கள் அழிந்து போகின்றன.

## ''அமெரிக்கத் தயாரிப்பு''

உலகம் முழுவதும் மிகவும் பரவலாக விற்கப்படும் கலாச்சாரத் தயாரிப்புகள் ''அமெரிக்கத் தயாரிப்பு'' என்ற முத்திரை தாங்கியுள்ளது. ஏறக்குறைய எந்த அமெரிக்கத் திரையுலக (ஆலிவுட்) சினிமாவானாலும் சரி, ஒளிநாடா(வீடியோ) வானாலும் சரி, ஏதாவது ஒரு இடத்து மரபு, மதிப்பீடு - ஒழுக்கக் கோட்பாடுகளைத் தாக்கக் கூடியதாக இருக்கிறது. தனியாக உள்ள பெண்கள், காமாந்திர காதலர்கள், பெற்றோரை புறம்பேசும் சிறுவர்கள் போன்றவற்றைக் காட்டும் காட்சிகள், குடும்பம், மதம், மற்றும் ஒழுங்கு முறையின் மீதான தாக்குதல்களாக உள்ளன; எனவே, அவை உலகமெங்கும் வாழும் எல்லா வித மக்களையும் அதிர்ச்சி - நிலைகுலைவு அடையச் செய்கின்றன. உலக வர்த்தகத் தயாரிப்புகள் தொடர்ந்து ஆறாகப் பாய்வதால் அமெரிக்காவின் சில பகுதிகள் உட்பட பல இடங்களிலும், அவை பிராந்திய, தேசிய எதிர்விளைவுகளை, கடுமையான எதிர்த் தாக்குதல்களைத் தூண்டுகின்றன; இவை அடிக்கடி கடவுள் - மதத்தின் பெயரால் நடத்தப்படுகின்றன.

உலகப் பொருள் அங்காடி என்பது இந்த பூமி முழுவதுமான அதிநவீன சந்தை (Super Market); இதில் உண்ணவும், குடிக்கவும், அணியவும், அனுபவிக்கவும் தேவையான பொருட்கள் திகைப்பூட்டும் வகையில் பரப்பிக் கிடக்கின்றன. செல்வச் செழிப்புமிக்க வாழ்க்கைக் கனவுகள் உலகின் மூலைமுடுக்கெல்லாம் சென்றடையும்படி பரிமாறப்படுகின்றன. ஆனால் உலக மக்களில் ஒரு சிறுபான்மையினர் மட்டுமே இந்த உலகப் பொருள் அங்காடியில் வாங்கக் கூடிய வசதி படைத்தவர்களாக உள்ளனர். உலகில் வாழும் 540 கோடி மக்களில் ஏறக்குறைய 360 கோடிப் பேர் இதில் எதையும் வாங்கக் கூடிய ரொக்கப் பணமோ, கடன் வசதியோ இல்லாதவர்கள். பூமியில் வாழும் மக்களின் பெரும்பான்மையானோர் பெட்டிக் கடைகளில் பொருட்கள் வாங்கும் அளவே அதிகபட்சம் வசதி படைத்தவர்கள்.

உலகத் தொழிலகங்கள் என்பவை பொருட்களை உற்பத்தி செய்யும், செய்தித் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யும், எல்லாவிதமாக சேவைகளும் புரியும் ஆலைகள், தொழிற் கூடங்கள், சட்ட அலுவலகங்கள், மருத்துவமனைகள், உணவகங்கள் இன்ன பிற எல்லா வகையான இடங்களும் அடங்கிய ஒரு வலைப்பின்னல். உலக அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட இணைப்பக (Assembly) வரிசைகளில் ஒரு கிரம அடிப்படையிலான பொத்தான்களின் வரிசையினால் இயக்கப்பட்டு ஒன்று சேர்க்கப்படும் சிகரெட்டுகள் முதல் கார்கள் வரை ஒவ்வொன்றும் பல பத்து நாடுகளில் இருந்து வரும் பாகங்களைக் கொண்டிருக்கின்றன. புள்ளி விவர - தகவல் பகுப்பாய்வுகள், சட்ட அலுவலகங்கள், விளம்பர நிறுவனங்கள், காப்பீட்டுக் கழகங்கள் இன்னொருவகை இணைப்பக வரிசைகளாக மாறியுள்ளன. ஒரு உலக உழைப்பாளிகள் அடங்கிய சிறு கடலுக்கு அக்கம்பக்கமாகவே ஆக்கபூர்வமான வணிக - வர்த்தக சிந்தனைகள், மின்னணு - கணிப்பொறி அறிவு, நுண்பொருள் இயக்குநர்கள் - மருத்துவர்கள், நிர்வாகத் தொழில் நுட்பம் மற்றும் விற்பனையாகக் கூடிய பிற எல்லா திறன்களும் கொண்ட ஒரு உலகு தழுவிய உழைப்பாளர் சந்தை ஏற்பட்டிருக்கிறது; அதில் தலைமை நிர்வாக இயக்குநரில் இருந்து குப்பைக் கூடை சுத்தம் செய்பவர்கள் வரை நம்மில் மேலும் மேலும் பலர் ஒன்றாக நீச்சலடிக்கிறோம். அதில் குதிப்பதற்காக சொந்த மண்ணின் பிடிப்புகளை இழந்தவர்கள்; ஏதுமற்றவர்களான உலகின் பல கோடி மக்கள் மிகவும் வெறிபிடித்து அலைகின்றனர்.

## ''சூதாட்டப் பொருளாதாரம்''

உலக நிதி வலைப்பின்னல் என்பது நாணயப் பரிமாற்றங்கள், உலகப் பங்குப் பத்திரங்கள், பெரும் மூல அட்டைகள் (Master Cards), ஈரோயென் எனப்படும் ஐரோப்பிய - ஜப்பானிய நாணயம், பண்டமாற்றுகள், குறியீட்டு அட்டைகள் போன்றவை என்று தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும் திகைப்பூட்டக்கூடிய, சிக்கல் நிறைந்தது; இன்னும் மறுமுதலீடு, மறுவிற்பனைப் பணத்திற்காகப் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்படும் ஊக வழி வகைகள் பலவும் அடங்கியது. இந்த வலைப்பின்னல் அந்தக் காலத்து, மூப்பு தட்டிய மந்தமான வங்கிகளைக் காட்டிலும் சூதாட்ட விடுதிகளின் சங்கிலிப் பிணைப்புக்கு நெருக்கமானது. ஒரு நாளின் 24 மணி நேரமும் உலகின் பெரும் அன்னியச் செலாவணிச் சந்தைகளுக்கிடையே புள்ளி விவரங்கள் வினாடித்துளி வேகத்தில் போய் வந்து பல நூறு கோடி டாலர்கள் பரிமாறப்படுகின்றன. பிரமிப்பூட்டும் இந்தத் தொகையின் 10 சதவீத அளவு கூட பொருள்கள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தில் சம்பந்தப்படுவதில்லை. ஒரு லாப விளையாட்டாகிப் போன இந்த சர்வதேசப் பணப்போக்குவரத்து தன்னளவில் தனித்து இயங்குவதாகிவிட்டது. (பொருளுற்பத்தி - விற்பனை, சேவைப் பணிகளுக்கான கட்டணம் என்றில்லாமல், அவற்றோடு தொடர்பின்றி வெறும் நிதிச் சூதாட்ட விளையாட்டாகத் தனித்தே நடக்கிறது. பணப் பரிமாற்றச் சந்தை — மொ-ர்) மறு உற்பத்தியுடன் தொடர்பற்ற சூதாட்டத்துக்கு சேவை செய்வதற்கென்றே தொழில் நுட்பம் ஒருநாள் தகவமைக்கப்படும்; இதற்கான தகவல்களைக் கொண்டுள்ள ஜான் மெனார்டு கெய்ன்ஸ், ''சூதாட்டப் பொருளாதாரம்'' என்றழைத்த இதன் தோற்றத்தை முன்னுரைத்தார். இருந்த போதும், வங்கி நடவடிக்கைகள் உலகு தழுவியதாகவும் ஊக அடிப்படையிலானதாகவும் மேலும் மேலும் மாறுவதனால் பலபத்து லட்சம் மக்களுடைய, பல பத்தாயிரம் சிறுதொழில்களுடைய கடன் தேவைகள் நிறைவேறுவதில்லை.

> மூன்றாம் உலகம் என்று இன்னமும் அழைக்கப்படும் பழம் பண்பாட்டு சமூகங்களில் கூட சாப்பாடு இடைவேளையை வானொளிகள் பிடித்துக் கொண்டு வருகின்றன.

★★★

இந்த நான்கு சிலந்தி வலைப் பின்னல்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது, அது உலகுதழுவிய கிராமம் என்பதில் இருந்து மிகவும் மாறுபட்ட சித்திரத்தையே தருகின்றன. உலகக் கலாச்சாரச் சந்தை அதன் உலகக் கனவுகளோடு பெரும்பான்மை குடும்பங்களை அடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறது. உலகின் பொருட்களையும் சேவைப் பணிகளையும் நிதியளித்து, தயாரித்து, விற்பனை செய்யும் பிற மூன்று வலைப்பின்னல்களில் மிகமிகச் சிறிய எண்ணிக்கையிலானவர்கள் தாம் ஏதாவது பாத்திர மாற்றுகின்றனர். புது உலகப் பொருளாதாரத்தில் ஆதாயம் அடைபவர்களுக்கும் அவ்வாறின்றி விடுபட்டுப் போனவர்களுக்கும் இடையே ஒரு மிகப் பெரும் இடைவெளி நிலவுகிறது; உலக மக்கள் தொகை பெருகப் பெருக இந்த இடைவெளி விரிவடைந்து கொண்டே போகிறது.

இந்த உலக அமைப்பின் மிகவும் உறுத்தக் கூடிய அம்சம் என்னவென்றால் தமது மக்களுக்காக தேசிய அரசாங்கங்கள் மேற்கொள்ளும் அத்தியாவசியக் கொள்கைகளின் செயல் தன்மைகளை தகர்க்கும்படி அந்த உலக தொழிற்கழகங்களின் பூதாகரமான சக்தியும் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. தேசிய அரசுத் தலைவர்கள் தமது சொந்த மண்ணின் மீது ஒரு காலத்தில் கொண்டிருந்த கட்டுப்பாட்டை வெகுவாக இழக்கிறார்கள். மேலும் மேலும் அதிக அளவு வெளி உலகின் நிர்ப்பந்தங்களால் அவர்கள் கட்டுப்படுகிறார்கள்; ஏனெனில் வெளியாட்கள் ஏற்கனவே உள்ளே புகுந்து விட்டார்கள். வழக்கமாக எல்லைகளைத் தாண்டி இயங்கும் தொழில் நிறுவனங்கள் வெகு தொலைவிலுள்ள துண்டு துண்டான பிராந்தியங்களையும் ஒரு புதிய உலகப் பொருளாதாரத்தில் இணைக்கின்றன; அது ஏற்கனவே நிறுவப்பட்ட அரசியல் ஏற்பாடுகள்-அமைப்புகள் மற்றும் பழக்க வழக்க மரபுகளை கடந்து செல்கிறது. வேறு ஒரு காலக் கட்டத்திற்கான வரிச் சட்டங்கள், அனைவருக்கும் முழு வேலை வாய்ப்புக் கொள்கைகள், மூலாதார வளப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான பழைய அணுகுமுறைகள் ஆகிய அனைத்தும் காலாவதியாகும்படி, நடைமுறைப்படுத்த முடியாதவைகளாக, பொருத்தமற்றவையாக மாறுகின்றன.

தேசியத் தலைவர்கள் இனி இந்தப் பகாசுர நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவது இருக்கட்டும், புரிந்து கொள்ளும் திறனும் அற்றவர்களாகி விட்டார்கள். ஏனென்றால் அவை இடம் விட்டு இடம் பெயரக் கூடியவை; கிரேக்க இதிகாசப் பாத்திரமான புரோடியஸ் (அதாவது பச்சோந்தி போன்று— மொ-ர்) சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தொடர்ந்து தோற்றத்தை மாற்றிக் கொண்டே போகின்றவை. இந்த உலகத் தொழிற் கழகங்களின் நிர்வாகிகளுக்கும் அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் இடையில் மாறும் உறவு ஏறக்குறைய எல்லா இடங்களிலும் ஒரு புதிய பொருளாதார யதார்த்தத்தை உருவாக்குகிறது.

(ரிச்சர் ஜெ. பெர்னெட் என்பவர் எழுதிய "உலகக் கனவுகள்: ஏகாதிபத்திய தொழிற் கழகங்களும் புதிய உலக ஒழுங்கும்" என்ற நூலின் ஒரு அத்தியாயத்தின் சுருக்கம். நன்றி : தேர்ட் வோர்ல்டு ரிசர்ஜன்ஸ்)

நன்றி : புதியஜனநாயகம்

## கந்தலாகிப் போனது கம்போடிய 'ஜனநாயகம்'

பெருமளவு ஐ.நா. படைகளைக் குவித்தும், 5400 கோடி ரூபாய் அளவுக்குச் செலவிட்டும் கம்போடியாவில் கடந்த மே மாதத்தில் ஒரு மோசடித் தேர்தலை நடத்திய ஏகாதிபத்தியங்கள், அதை ஜனநாயகத்தின் வெற்றி என்று மார்தட்டினார். ஆனால் ஓராண்டுக்குள்ளாகவே அவர்களது போலி ஜனநாயகம் கிழிந்து கந்தலாகிப் போனதோடு, ஆட்சிக் கவிழ்ப்பு - அரசியல் நெருக்கடிக்குள் கம்போடியா சிக்கித் தவிக்கிறது.

வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களின் பொம்மையாட்சிக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி வந்த பல்வேறு போராளிக் குழுக்களுடன் ஐ.நா. மன்றம் நடத்திய பேச்சு வார்த்தை - அமைதி ஒப்பந்தத்துக்கு பிறகு கம்போடியாவில் தேர்தல் நடந்தது. ஏகாதிபத்திய விசுவாசியும் பொம்மையாட்சியின் பிரதமருமான ஹூன்சென்னையும் அவரது கம்போடிய மக்கள் கட்சியையும் குறுக்குவழியில் வெற்றி பெறச் செய்ய ஏகாதிபத்தியங்கள் கீழ்த்தரமாக முயன்றன. எதிர்த்தரப்பினர் பிரச்சாரம் செய்ய முடியாமல் அரசுப் படைகள் தாக்கின. இதை அம்பலப்படுத்திய கம்யூனிசப் போராளிகளின் "கேமர் ரூஜ்" இயக்கம் இம் மோசடித் தேர்தலைப் புறக்கணித்தது.

தில்லுமுல்லு - மோசடிகளில் ஈடுபட்ட போதிலும் கம்போடிய மக்கள் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. முன்னாள் மன்னரும், தேசியவாதியுமான சிகானுக்கின் "ஃபன்சின்பெக்" கூட்டணியே அதிக இடங்களைக் கைப்பற்றியது. இருப்பினும் இக்கட்சியும் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை பெறாததால், இவ்விரு கட்சிகளும் ஒரு கூட்டணி ஆட்சியை நிறுவின.

இருப்பினும் ஆட்சியதிகாரத்தில் உரிய பங்கு கிடைக்காத ஆத்திரத்தில் கம்போடி மக்கள் கட்சி கலகம் செய்து வந்தது. "கேமர் ரூஜ்" கம்யூனிசப் போராளிகளால் நாட்டுக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி அதைத் தடை செய்யக் கோரி வந்தது. ஏனெனில், கூட்டணியிலுள்ள "ஃபன்சின்பெக்" கட்சி ஆயுத பலமிக்க அமைப்பு அல்ல. ஆனால் கம்போடிய மக்கள் கட்சியோ நேற்றுவரை பொம்மையாட்சி நடத்தியதால் அதன் பிடியில்தான் அரசப் படைகள் உள்ளன. "கேமர் ரூஜை" தடை செய்துவிட்டால், பின்னர் "ஃபன்சின்பென்" கட்சியை தமது ஆயுத பலத்தைக் கொண்டு முடமாக்கி விடலாம் என்று தொடர்ந்து முயற்சித்து வந்தது. ஆனால் சிகானுக்கும், "ஃபன்சின்பெக்" கட்சி சார்பில் கூட்டணி அரசில் பிரதமராக உள்ள சிகானுக்கின் மகன் ரணாதீர்த்தும் "கேமர்ரூஜ்" இயக்கத்தைத் தடை செய்ய ஒப்புக் கொள்ளாத போதிலும் ஊசலாட்டமாகவே இருந்தனர்.

தமது நோக்கம் நிறைவேறாத ஆத்திரத்தில் கம்போடிய மக்கள் கட்சியின் முன்னாள் பிரதமரான சக்கரபாங் தலைமையிலான கும்பல், கடந்த ஜூலை 2-ம் நாளன்று ஓர் இரகசிய ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் இறங்கியது. துணை உள்துறை மந்திரி சின்சென், போலீசு தலைமை இயக்குநர் உள்ளிட்ட 200 பேர் கொண்ட இக்கும்பலின் சதித்திட்டம் மெதுவாகக் கசிந்து அம்பலமானதும், வேறுவழியின்றி அரசுப்படைகள் அவர்களைக் கைது செய்து, முன்னணியாளர்களை நாடு கடத்தித. இச்சதி நடவடிக்கையால், கம்போடிய மக்கள் கட்சியின் துரோகம் நாட்டு மக்களிடம் மீண்டும் அம்பலமாகியது. இருப்பினும், அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, "கேமர் ரூஜ்" போராளிகளால் மீண்டும் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயம் உள்ளதாக பீதியூட்டிய கம்போடிய மக்கள்



கட்சி, "ஃபன்சின்பெக்" கட்சிச் சரிகட்டி கடந்த ஜூலை 7-ம் தேதியன்று "கேமர்ரூஜ்" இயக்கத்துக்குத் தடை விதித்துள்ளது.

கடைசியில், ஏகாதிபத்தியவாதிகள் எதை எதிர்பார்த்தார்களோ, அது இப்போது நிறைவேறியுள்ளது. "ஃபன்சின்பெக்" கட்சி முடக்கி மீண்டும் கம்போடிய மக்கள் கட்சியே ஏகாதிபத்திய ஆதரவுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அபாயமே நீடிக்கிறது.

இப்போலி ஜனநாயகக் கேலிக்கூத்தை அம்பலப்படுத்தி வரும் "கேமர்ரூஜ்" போராளிகள், தாய்லாந்தை ஒட்டியுள்ள தமது தளப்பிரதேசப் பகுதியில், ஜூலை 11-ம் நாளன்று புதிய இடைக்கால அரசைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். "கேமர்ரூஜின்" தளபதியான தோழர் கியுசம்பன் இவ்வரசின் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார். "ஏகாதிபத்திய ஆதரவு சதிகார கும்பலின் ஆதிக்கத்தைத் தூக்கியெறியுங்கள்! நாட்டைப் புனரமைக்க ஐக்கியப்பட்டு கிளர்ந்தெழுங்கள்!" என கம்போடிய மக்களை அறைகூவியழைத்து, "கேமர் ரூஜ்" இயக்கத்தினர் தமது போராட்டப் பாதையில் முன்னேறி வருகின்றனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்